KALKI
.12.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



மேற்கு வங்கத்தின் ஜெ!





தோல்வியின் வெற்றி!

ஓரங்கட்டப் படுகிறாரா?

திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம், தமிழ்நாடு





- காசநோய் காற்றின் மூலம் பரவக்கூடியது.
- TB பரம்பரை வியாதியல்ல, முற்றிலும் குணப்படுத்தக் கூடியது.

  கீழ்க்கண்ட அறிகுறிகள் 3 வாரங்களுக்கு மேல் இருந்தால் இலவச பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு உடனே அரசாங்க மருத்துவமனையை அணுகவும்.
- இருமல்/மாலை நேரக் காய்ச்சல்/நெஞ்சுவலி/பசியின்மை/உடல் எடைக்குறைவு
- DOTS (குறுகிய கால தொடர் சிகிச்சை) முறையில், காசநோய்க்கு 6-8 மாதம் வரை சிகிச்சை எடுத்துக் கொண்டால் TB யிலிருந்து முற்றிலும் குணமடையலாம்.
- காசநோய் வராமல் தடுக்க பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் BCG போடுவீர்.
- கண்ட இடத்தில் எச்சில் துப்பாதீர்! காசநோயைப் பரப்பாதீர்.

காசநோயை வெல்வோம்! இன்றும், என்றும்!

பொது நலன் கருதி வெளியிடுவோர்:

மாநில காசநோய் தடுப்புச் சங்கம், சென்னை-600 006.

Visit us at: www.tn.gov.in / www.southindia.com

[illegible]/1557/[illegible]/2006

கல்கி
24.12.2006



புற்றுநோய்
இனி
வெற்றுநோய்!

72



0


வரம் தரும்
அம்பிகை!



20

பாட்டுக்குப் பட்டு
முக்கியமா?

ரஜினி
சொன்னது சரியா?



65



74

வாட்டுமோ வாட்?

கிறிஸ்துமஸ்

எளிமையின் உன்னத அடையாளம் இயேசு!

உலகெங்கும் 200 கோடி கிறிஸ்தவ மக்களும். இவர்களோடு உலகமும் விழாக் கோலம் பூணும் திருநாள் கிறிஸ்துமஸ்.

இயேசு பிறந்த காலத்தில் பாலஸ்தீனம் உரோமாபுரிப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. உண்மையில் தங்களுக்கு அரசியல் விடுதலை பெற்றுத் தரும் ஒரு தலைவனுக்காக யூத மக்கள் காத்திருந்தனர். இயேசு அப்படியான ஓர் மீட்பராக வருவார் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.



படம்: பொள்ளாச்சி சுந்தரம்



ஆனால் இயேசுவோ, அரசியலுக்கும் அப்பால் - எல்லா மனிதருக்கும் நேசம் என்ற உலக மீட்பின் செய்தியோடு பிறந்தார்.

இயேசு பிறந்த காலத்தில் உரோமாபுரிப் பேரரசராக இருந்தவர் செசர் அகஸ்டஸ். வரலாற்றின் முதன் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அவர் உத்தரவிட்டிருந்தார். இயேசுவின் தாய் தந்தையரான மேரியும் ஜோசப்பும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய சொந்த ஊருக்கு வந்திருந்தபோது தான் இயேசு பிறந்தார். கடும்பனி பொழிந்த நள்ளிரவில், சத்திரத்தில் கூட இடம் கிடைக்காததால், மாட்டுத் தொழுவம் ஒன்றிலே மேரி, இயேசு பாலகனை ஈன்றாள். உலகில் ஏழைகளாக, நிராகரிக்கப்பட்டவர்களாய் வாழும் கோடானுகோடி மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு கடவுள் நம்முடன் வாழ வந்தார் என்பதே கிறிஸ்து பிறப்பின் அடிப்படைச் செய்தியாகும்.

இயேசு மீட்பர் பிறந்து விட்ட

ம.ஜெகத் கஸ்பார், நிறுவனர்-தலைவர், குட்வி

செய்தியை வானவர் அணி பாடல் பாடி முதன் முதலாக அறிவித்தது. வெட்டவெளியில் படுத்துறங்கிக் கொண்டிருந்த ஆட்டிடையர்களுக்கு என பாரம்பரிய வரலாறு பதிவு செய்கிறது. எளியவர்களாகிய ஆட்டிடையர்களுக்கு அவரது பிறப்பின் செய்தி முதலில் அறிவிக்கப்பட்டதென்பது முக்கிய செய்தியாகும்.

இயேசு பிறந்தபோது வானில் நீள் நட்சத்திரம் தோன்றியதாகவும், அந்த வான் சுடர் வழிகாட்ட, மூன்று திசைகளிலிருந்து ஞானியர் மூவர் வந்து அவரை வணங்கினர் என்பதும் மரபு வழி வரும் நம்பிக்கை. மூவரில் ஒருவர் அன்றைய பெர்ஷியா - இன்றைய ஈரானிலிருந்தும், மற்றொருவர் அன்றைய பாபிலோனியா – இன்றைய ஈராக்கிலிருந்தும் – மற்றொருவர் ஆப்ரிக்காவிலிருந்தும் வந்தவர்கள். அவர்களது பெயர் கஸ்பார், பல்தசார், மெல்கியோர் என்பத மரபுவழிக் கதை.

கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்ட காலத்தின் அடையாளங்களாக நட்சத்திரம், குடில், கிறிஸ்துமஸ் தாத்தா ஆகியவை அமைந்துள்ளன. அதிலும் கிறிஸ்துமஸ் தாத்தா குழந்தைகளிடையே பிரபலம். கிறிஸ்துமஸ் தாத்தா மரபு, நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நிக்கொலாஸ் என்ற தாராள மனம்கொண்ட புனிதரை மையமாகக் கொண்டு கட்டமைப்பு செய்யப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்தப் புனித நிக்கொலாஸ் துருக்கி நாட்டைச் சேர்ந்தவர். தாராள உள்ளத்துடன் அன்பையும் பரிசுகளையும் பகிர்ந்து கொள்ளும் கனவு அடையாளமாகவும் குறியீடாகவும் கிறிஸ்துமஸ் தாத்தா - சான்டகிளாஸ் திகழ் கிறார்.

எளிமையின் உன்னத அடையாளமாக இயேசு பிறந்தார். ஆனால் அவரது பிறப்பு இன்று உலகின் மிகப்பெரிய வர்த்தக நிகழ்வு. ஆலயங்களைவிட வர்த்தக நிறுவனங்களே கிறிஸ்துவின் பிறப்பை அதிகமாக வெளிச்சமிடுகின்றன. இயேசு பிறந்த அன்றும் சரி இன்றும் சரி, இயேசு யாருக்காகப் பிறந்தாரோ - அந்த ஏழை எளிய மக்கள் வெளிச்ச வட்டங்களுக்கு வெளியேதான் நிற்கிறார்கள். உலகமய வர்த்தகத்துக்கு கிறிஸ்து பிறப்பு விழாவும் அடகு போய்விட்ட இக்காலத்தில், மீட்பரை எதிர்நோக்கும் மக்களின் எண்ணிக்கை, அன்றுபோல் இன்றும் கோடானு கோடியில்!

சந்திப்பு : **குட்டிக்கண்ணன்**

யூனிகேஷன்ஸ் தமிழ் மையம்

கல்கி
ஒவ்வொரு இதழும் உங்கள் வேள்வைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

சிங்கூர். மேற்கு வங்காளம், கொல்கத்தாவிலிருந்து சுமார் நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் ஹூப்ளி மாவட்டத்தில் உள்ள சிறிய ஊர். அதுதான் இன்றைக்கு இடதுசாரி கூட்டணி ஆளும் மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவுக்குப் பெரும் தலைவலியாக இருக்கிறது. காரணம் அங்குதான் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் டாட்டா நிறுவனம் தனது கார் தொழிற்சாலையைக் கட்டப் போகிறது. ஆளும் கட்சிக்கு எதிராக இந்த கார் தொழிற்சாலை திட்டத்தை ஸ்திரமாக எடுத்துக் கொண்டு புறப்பட்டிருக்கிறார் மேற்கு வங்கத்தின் ஜெயலலிதாவாகத் திகழும் மம்தா பானர்ஜி. அவரது திரிணமூல் காங்கிரஸ் கட்சியுடன் காங்கிரஸ், பா.ஜ.க. மட்டுமல்லாது மேற்கு வங்கத்தின் தீவிரவாத இயக்கங்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் கைகோத்து அரசாங்கத்தை மிரட்டிக்கொண்டு இருக்கின்றன.

செழிப்பான ஆயிரம் ஏக்கர் விளை நிலத்தை, விவசாயிகள் நலனைப் புறக்கணித்துவிட்டு டாட்டா கார் தொழிற்சாலைக்காக தாரை வார்த்துவிட்டார் புத்ததேவ் என்பது மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டு.

''சிங்கூர் விவசாயிகள் நிலத்தைப் பாதுகாக்க நான் என் உயிரையும் தரத் தயங்க மாட்டேன்'' என்று கூறி உண்ணாவிரதம் ஆரம்பித்து விட்டார் மம்தா. இந்தக் கட்டுரை எழுதப்படும் தருணத்தில் அவர் பத்தாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கிறார்.



மேற்கு வங்கத்தின் ஜெ!

சிங்கூர் விவசாயிகளின் குரல் டெல்லி வரை ஒலிக்கும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் மம்தா பானர்ஜி. வங்காளப் பத்திரிகை வட்டாரத்தில் அவருக்கு வங்காளத்தின் பெண் புலி என்றுதான் பெயர். அன்று ஜோதி பாகவுக்கு அடுத்து மக்கள் மத்தியில் பிரபலமாக விளங்கிய மே.வங்காள அரசியல் தலைவர் மம்தாதான். இன்று முதலமைச்சர் புத்ததேவுக்கு அடுத்த

இடத்தில் இருக்கிறார்.

ஐம்பத்தொரு வயதாகும் மம்தா பானர்ஜி, கொல்கத்தாவில் ஒரு மத்திய தரக் குடும்பத்தில் பிறந்தவர். அப்பா, புரொமிலேஸ்வர் பானர்ஜி, ஒரு கட்டட காண்ட்ராக்டர். அம்மா, காயத்ரி பானர்ஜி. மம்தாவுக்குப் பதினைந்து வயதானபோது அவருடைய அப்பா காலமானதால் குடும்பப் பொறுப்பு மம்தா மற்றும் அவரது அண்ணன் மீது விழுந்தது. அதிகாலையிலேயே எழுந்து, வீட்டு வேலைகளைச் செய்து விட்டு, தம் தம்பி, தங்கைகளைப் பள்ளிக்கூடத்துக்குத் தயார் பண்ணி அனுப்பி வைத்துவிட்டுத் தாமும் பளளிக்குக் கிளம்புவார். மத்தியானம் உணவு இடைவேளையின்போது வீட்டுக்கு வந்து, வீட்டு வேலைகள் செய்துவிட்டு, மறுபடியும் பள்ளிக்கூடத்துக்குச் செல்வார். மாலை வீடு திரும்பியதும் அவரது வயதை ஒத்த பிள்ளைகள் போல இவர் விளையாடப் போக முடியாது. வீட்டு வேலைகளுடன், தம் படிப்பையும் முடித்துக்கொண்டு அசதியுடன் படுக்கைக்குப் போவார் இளம் வயது மம்தா.

1970ஆம் ஆண்டு அசுதோஷ் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த சமயத்தில்தான் மம்தா பானர்ஜி இளைஞர் காங்கிரசில் சேர்ந்தார். அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் படிப்பதிலும் ஆர்வம் காட்டினார். பட்டப் படிப்பை முடித்த பிறகு ஆசிரியர் பயிற்சி பெற்றார். அதனைத் தொடர்ந்து முதுகலைப் பட்டம். பிறகு சட்டம் பயின்றார். மம்தா கல்லூரியில் படித்த காலகட்டத்தில் கல்லூரி வளாகங்களில் மார்க்சிஸ்ட்டுகளின் மாணவர் அணி பலம் பெற்று விளங்கியது. காங்கிரஸ் கட்சியின் மாணவர் அணியைச் சேர்ந்த மம்தா, சி.பி.எம்மின் மாணவர் அணியினரைத் துணிச்சலுடன் எதிர்த்தார்; அவர்களது செயல்களை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

இடதுசாரிகள் எதிர்ப்பு என்பது மம்தாவின் ரத்தத்தில் ஊறிப்போன ஒன்று! 1972 முதல் 77 வரை மே.வங்கத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த சமயம் மம்தா நினைத்திருந்தால், நல்லதொரு அரசாங்க வேலை வாங்கிக்கொண்டு, வாழ்க்கையில் சௌகரியமாக செட்டில் ஆகி இருக்கலாம். அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் மம்தாவுக்கு அந்த உதவியினைச் செய்யத் தயாராக இருந்தார்கள். ஆனால் மம்தாவுக்கு அதில்

ராஜஸ்தானில் மட்டுமே சாத்தியம்!

'வழக்கமாக தொழிலாளர்கள், விவசாயிகளுக்காக கம்யூனிஸ்ட்டுகள் தான் போராட்டம், தர்ணா நடத்துவார்கள். ஆனால், இப்போது மே.வங்கத்தில் நிலைமை தலைகீழ். மற்ற அரசியல் கட்சிகளும், பொதுநல அமைப்புகளும் சேர்ந்துகொண்டு, விவசாயிகளுக்கு ஆதரவாக, ஆளும் இடதுசாரிக் கூட்டணிக்கு எதிராகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. ஏன் இப்படிப்பட்ட நிலைமை?'' என்று தமிழக மார்க்சிஸ்ட் கட்சிப் பிரமுகரும், தொழிற்சங்கவாதியுமான டி.கே.ரங்கராஜனிடம் கேட்டோம்...

''மேற்கு வங்கத்தை காங்கிரஸ் ஆண்டபோது, அது தொழில்வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை. அதன் பிறகு இடதுசாரிக் கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், மாநில அரசு தொழில் வளத்தைப் பெருக்க எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மத்திய காங்கிரஸ் அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டது. மே. வங்கத்தைச் சேர்ந்த தொழிலதிபர்களை ஆசைகாட்டி ஹரியானா, பஞ்சாப், மகாராஷ்டிரா என்று இழுத்துச் சென்றது.

பர்மிட், கோட்டா, லைசென்ஸ் முறைகள் ஒழிந்த பிறகு, மே.வங்க அரசு தொழில் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அவற்றில் ஒன்றுதான் டாட்டா கார்



தொழிற்சாலை. அதற்குத் தேவைப்படும் ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்த அரசு மனிதாபிமான, நியாயமான அணுகுமுறையையே கையாளுகிறது. மகாராஷ்டிரத்தில் ரிலையன்ஸ் நிறுவனத்துக்காக நிலம் தேவைப்பட்ட போது, அந்த மாநில அரசு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு முப்பதாயிரம் ரூபாய் மட்டுமே நஷ்ட ஈடாக அளித்தது. ஆனால், இன்று மேற்கு வங்கத்தில் ஒரு போகம் விளையும் நிலங்களுக்கு எட்டு லட்சமும், இருபோகம் விளையும் நிலங்களுக்கு பன்னிரண்டு லட்சமும் நஷ்டஈடாக வழங்கப்படுகிறது. நிலத்தின் சொந்தக்காராகள் தவிர, குத்தகைதாரர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படுகிறது. நல்ல விலை தரப்படுவதால், மக்கள் தாங்களாகவே முன்வந்து நிலங்களைக் கொடுக்கிறார்கள். தொழிற்சாலைக்காக விளை நிலத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது என்றால், அது ராஜஸ்தானில் மட்டுமே சாத்தியம்.

மேலும் இது வெறும் கார் தொழிற்சாலை மட்டுமல்ல, ஆயிரத்துக்கும் அதிகமான உதிரிபாக உற்பத்தி நிறுவனங்களும் வரவுள்ளன. இதனால் வேலைவாய்ப்புகள் பெருகும். எனவே, டாட்டா தொழிற்சாலை, மே.வங்கத்தின் தொழில் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக அமையும்'' என்றார்.

விருப்பமில்லை. இடதுசாரிகளை எதிர்ப்பதும், அவர்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதுமே தம் இலட்சியம் என்று அவர் நிர்ணயித்துக்கொண்டார். அதற்காக பிற்காலத்தில் மம்தா பெரும் விலை கொடுக்க வேண்டியிருந்தது. காரணம், காங்கிரஸ் ஆட்சிபோய், இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைப் பிடித்தவுடன், அவருக்கு ஏராளமான தொல்லைகள் தந்தார்கள். அவரைக் கொல்லவும் முயற்சிகள் நடந்தன!

1984-ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் தெற்கு கொல்கத்தாவின் ஜாதவ்பூர் தொகுதியில் போட்டியிட்டார். மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சோம்நாத் சாட்டர்ஜியுடன் நடந்த நேரடி மோதலில், அவரை தோல்வி அடையச் செய்தார். அதன் பிறகு ஆறு தடவை பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு ஜெயித்திருக்கிறார். நரசிம்மராவ் அமைச்சரவையில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சராக இருந்திருக்கிறார்.

மாநிலத்தில் ஆளும்கட்சியான இடதுசாரிகளை மே.வங்க காங்கிரஸ் தலைவர்கள் எதிர்க்கத் துணியவில்லை.

இதனால் காங்கிரஸ் தலைவர்களுடன் மோதினார். விளைவு, 1997 டிசம்பரில் மம்தா காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். மறுநாளே, புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தார். 1998 ஜனவரி முதல் தேதி திரிணமூல் காங்கிரஸ் உதயமாயிற்று.

பாராளுமன்ற தேர்தலின்போது பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து இருபத்தொன்பது இடங்களில் போட்டியிட்டு ஏழு இடங்களில் வென்றார். மத்திய அமைச்சரவையில் ரயில்வே, நிலக்கரி மற்றும் சுரங்கத் துறைகளுக்குப் பொறுப்பு வகித்ததுடன், சில காலம் இலாகா இல்லாத மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

மேற்கு வங்க அரசியலில் மம்தா பானர்ஜி செம்படையினரை மிரட்டும் பெண் புலியா, இல்லை வெறும் காகிதப் புலியா என்று அறிந்துகொள்ள இந்த சிங்கூர் விவகாரம் ஓர் உரைகல்.

- எஸ்.சந்திரமௌலி

அட்டைப் படம் : **நன்றி - தினமலர்**



வந்து கதை சொன்னார். ஸ்ரேயா, பிரியங் காவைவிட என் ரோல் கொஞ்சம் வீக்கா னதுதான். ஆனாலும் நான் இரண்டு கார ணங்களுக்காக வெயிலை ஒப்புக்கிட்டேன். முதல் காரணம் இது டைரக்டர் ஷங்கர் சார் படம். அவரோட இயக்கத்துல நடிக்க வாய்ப்புக் கிடைக்காட்டியும் அவர் கம் பெனி படத்துலயாவது நடிப்போம்னு நடிச்சேன்.

அடுத்தது வெயில்ல வர்ற ஒரு ஜாலி யான ஸீன். பொதுவா நான் ஒரு வாயாடி. யாராவது என்கிட்டே 'ஹாய்'னு கை கொடுத்தால் போதும், அப்புறம் அவங்க ளைப் பேச விட மாட்டேன். தப்பிச்சுட்டு ஓடற அளவுக்குப் பேசிக்கிட்டே இருப்பேன். அப்படியொரு 'லொடலொட' பார்ட்டி நான். ஆனால் வெயில்ல என் கேரக்டர் பரம சாது. பொசுக்குன்னா அழுதுடுவேன். ஒரு ஸீன்ல நான் லோக்கல் டீவி. காம் பியரா இருப்பேன். 'உங்கள் சாய்ஸ்'ங்கிற நிகழ்ச்சியில நேயர்களெல்லாம் என்னைப் போட்டுக் கலாய்ப் பாங்க. ஒருத்தர் போன் பண்ணி 'தல' பாட்டுப் போடும்பார். 'தலன்னா யாரு'ன்னு கேட்பேன். பேசினவர் கடுப்பாயிடுவார். நான் மாட்டிக்கிட்டு முழிப் பேன். இந்த ஸீனை வசந்த

கண்ணை மூடிக்கிட்டுச் சம்மதம்...

பாலன் சொன்னபோது, விழுந்து விழுந்து சிரிச்சேன். இந்த ஸீன்ல நான் எப்படி நடிக்கப் போறேன்னு ஆர் வம் பீறிட, உடனே படத்தை ஒப்புக்கிட் டேன். வெயில்ல என் கேரக்டர் பெருசா இல்லாட்டியும் அருமையான படத்துல நடிச்ச பெருமை எப்போதும் இருக்கும்" என் றவர் இன்னமும் வெயில் பார்க்கவில்லை. "நைட்ஷோ போக மாட்டேன். ஒன்பது மணிக்கு மேலே தூங்கப் போகாட்டி கண் ணுல கருவளையம் வந்திடும். ஷூட்டிங் எல்லாம் முடிஞ்சு ஆற அமர பார்ப்பேன்" என்கிறார்.

வெயிலுக்கு அடுத்து, ஜெயம் ரவியுடன் 'தீபாவளி', பரத்தின் 'கூடல்நகர்' மற்றும் பாலாவின் 'நான் கடவுள்' போன்ற படங்

'நல்ல பாவத்தோடு நடிக்கிறாங்க' என்று ஆரம்பத்திலேயே பாவனா வுக்கு நல்ல பெயர். 'வெயில்' படத்தின் பாசிட்டிவான ரிசல்ட்டில் குஷியாக இருந்தவர், மூச்சு முட்டா மல் அதைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தார்.

"நான் 'சித்திரம் பேசுதடி' படத்துல நடிக்கும்போது டைரக்டர் வசந்த பாலன்



களில் நடித்து வருகிறார் பாவனா.

"நான் கதை கேட்காம ஒப்புக்கிட்டப் படம் 'நான் கடவுள்'. பாலா சார் படத்துல ஒன்னுகூட சோடை போனதில்லை. அவர் படங்களோட ஹீரோயின்களும் நடிப்புல வெளுத்து வாங்கினவங்க. அதனால கண்ணை மூடிக்கிட்டு சம்மதம் சொன்னேன். அதுல நான் குருட்டுப் பொண்ணா நடிக்கிறேன். கண்ணுல லென்ஸ் போட்டு நடிக்க கஷ்டமாத்தான் இருக்கு. ஆனா பாலா படமாச்சே" என்றவரிடம்,

"இளாமருக்குத் தடா போட்டிருக்கும் பாவனா 'தீபாவளி' படத்தில் அப்படி இப்படியாக நடித்திருக்கிறார் என்று செய்திகள் வருகிறதே..." என்றால் பாதிக் கேள்வியிலேயே பதில் சொல்லத் துடிக்கிறார். 'ஐயோ... ஜெயம் ரவிகூட எதுவும் இல்லை. அது ஒரு சின்ன ரொமாண்டிக் ஸீன். பெருசா சொல்ற அளவுக்கு அதுல எதுவுமே இல்லை" என்று படபடக்கிறார் பாவனா.

- செந்தில்

படங்கள்: **ஆண்டனி ஸ்ரீதர்**

ஸ்ரீ லலிதா

சுதா சேஷய்யன்

வரம் தரும் அம்பிகை!

தாயுமானவரின் உபாசனை

தாயுமானவர் திருச்சியில் இருந்த போது, அப்போது அங்கே அரசாட்சி செய்த அரசியாரிடம் மந்திரியாக இருந்தார். ஒரு தடவை அவரிடத்தில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார், அரசி.

சுவடிகள் மறைந்து காகிதம் வர ஆரம்பிக்கிற கட்டம். சுவடிகள் என்பவை பனை ஓலையை நீண்ட நாள் பதப்படுத்தி வைக்கிறபோது கிடைப்பவை. ஓலையை அவ்வப்போது பதப்படுத்தி, சிறிது காலம் உபயோகித்துத் தூக்கிப் போட்டுவிடுவது என்பது பதினாறாம் - பதினேழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட நிலை. அதற்கும் காகிதம் என்றுதான் அப்போது பெயர்.

கொஞ்ச நாட்களே தங்கக்கூடிய ஒரு சுவடியை தாயுமானவரிடம் கொடுத்தார்கள்.-முக்கியமான ராஜரீக விஷயம் - முடிவெடுக்க வேண்டிய ஒரு காரியம் அதிலே எழுதியிருக்கிறது.

அரசி அந்தக் காகிதத்தை அவரிடம் கொடுத்ததும், அது என்னவென்று கூடப் பார்க்காமல் கசக்கிப் போட்டு விட்டார் தாயுமானவர்.

எப்போதுமே பெரிய மனிதர்களைச் சுற்றிப் பொறாமைப்படுகிறவர்கள் இருப்பார்களே, தாயுமானவரைச் சுற்றியும் இருந்தார்கள். அப்படிப்பட்ட சிலர், அரசியிடம் ஓடோடிப் போய், நீங்கள் கொடுத்ததை 'அவர்' கசக்கிப் போட்டு விட்டார் என்று புகார் சொன்னார்கள்.

அரசிக்குத் தாயுமானவர் மீது மதிப்பு இருந்தது. 'அப்படிக் கசக்கிப் போடக் கூடியவர் இல்லையே' என்று அவர் உணர்ந்தார். தாயுமானவர் மீது விசாரணை நடத்தினார்கள்.


அன்று சாயந்திரம் திருவானைக்காவிலிருந்து வந்தவர்கள் சொன்னார்கள்: திருவானைக்காவில் அம்பாள் சன்னிதியில் விளக்கிலிருந்து தீப்பொறி பட்டு நெருப்பு பற்றிக்கொள்ள இருந்தது-அம்பாளுடைய திருப்பாவாடை மீது. அந்தச் சமயத்தில் யாரோ அதைச் சட்டென்று கசக்கியதைப் போல் அந்த நெருப்பு அணைந்து போயிற்று.

இன்றைக்கு வேண்டுமானால் நாம் திருச்சியும் திருவானைக்காவும் பக்கத்துப் பக்கத்தில் இருப்பதாக நினைக்கலாம். தாயுமானவர் காலத்தில் நடந்து போனால் எத்தனையோ நாழி ஆகும். ஆனால் திருச்சியில் இருக்கிறபோதே திருவானைக்காவில் இந்த மாதிரி அம்பாள் (அகிலாண்டேசுவரி) சன்னிதியில் இப்படி நடக்கிறது என்பது ஞானக் கண்ணில் தெரிந்ததனால்தான் அவர் கசக்கிப் போட்டிருக்கிறார் அந்த தஸ்தாவேஜை.

அவ்வளவு பெரிய அம்பாள் உபாஸகராக இருந்தவர் தாயுமானவர். பார்க்கிறவர்களையெல்லாம் அம்பாளாகவே பார்த்தவர். அப்படி அம்பாள் உபாஸகராக இருந்தவர்கள், காலம் காலமாக இந்தத் தேசத்தில் மிகப் பெரியவர்களாக, மகான்களாக, பெருமைக்குரியவர்களாக, பெருமிதத்துக்குரியவர்களாக இருந்திருக்கிறார்கள். அம்பாளை உபாஸிப்பதும் அம்பாள் அருகில் போய் அவளிடம் யாசகம் கேட்பதும் இந்த நாட்டின் மரபு.

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம் என்று பாரதியார் சொன்னதை மேலோட்டமாகப் பார்த்தால் லௌகீகத்துக்

14


ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை,
திருக்கருகாவூர்

குச் சொன்ன மாதிரி தோன்றும். ஆனால், அது லௌகீகத்துக்குச் சொன்னது அல்ல. நூறு ரூபாய் கேட்டால் அம்பாள் ஆயிரம் ரூபாய் கொடுப்பாள் என்பது அல்ல அது! அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்-அவர் சொல்கிற வரங்கள் லௌகீக-உலகியல் வரங்கள்



அல்ல. அம்பாள் கொடுக்கிற 'அதிக' வரம் என்பது நம்முடைய தன்மாத்திரைகளை யெல்லாம் தன்னுடைய திருக்கரங்களில் தாங்கும் வரம்!

தன்மாத்ரைகள்

பஞ்சதன்மாத்ர ஸாயகா்வாக அவள் நம் தன்மாத்திரைகளைத் தாங்குகிறவள்; நமது புலன்களைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கக்கூடியவள் என்று பார்த்தோம்.

புலன்-பொறி இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதே மாதிரி தன்மாத்திரை என்று சொல்கிறபோது 'இந்த்ரியம்' என்று குறிப்பிடுவதிலிருந்து கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. இந்த்ரியம் என்பதற்கு, தமிழில் 'பொறி' என்று அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம்.

கண் என்று சொன்னால் அது பொறி; புலன் என்று அதைச் சொல்ல முடியாது. பொறி என்றால் அது ஒரு கருவி - இன்ஸ்ட்ருமெண்ட் என்று ஆங்கிலத்தில் சொல்வது. கண்-பார்க்கக்கூடிய கருவி. காது - கேட்கக்கூடிய கருவி. பொறிகள் என்று சொன்னால் புலன்களைத் தரக் கூடிய கருவிகள். இந்த்ரியம் என்று

நூறு ரூபாய் கேட்டால் அம்பாள் ஆயிரம் ரூபாய் கொடுப்பாள் என்பது அல்ல அது!

சொல்கிற போது அது கருவிதான். ஆனால் கண் என்ன பண்ணு கிறது? பார்க்கக்கூடிய சக்தி அதற்கு இருப்பதனாலே, பார்க்கக்கூடிய விஷயத் தைப் பற்றிய செய்தியை அது அனுப்பு கிறது.

தன்மாத்திரை என்பது ஐந்து பொறி களால் கிடைக்கக்கூடிய தகவல்கள்; பொறி என்பதற்கும் புலன் என்பதற்கும் இலேசான வித்தியாசம் என்னவென்றால், ஒரு கருவி பொறி; அதன் மூலம் கிடைக் கும் விஷயத்தை உணர்வது புலன்.

ஆக, அம்பாள் தன்மாத்திரைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள் என்றால், வெறுமே கண்ணை வைத்துக்

கொண்டோ, வெறுமே மூக்கையோ அல்லது நமது காதையோ அவள் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று அர்த்தம் இல்லை! இந்த ஐந்து பொறிகளும் எதைத் தருகின்றனவோ, எந்தத் தகவல்களைக் கொடுக்கின்றனவோ அந்தத் தகவல்களே அம்பாளிடம் இருக்கின்றன என்றால், சரியான தகவல்களை நெறிப்படுத்தக்கூடிய தன்மையைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவள். அதனால்தான் அவள் பஞ்சதன்மாத்ர ஸாயகா.

அம்பாளுடைய ஸ்வரூப வர்ணனையில் தொடங்கி, ஸஹஸ்ரநாமமானது, அம்பாள் எங்கேயெல்லாம் வீற்றிருக்கிறாள் என்பதாகத் தொடரும்.

அறுபத்து நாலு வர்ணனைகள்

ஸ்வரூப வர்ணனையானது கிட்டத்தட்ட 64 திருநாமங்கள். ரொம்ப அழகான ஒன்று அம்பாளுடைய திருநெற்றியை விவரிக்கக்கூடியது :

அஷ்டமி சந்திர விப்ராஜா

அஷ்டமி சந்திரன்! எவ்வளவு நுணுக்கமாக நம்முடைய மகான்கள் சிந்தித்தார்கள் என்பதற்கும் நம்முடைய பாரம்பரியம் எவ்வளவு நுணுக்கமான பாரம்பரியம் என்பதற்கும் இதை ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

சாதாரணமாக ஒரு பெண்ணினுடைய நெற்றி என்று வர்ணிக்கிறபோது - இப்போதைய காலத்து வர்ணனையும் சரி, ஒரு முந்நூறு நானூறு ஆண்டு காலத்துக்கு முந்தைய வர்ணனையானாலும் சரி, பிறை நெற்றி என்றுதான் வர்ணிப்பார்கள்.

பிறை சந்திரன் என்றால் எப்படி இருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்...

ஆசார்யர் பகவத் பாதர், சௌந்தர்ய லஹரியில் இந்த அஷ்டமி சந்திரன் என்பதற்கு ஒரு விளக்கம் கொடுப்பார். நேரடியாக அஷ்டமி சந்திரன் என்று சொல்லாமல் வேறுவிதமாகச் சொல்வார்...

(தொடரும்)



கல்கி



2006 டிசம்பர் 24
விய மார்கழி 9
மலர் : 65
இதழ் : 21

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- *பாரதியார்*


விண்வெளி வீராங்கனை!


இந்தியா - அமெரிக்கா ஆகிய இரு தேசங்களுக்கும் பெருமை சேர்த்திருக்கிறார் சுனிதா வில்லியம்ஸ். விண்வெளிப் பயணம் மேற்கொண்ட இரண்டாவது இந்தியப் பெண்மணி சுனிதா. அவர் அமெரிக்கப் பிரஜைதான் என்ற போதிலும் இந்திய வேர்களை உடையவர் என்பதில் நமக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் பெருகுகின்றன.

டிஸ்கவரி விண் கலத்தில் பயணம் செய்த ஏழு வெண்வெளி வீரர்களுமே வணக்கத்துக்குரியவர்கள்தான் என்ற போதிலும் சுனிதாவின் வீரமும் தியாகமும் நம் நெஞ்சைக் கூடுதலாக நனைக்கின்றன.

குறிப்பாக, கொலம்பியா விண்கலம் விண்ணில் சிதறி கல்பனா சாவ்லா உள்ளிட்ட குழுவினரை நாம் இழந்ததைத் தொடர்ந்து மூன்றாண்டு காலத்துக்குள் டிஸ்கவரி விண்கலம் புறப்பட்டிருக்கிறது என்கிறபோது, விபத்து குறித்த சந்தேகங்களைப் புறந்தள்ளிவிட்டு, உயிரைப் பணயம் வைத்துப் புறப்பட்டுள்ள டிஸ்கவரி குழுவினர் தீரர்கள்தான்.

டிஸ்கவரி விண்கலப் பயணத்தின் குறிக்கோள், விண்ணில் சுற்றிக் கொண்டிருக்கும் சர்வதேச விண் ஆராய்ச்சி ஓடத்தைச் (இன்டர்நேஷனல் ஸ்பேஸ் ஷட்டில்) சென்றடைவது. விண்ணில் சுற்றிவந்தபடி, பலவிதமான விண்வெளி ஆராய்ச்சிகளின் கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் இந்த ஓடத்தில் ஏற்கெனவே நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் தாமஸ் ரெய்டர் என்பவரைப்





பணியிலிருந்து விடுவித்துவிட்டு அவருடைய இடத்தில் தொடர்கிறார் சுனிதா வில்லியம்ஸ். ஆறு மாத காலம் அவர் விண்வெளியிலேயே வாழ்ந்து பணியாற்ற வேண்டும்!

இந்தப் பொறுப்பும் பணியும் சாமானியமானவை அல்ல. வேறு சில விஞ்ஞானிகளும் கூடவே இருந்தாலும், எடையற்ற நிலையில் ஆறு மாத காலம் மிதந்தபடி செயற்கை வாழ்வு வாழ்வதென்பது கடுமையான தவத்தைப் போன்ற செயல்தான். சுனிதா மற்றும் அவரது சகாக்களின் வெற்றிக்கும் பாதுகாப்புக்கும் பிரார்த்தனை செய்கிற அதே வேளையில், டிஸ்கவரி பயணத்தின் நோக்கமும் இறுதி இலக்கும் எத்தகையவை என்கிற கேள்வி நமக்குள் எழுகிறது.

என்னென்ன பரிசோதனைகள் ஸ்பேஸ் லேபில் எவ்வெப்போது செய்யப்பட விருக்கின்றன என்பனவெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனால், செய்யப்படும் பரிசோதனைகள் மனித குலத்தின் உய்வுக்கு உதவும் படிகளாக விளங்க வேண்டுமே என்கிற கவலை எழுகிறது.

இதுபோன்ற விண்வெளிப் பயணங்களாலும் விண்வெளியில் செலுத்தப்படும் செயற்கைக் கோள்கள் ஆராய்ச்சி ஓடங்கள் போன்றவற்றினாலும் மேலும் ஓர் அபாயம் வளர்ந்து வருகிறது - பயனீட்டுக் காலம் முடிந்து போன கலங்களும் விண்வெளியில் மனிதன் விட்டுத் திரும்பிய இதர பொருள்களும் அங்கே தங்கியும் மிதந்தும் சுழன்றும் பெரும் மாசு ஏற்படுத்தி வருகின்றன! 'ஸ்பேஸ் ஜங்க்' எனப்படும் இந்த மாசினால் எத்தகைய பின்விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதாக இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. 'ஏதேனும் ஒரு கட்டத்தில் விண் மாசுகள் மோதிக் கொண்டாலோ விண்கற்கள் அவற்றின் மீது மோதினாலோ என்ன நேரக் கூடும்?' என்பது அச்சுறுத்தும் கேள்வி.

'டிஸ்கவரி குழுவினர் விண் மாசுகளையும் கழிவுகளையும் விட்டுத் திரும்பவில்லை' என்று பெருமிதம் கொள்ள முடியுமாயின், பிரபஞ்ச ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வும் அதனை மதித்துத் தலை வணங்க வேண்டும் என்கிற பிரக்ஞையும் உலகம் முழுவதும் பெருகிப் பரவும். ○

வாரம் ஒரு பாசுரம்!

சுஜாதா



எதிர்மறைகள்!

தமிழ் மொழியின் பல வசதிகளையும் வார்த்தைகளையும் நாம் இன்று இழந்து விட்டோம். உலகத்தில் எல்லா சிறப்புகளையும் சூப்பர் என்கிற ஒரே வார்த்தையில் வருணிக்கும் அளவுக்குச் சோம்பேறிகளாகிவிட்டோம். ஆழ்வார்கள் காலத்தில் வார்த்தைகளை அழகாகப் பலவிதங்களில் பயன்படுத்தியுள்ளார்கள். அதை வியக்கவாவது செய்யலாம்.

உதாரணம், எதிர்மறைகள். புகழ்வோம் என்பதற்கு எதிர்மறை புகழ மாட்டோம்; வருவோம் - வரமாட்டோம்; செய்வோம் - செய்ய மாட்டோம் என்று 'மாட்டோம்' என்பதை மாட்டி விடுகிறோம். ஆழ்வார்கள் எதிர்மறைகளை நளினமாகச் சொன்னார்கள். 'புகழ்வோம்' என்பதற்கு எதிர்மறை 'புகழோம்'. 'பழிப்போம்' என்பதற்கு 'பழியோம்'. அதேபோல 'ல்' என்னும் விகுதியையும் எதிர்மறையாகப் பயன்படுத்த முடியும். உதாரணம் சீறு என்றால் கோபித்துக் கொள், சீறல் என்றால் கோபிக்காதே. என்ன ஒரு சௌகரியம் பாருங்கள். அதை இழந்திருக்கிறோம். இப்போது நம் மாழ்வாரின் பெரிய திருவந்தாதியில் உள்ள இந்த வெண்பாவைக் கவனிக்கலாம்.

"புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்
இகழ்வோம் மதிப்போம் மதியோம் -
இகழோம் மற்று
எங்கள் மால் செங்கண் மால் சீறல் நீ
தீவினையோம்
எங்கள் மால்கண்டாய் இவை"

(சீறல் - கோபிக்காதே)

திருமாலே! நாங்கள் உன்னைப் புகழ்வோம், புகழாமல் இருப்போம், பழிப்போம், பழிக்காமல் இருப்போம், கேலி செய்வோம், கேலி செய்ய மாட்டோம். கோபித்துக் கொள்ளாதே! பெருமான் நீ எங்கள் தெய்வமானதால் இந்தப் பாத்தியதைகளை எடுத்துக் கொள்கிறோம் என்கிறார்.

'நல்ல தமிழ்ச் சொற்களை இழந்ததற்காக திருமாலே எங்களைக் கோபிக்காதே' என்று இன்று வேண்டிக் கொள்வோம்.



(படிக்கலாம்)

வாழ்த்துப்பா!



தோல்வியின் வெற்றி!

(வெயில்-விமர்சனம்)

அது எப்படி ஷங்கர் சாருக்கு மட்டும் தரமான கதைகளும் இயக்குநர்களும் கண்ணுக்குத் தெரியறாங்களோ தெரியல... 'காதல்', 'இருபத்தி மூன்றாம் புலிகேசி' வரிசையில 'வெயிலும்' பிரமாதமான படமா வந்திருக்கு. ரெண்டு மனுஷங்களைப் பத்தின கதைய ரத்தமும் சதையுமா சொல்லியிருக்காரு டைரக்டர் வசந்தபாலன். படம் முழுக்க யதார்த்தம் கொடிகட்டிப் பறக்குது. 'வெயில்'னு டைட்டில் வச்சிட்டு மழையோட படத்தை ஆரம்பிக்கறதே அழகு.

பசுபதியோட நடிப்பு ஆர்வத்துக்கு ஓர் எல்லையே இல்லாம போச்சு, வாழ்ந்திருக்கார் மனுஷன். வீட்டை விட்டு ஓடிப்போனவன் எதிர்கொள்ற பிரச்னைகளை டைரக்டர் கையாண்ட விதமும், அதை அப்படியே முகத்துல ஏந்தி பசுபதி பந்தாடியிருக்கற அழகும் ஏ கிளாஸ். யார் அந்தப் புதுப் பொண்ணு தங்கம்? சத்தியமா 24 காரட். குண்டு கண்ணுல காதலைக் குழைச்சி அவங்க எடுத்து வீசும்போது, தியேட்டர்ல பிடிக்க ஏகப்பட்ட கைங்க நீளுது. பாவம், அவங்க முடிவு படம் முடிஞ்ச பிறகும் மனசை அறுக்குது.

தம்பிக்கு உதாரணமா திகழ்றார் பரத். காதலிகிட்ட பொங்கறதும், அண்ணன்கிட்ட உருகுறதும்... இதே மாதிரி செலக்ட் பண்ணி நடிங்கப்பு!

பாவனா பாவம்னா! மிரண்டு மிரண்டே நம்மள மிரள வைக்கறாங்க. ஸ்ரேயாவா அது? சுத்தமா அடையாளமே தெரியல. இந்தப் படம் இவங்களுக்கு நல்ல அடையாளத்தைத் தரும். இப்படி ஒவ்வொரு கேரக்டரைப் பத்தியும் சொல்லிக்கிட்டே போகலாம். அந்த அளவுக்கு வெயில்ல விஷயமிருக்கு. புது இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ், தான் ஏ.ஆர்.ரஹ்மான் வாரிசுன்னு நிரூபிச்சிட்டார். 'உருகுதே' உருக வைக்க, பின்னணி இசை, பிரமாதம். மதியோட கேமரா இளவயதுப் பருவங்களையும் மழை சண்டைக் காட்சிகளையும் நேர்த்தியாப் படம் பிடிச்சிருக்கு.

வசனங்களைக் குறைச்சு, காட்சி வழியாவே சொல்ல வந்ததை உணர்த்தியிருக்கற பாங்கு இதம். தப்புக்குத் தண்டனை தர்றது சரியான தீர்வாகாதுங்கறது அழுத்தமான பதிவு!

வாழ்க்கையில ஜெயிச்சவங்களையே காண்பிச்ச சினிமா, முதல் முறையா தோத்த ஒருத்தரைப் பத்தி சொல்லியிருக்கு. அந்த சோகம்கூட சுகமாத்தான் இருக்கு.

- லஜ்ஜாவதி

சவால்



ஆசிய விளையாட்டுப் போட்டியின் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியா சார்பாகப் பங்கேற்று, வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கும் தமிழக வீராங்கனை சாந்திக்கு, நான்கே வரிகளில் நறுக் கவிதை ஒன்று வடியுங்கள். அஞ்சலட்டையில் (ஓர் அட்டையில் ஒரு கவிதை) மட்டுமே எழுதி அனுப்பவும்.

கடைசி தேதி: **25.12.2006**

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

• பாப்லோ நெருடா



26.11.2006 இதழின் 'ஜாலியாக கண்டுபிடியுங்க' போட்டியின் சரியான விடை : பாப்லோ நெருடா. விடையுடன் கல்கி இதழ் பற்றி சிறப்பான கமெண்ட் எழுதி, தலா ரூ 250 பரிசு பெறும் எட்டு வாசகர்கள்.

நெருஞ்சியாய் நெஞ்சை
நெருடாமல்
குறிஞ்சியாய் நெஞ்சை வருடும்.
- தரங்கிணி, செகந்திராபாத்

வாரத்தின் ஏழுநாளில் ஞாயிறு
ஜாலி...
ஞாயிறில் தோன்றும் கல்கி நீ வாழி!
- எஸ். அபிராமி ஸ்ரீ, ஈரோடு

பத்திரிகை முழுவதும் நவரசம்
படித்தால் கிடைப்பது அனுபவம்!
- பாரதிமகள், கரூர்

கண்ணுக்குக் கண் மை அழகு
கல்கிக்கு கண்ணியமே அழகு!
- இ.அ.அருள்ராஜ், வயலிமிட்டா

பச்சப்பிள்ளைக்கும் பயமின்றி
படிக்கக் கொடுக்கலாம்!
- கல்யாணி பாலு, திருநெல்வேலி

உரித்த கோழிகளின்
உருவப்படங்கள் இல்லை!
உயரிய செய்திகள் தாங்கிடும்
'கல்கி'யே வாச முல்லை!
- என்.பி.சாமி, முபுதூர்

பல்கலை வளர்ப்பது கல்வி...
பல்சுவை அளிப்பது கல்கி!
- ஆதினமிளகி.வீரசிகாமணி, சங்கரன்கோயில்

ஒருமுறை படிச்சா போதும்...
எப்போதும் பிடிச்சுப்போகும்!
- ப. விஜயலட்சுமி, அறந்தாங்கி

கலந்துரையாடல்

பாட்டுக்குப் பட்டு



கர்னாடக சங்கீதக் கலைஞர்களுடைய உடை ஒப்பனையில் பளபளப்பும் ஜொலிஜொலிப்பும் கூடிக்கொண்டே வரும் போக்கு நல்லதா? விவாதிக்கின்றனர் கீதா ராஜா, காயத்ரி வெங்கட்ராகவன், சவிதா நரசிம்மன் (மூவரும் வாய்ப்பாட்டுக் கலைஞர்கள்), மிருதங்கக் கலைஞர் ஜே.வைத்தியநாதன், ரசிகர்கள் பிரதிநிதியாக பாலகிருஷ்ணன்:

பாலகிருஷ்ணன்: மூன்று தலைமுறைகளாக நானும் கச்சேரிகள் கேட்கிறேன். இன்றைக்குப் புதுவிதமாக யாரும் அலங்காரம் செய்துகொள்வதைப்போல் எனக்குத் தோன்றவில்லை. அன்றைக்கும் புடைவைதான் இன்றைக்கும் அதே புடைவை, நகை, பூதான்... ஆண்கள் மட்டும் கச்சம் வைத்து வேஷ்டி கட்டுவதற்குப் பதிலாக சுற்று வேஷ்டி கட்டிக் கொள்கிறார்கள் - அவ்வளவுதான்.

கீதா ராஜா: அதே உடைதான் என்றாலும் அதை அணியும் விதத்திலும் சரி, மேடையில் அமரும் விதத்திலும் சரி, இன்றைக்கு நிறைய மாற்றம்! நமக்கு முந்தைய தலைமுறை பெண் கலைஞர்கள் தலைப்பைப் போர்த்திக்கொண்டுதான் அமர்ந்தார்கள். அதில் ஓர் அடக்கமான அழகு இருந்தது. இன்றைக்கு அது இல்லை என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.



• பாலகிருஷ்ணன்

• காயத்ரி வெங்கட்ராகவன்

சவிதா நரசிம்மன்: அன்றைய கால கட்டத்தில் அப்படிப் புடைவை உடுத்துவதுதான் சமூக வழக்கமா இருந்தது. கலைஞர்கள் மட்டுமல்ல, பெரும்பாலும் எல்லோருமே அப்படித்தான் உடுத்தினார்கள். இன்றைக்குப் பெண்கள் கண்டுள்ள முன்னேற்றத்தின் அடையாளமாகப் போர்த்திக் கொள்வது போன்ற பழக்கங்கள் மாறிவிட்டன.

இதை நாம் குறையாகச் சொல்ல முடியாது. 'மேலும் ஆடை என்பது அவரவர் தனிப்பட்ட விருப்பப்படிதானே அமைய முடியும்... ஆனால்...

காயத்ரி வெங்கட்ராகவன்: ஆமாம் சவிதா! அந்த 'ஆனால்' இல்தான் எல்லாமே இருக்கு. அவரவர் விருப்பம்னாலும் மேடையில

ஏறும்போது நம் சொந்த விருப்பத்தை மட்டுமே கருதி செயல்பட முடியாது இல்லையா...? வர்ற ரசிகர்கள் ரம்மியமா உணரணும்.

ஜே.வைத்தியநாதன்: ஆமாம். நல்ல ரிச்சாக உடுத்தி, அழகாக நகைகள் போட்டுக்கொண்டு உட்கார்ந்தா கச்சேரி கேட்க வருகிறவர்களுக்கும் திருப்தியா இருக்கும். பத்து விரல்களிலும் மோதிரம்... நல்ல அட்டிகை... வைரம்...

காயத்ரி: அடக் கடவுளே! ரம்மியமா இருக்கணும்னுதான் நான் சொன்னேனேயொழிய ஆடம்பரமான்னு சொல்லலியே!

ஜே.வை: நீங்க விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ரசிகர்கள் அதைத்தான் விரும்புகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்துல ஆர்டிஸ்ட் எப்படி டிரெஸ் பண்ணிக் கொள்கிறார் என்று பார்க்கவே கச்சேரிக்குப் போகிறார்கள்.

பாலகிருஷ்ணன்: அப்படியெல்லாம் குடும்பம் குடும்பமாக ரசிகர்கள் வேடிக்கை பார்க்கப் போவதாக நான் நம்பவில்லை. ஒரு சிலர் நீங்கள் குறிப்பிடுகிற மாதிரி இருக்கலாம். ஆனால் சங்கீதக் கச்சேரிக்கு சங்கீதம் கேட்கத்தான் நாங்கள் போகிறோம். ஆண்கள் ஆடம்பரமாகவா நகை போட்டுக் கொள்ள முடியும்? அவர்கள் கச்சேரிக்கும்தான் நல்ல கூட்டம் வருகிறது.

சவிதா: மேலும், ரசிகர்கள் கேட்கிறார்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று எக்ஸ்கியூஸ் சொல்லி சங்கீதத்தில் சமரசங்கள் பண்ணிக்கறது எப்படி வழக்கமாகியிருக்கோ, அதேமாதிரி உடை விஷயத்திலயும் நம்மோட ஆடம்பர ஆசைக்கு ரசிகர்களைக் காரணமாச் சொல்ல ஆரம்பிக்கறோமோன்னு தோன்றுகிறது.

ஜே.வை: இவ்வளவு யோசனை எதுக்கு? மஹாலக்ஷ்மி மாதிரி

முக்கியமா?

* சவிதா நரசிம்மன்
* கீதா ராஜா
* ஜே.வைத்தியநாதன்



அலங்காரமா இருக்கிறதுல என்ன தப்பு?

காயத்ரி: அம்பாளுக்குத்தான் எல்லா நகையும் போட்டா அழகு; அது நமக்கில்லே.

சவிதா: மேலும் நம்ம சங்கீதத்தோட கோட்பாடு, இலக்கு எல்லாமே அழகுணர்ச்சியையும் ஆன்மபலத்தையும் நோக்கித்தான் இருக்கு. நம்ம தோற்றமும் அதையொட்டியே அந்தப் பண்புகளை மதிக்கற மாதிரி இருக்கணும். அது ரொம்ப முக்கியம்!

ஜே.வை: இதெல்லாம் சும்மா தத்துவம். பேசறதுக்கு நன்றாயிருக்கும்;







ஆனா நடைமுறைக்கு ஒத்து வராது. பளிச்சுன்னு ஆடியன்ஸ் எதிர்பார்க்கிற மாதிரி இல்லைன்னா அவர்கள் புறக்கணிப்பார்கள்.

கீதா: பெரிய அரங்கில் கடைசி வரிசையிலிருந்து பார்க்கிறவர்களுக்கும் நம்மைப் பளிச்சுன்னு தெரிய வேண்டாமா? அதற்காகக் கொஞ்சம் கனமான நகைகள், பளீரிடும் புடைவைன்னு அணிந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கு.

காயத்ரி: பாடகரோட சௌகரியம்னு ஒண்ணு இருக்கே. கனமான பட்டுப்புடைவையைக் கட்டிக்கொண்டு கோயில் கச்சேரியில் பாட எவ்வளவு சிரமம்! வியர்த்து சோர்ந்து போகும் தெரியுமா!

ஜே.வை: அதற்காக நீங்கள் சாதாரண புடைவையில் போனால் நீங்களும் ஏதோ சுவாமி தரிசனம் பண்ண வந்த பெண் என்று நினைப்பார்களே யொழிய...

சவிதா: அதுவாவது பரவாயில்லை! நாங்கள் சுவாமி தரிசனத்துக்கென்றோ கச்சேரி கேட்கவோ போனால்கூட பட்டும் பளபளப்புமாப் போகணும்னு ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

காயத்ரி: ஐயோ! ஆமாமாம்! காட்டன் புடைவை அல்லது சுடிதாரில் போனால் மஃப்டியில் வந்ததாகப் பத்திரிகையில் கமெண்ட் எழுதுகிறார்கள்!

கீதா: சரி... ஒரு விஷயம், இப்படி எல்லோருமே நம்ம தோற்றத்துக்கு முக்கியத்துவம் தர்றதுனால, ஒரு கலைஞர்

"பளிச்சுன்னு ஆடியன்ஸ் எதிர்பார்க்கிற மாதிரி இல்லைன்னா அவர்கள் புறக்கணிப்பார்கள்..."

வெற்றிகரமா வர்றதுக்கு அழகான, 'பளிச்' தோற்றமும் அலங்காரமும் முக்கியம்னு அர்த்தமா?

பாலகிருஷ்ணன்: அப்படியானால் கச்சேரி ஏற்பாடு செய்யும் சபாக்காரர்களும் அதை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவார்களே!

சவிதா: இது ரொம்ப அபாயகரமான போக்கு. அது மட்டுமில்லே; ஒரு சக்ஸஸ்ஃபுல் ஆர்டிஸ்ட் எப்படி உடுத்தி அலங்காரம் பண்ணிக்கிறார் என்கிறதைப் பார்த்து அதையே ரசிகர்கள் எல்லார்கிட்டேயும் எதிர்பார்க்கறதும், எல்லாக் கலைஞர்களும் பின்பற்ற ஆரம்பிக்கறதும் சரியாகுமா?

பாலகிருஷ்ணன்: இன்றைக்கு நிறைய குழந்தைக் கலைஞர்கள் பாட வருகிறார்கள். எல்லாருமே சவிதா சொல்ற மாதிரி சக்ஸஸ்ஃபுல் ஆர்டிஸ்டோட மினி மாடல் மாதிரிதான் டிரெஸ் பண்ணிக் கொள்கிறார்கள்.

காயத்ரி: இப்படியெல்லாம் ஒப்பனை, அலங்காரம் செய்துக்க கணிசமா நேரம் செலவிடணும்.

சவிதா: ஆமாம் ஆடம்பரத்தை மெய்ன்டெய்ன் பண்ண பணமும் நேரமும் நிறைய செலவிட்டாகணும்..

பாலகிருஷ்ணன்: அப்புறம் நீங்க அதுக்கும் சேர்த்துச் சம்பாதிக்கணும்; இல்லையா?

ஜே.வை: ஒரு சக்ஸஸ்ஃபுல் மியூசிஷியனா இருக்கணும்னா இதையெல்லாம் பண்ணத்தான் வேணும். சும்மா காட்டன் புடைவையைக் கட்டிக்கிட்டு வந்து பாடினால் உங்களுக்கு வாய்ப்பு வரது சீக்கிரமே நின்னு போயிடும். யூ வில் பி அவுட்!

(சவிதா, காயத்ரி சிரிக்கிறார்கள்)

சவிதா: நாம் எதை வெற்றின்னு நினைக்கிறோம்ங்கறதைப் பொருத்திருக்கு அது. இசையிலயும் வாழ்க்கையிலயும் என்னுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்காம இருக்கிறதுதான் எனக்கு வெற்றி. காட்டன் புடைவை உடுத்திக்கிட்டு கச்சேரி பண்ண எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

காயத்ரி: எனக்கும் சவிதாவைப் பார்த்து சில விஷயங்கள்ல கூடுதல் தைரியம் வந்திருக்கு.

பாலகிருஷ்ணன்: நீங்கள் விரும்பின படி உடுத்திக் கொள்ளுங்கள்; ஆட்சேபணையே இல்லை. ஆனால் பாட்டு மட்டும் நாங்க விரும்பிக் கேட்கறமாதிரி பாடுங்க போதும்! ஆண் கலைஞர்களுக்கு இந்தப் புடைவை, நகை பிராப்ளமெல்லாம் கிடையாது; அதனால் ஜே.வைத்யநாதன் தைரியமா பேசறார்.

கீதா: எப்படியிருந்தாலும் முந்தைய தலைமுறையோட அடக்கமான அழகை நாம் ஒரு முன்னுதாரணமாக் கொள்ளணும்னு நான் நினைக்கறேன். ஃபேஷன், டிரென்ட் எது மாறினாலும், தோற்றத்தில் பகட்டைவிட கௌரவம் முக்கியம். அதுவும் இந்தக் கலைக்கு அது ரொம்ப முக்கியம்ன்றதை மறக்காம இருப்போம்.

தொகுப்பு: **எஸ்.எஸ்.**
படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**

'பாட்டுக்குப் பட்டு' - இது குறித்து பட்டுப் புடைவை விளம்பரத்தில் தோன்றும் கர்நாடக இசைக் கலைஞர் சுதா ரகுநாதனைக் கேட்டபோது:

"எனக்குச் சங்கீதம்தான் முக்கியம். அதற்காகத்தான் ரசிகர்கள் கச்சேரிக்கு வருகிறார்கள். அதேநேரத்தில் இரண்டு, மூன்று மணி நேரம் உட்கார்ந்து கச்சேரி செய்கிறபோது நேர்த்தியாக உடையணிய வேண்டுமில்லையா? என் குரு எம்.எல்.வி.கூட கச்சேரிகளில் அற்புதமாகப் பட்டுப் புடைவை அணிந்து தம் ரசனையை வெளிப்படுத்துவார். பாட்டுக் கச்சேரிக்குப் பட்டுப் புடைவைதான் அவசியம் என்றில்லை. ஒரு வேங்கடகிரி, போச்சம்பள்ளி, பெங்கால் காட்டன் கூடக் கட்டிக் கொள்ளலாம். இன்று கலர், டிசைன் என்று ஏராளமாக வெரைட்டி வந்துவிட்டது. அவரவர்க்கு எது விருப்பமோ அதைக் கட்டிக் கொள்ளலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், விருந்தில் பிரதான உணவைப் போன்றது கச்சேரியில் பாட்டு. சூப் அல்லது ஐஸ்கிரீமைப் போலத்தான் பட்டு.

நான் புடைவை விளம்பரத்தில் தோன்றியதை எழுபது சதவீதம் பேர் பாராட்டினார்கள். பத்து சதவீதம் பேர் அவசியமா என்று கேட்டார்கள். மீதிப்பேர் அதை ஏற்கவில்லை."

- சி.எம்.



நேற்றைய காற்று

19 யுகபாரதி

கூந்தலில் சிறைபட்ட

கே.சி.அருணாசலம்... முற்போக்கு முகாம்களின் தலைமகனாக அறியப்பட்டவர். பல ஆண்டுகள் 'தாமரை' இதழில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். சொந்த ஊர் பொள்ளாச்சி. இவருடைய படைப்புகள் குறித்த என் ஆரம்ப கால பிரமிப்பு இப்போதும் குறையவில்லை. மக்கள் இலக்கியத்தின் மீது ஈடுபாடும் எதையும் சமூக நோக்கோடு பார்த்த இவருடைய பரிபூரணமும் எப்போதும் என்னை ஆட்கொள்ளும் விஷயங்கள்.

வல்லிகண்ணன் அவர்களை ஒருமுறை சந்திக்கப் போனபோது கே.சி.எஸ். அருணாசலம் மாதிரி திரைப்படத்திலும் உங்கள் பாடல்கள் நேர்த்தியாக அமைய வாழ்த்துக்கள் என்று கூறியது நினைவை முட்டுகிறது.

மல்லிகைத் தோட்டத்தைக் கடக்கிற போது நம்மைக் கேட்காமல், நம் அனுமதியில்லாமல் நம்முடைய மூக்கைத் துழாவும் நறுமணத்தைப் போன்றன கே.சி.எஸ். படைப்புகள். வாழ் நாட்களை அஞ்சல் அட்டைகளைப் போல் சுமந்து கொண்டு போய் அந்திம காலத்து முடிவில் ஆண்டவன் காலடியில் சமர்ப்பிக்க எண்ணிய அடியார்களைப் போல அல்லாமல்,

'சாவினுக் கஞ்சேன்
சாகேன் - இந்தச்
சடலம் எனக்கொரு
சட்டை!

சேவகனாகவே
இருப்பேன் - நான்
திரும்பவும் இவ்விதம்
பிறப்பேன்'

என்ற கே.சி.எஸ். அருணாசலத்தை வாசித்த பிறகு 'அடடே!' என நெஞ்சு நெகிழ்கிறது. மரணம் ஒருவரைக் கோழையாகவும், ஒருவரை ஏழையாகவும், மற்றவரை எதிர்கொள்ளும் வீரனாகவும் வைத்திருக்கும் வாழ்வை எள்ளலோடு உணர முடிந்தது. போர் சூழ்ந்த இவ்வுலகில் நம்மைத் தற்காத்துக் கொள்ளவும், நம்மைச் சார்ந்தவர்களைப் பாதுகாக்கவும் நாம் செய்யும் தந்திரோபாயங்களை எண்ணி, ஆயுதமும் கேடயமும் இல்லாது ஒரு சராசரி மனிதன் எப்படி வாழ்வான் என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில், இவை எல்லாவற்றைக் காட்டிலும் சிந்தனையே பெரிது என்கிறார் கே.சி.எஸ்.

'ஆயுதம் கேடயம் இல்லை
எனக்கு
அவற்றின் தேவையும் இல்லை.
தீயன சூழ்ந்திடும் போது
என் சிந்தனை
பாசறையாகும்!

திரைப்படத்துக்கு மிகச் சில பாடல்களே கே.சி.எஸ். அருணாசலம் எழுதியிருக்கிறார். பெரிய முதலீட்டில், பெரிய எதிர்பார்ப்பில், பெரிய, பெரிய பிரபலங்களால் தயாரிக்கப்படாத படங்களில் எழுதி இருந்தாலும் அப்பாடல்கள் தனித்துத் தெரிவன. எண்ணிக்கை குறைவென்றாலும் அப்பாடல்கள் என்றென்றும் போற்றத்தக்கன. சிந்தனைத் தெளிவை ஒரு வரியில் பெற விரும்பினால் அதற்கு கே.சி.எஸ். அருணாசலத்தின் படைப்புகள் உதவும். 'பாரதி, பாரதிதாசனின் கவிதைப் பண்புகளுக்கு நிகர்த்தவை கே.சி.எஸ். அருணாசலத்தின் கவிதைகளும்' என்ற நா.பா.வின் கருத்து சற்றும் மிகையற்ற

சொற்கள். பாரதி யுகக் கவிஞர்களின் வரிசையில் மிக முக்கியமான இடத்தை வகிப்பவர், 1961-ல் வெளிவந்த 'பாதை தெரியுது பார்' படத்தில் பாடலாசிரியராகவும் அறிமுகமானார்.

'சின்னச் சின்ன
மூக்குத்தியாம்
சிவப்புக் கல்லு
மூக்குத்தியாம்

கன்னிப் பெண்ணே
உன் ஒய்யாரம் கண்டு
கண்ணைச் சிமிட்டுற
மூக்குத்தியாம்'

என்று கே.சி.எஸ். எழுதிய பாடல் இத்தனை ஆண்டுகள் கழித்தும் மின்னிக் கொண்டிருப்பதற்கு அப்பாடலில் வரும்

'அள்ளிச் செருகிய
கொண்டையிலே - என்
ஆவிச் சிறையுண்டு
இருக்குதடி
துள்ளித் திரிகிற
ரெண்டு கண்ணு - அதைச்
சொல்லிச் சிரிக்குது
ஒண்ணுக் கொண்ணு.'

– இடக் கண்ணைப் பார்த்து வலக் கண்ணும், வலக் கண்ணைப் பார்த்து இடக் கண்ணும் வியக்கும் அழகில் என் ஆவிச் சிறைப்பட்டுக் கிடக்கிறது. எதில்

கதாநாயகிக்காக பாட்டெழுதாத கவிஞரா..? ஆச்சர்யம்தான்!

ஆவி!



உவமைகளே காரணம்!

ஒரு சிறந்த பாடலைக் சுட்ட முடிகிற நம்மால் அது சிறந்த பாடல் ஆனதற்கான காரணத்தைச் சுட்ட முடியாது. பாடலா, இசையா, பாடகரா, காட்சியமைப்பா, கதையா என்று கண்டறிவது இயலாத காரியம். இத்தனைக் கேள்விகளுக்கும் மேலே, கேட்பவரின் ரசனையே அப்பாடல் சிறப்பானதற்குக் காரணம் என்பது என் சௌகர்யம்.

தெரியுமா? உனது கூந்தலில் என்கிறார். 'மூக்குத்தி'ப் பாடலை வரிக்கு வரிக்கு இப்படி வியக்கத் தோன்றும். கிராமிய மணத்தைப் பலரும் தமது பல பாடல்களில் அள்ளித் தெளித்திருக்கிறார்கள். ஆனால், கே.சி.எஸ். அருணாசலத்தின் கற்பனை மக்கள்மயமானது என்பதற்கு அதே பாடலில் ஓர் இடம்:

'கழுத்தைச் சுத்தியோர்
அட்டியலாம் - உன்
கட்டழகே ஒரு



"உங்க புது மானேஜர் எப்படி?"

"மானேஜர் என்ற பந்தாவே இல்லாமல் எங்களுடன் சேர்ந்து ஹாலில்தான் தூங்குகிறார்!"

- லீலாஜி

பட்டியலாம்.
உழைச்சுன் மேனி
கருத்திருக்கும் - பேச்சு
ஒவ்வொன்றும் தேனாய்
இனித்திருக்கும்.'

'உழைச்சுன் மேனி கருத்திருக்கும்' என்ற வரி கதாநாயகிக்காக எழுதப்பட்டதாக நிச்சயமிருக்காது. ஏனெனில், சினிமா கதாநாயகி பாட்டி வேடத்தில் நடித்தாலும் கழுத்துச் சுருக்கம் காணப்படுவதில்லை; கன்னக் கதுப்புகள் தொங்குவதில்லை. உழைத்துக் கருத்த மேனியைப் பாடலில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு கே.சி.எஸ். அருணாசலம் பொதுவுடைமைப் படைப்பாளியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டதே காரணம் எனலாமா? வெட்கத்தில் கன்னம் சிவப்பதை அழகு பொருந்திய முகத்தைக் கண்டு மூக்குத்தி மேலும் ஜொலித்ததாகக் கற்பனை செய்யும் கவிஞர், வியர்வை வாடை வீசும் பாட்டாளி வர்க்கத்தின் மேனியைப் பார்த்த செம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

புதுக்கவிதையின் தொடக்க காலத்தில் தொ.மு.சி. ரகுநாதன், இன்னபிற கவிஞர்கள் 'புதுக் கவிதை எதுக்கும் லாயக்கற்றது' என ஹாஸ்யம் செய்து எழுதியபோது அதை ஆமோதிக்கும் அணியில்தான் கே.சி.எஸ். அருணாசலமும் இருந்தார். 'மரபுக் கவிதைகளே கவிதைகள், மற்றவை உரைநடையே. உரைநடையில் சில கவிதைத் தன்மைகள் அமையலாமே ஒழிய ஒருபோதும் அவை கவிதைகள் ஆகா!' என வாதிட்டவர் கூட. ஆனால், எது மக்கள் கவிதையென்று புதுக்கவிதைப் புரட்சியாளர்கள் சாதிக்க எழுதிக் காட்டினார்களோ, அதையே மரபுக் கவிதையிலும் இவர்கள் எழுதிக் காட்டினார்கள்.

'இட்டிலியே! ஏனிளைத்தாய்?' என்றொரு கவிதை.

'வட்டில் என்னும் குளந்தனிலே
வாத்துக் கோழி போல் மிதந்த
இட்டிலியே
ஏனிளைத்துப் போனாய் – நீ
எந்தப்பயல்
மீது காதல் ஆனாய்?'


- இட்டிலிக்குக் கூடவா கவிதை என்பதைப்போலப் படுகிற இக்கவிதையில் என்ன இருக்கிறது என்று சிலருக்குத் தோன்றலாம். தோன்றாதன பலவும் தோன்றுவதே கவிதையின் சிறப்பு. படைப்பாளி தன் ஆளுமையால் எதையும் படைப்பாக்கிக் காட்டுவதே புதுக்கவிதையின் நோக்கம்! அந்நோக்கத்தை மரபுக் கவிதையிலும் செய்ய முடியுமென்று பல கவிதைகளை கே.சி.எஸ். யாத்திருக்கிறார்.

1981-ல் வெளிவந்த 'சுடரும் சூறாவளியும்' என்ற படத்தில் 'மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனா?' என்றொரு பாடல். சொற்ப பாடல்களே யாயினும் நினைவில் நிற்கும் விதமாக

அமைந்ததற்காகக் காலத்துக்கு நன்றி சொல்லத் தோன்றுகிறது. பாட்டும் கவிதையுமே தன் முழு வாழ்வும் என்று எண்ணியிருந்த இவருடைய கவிதைத் தொகுப்பின் பெயர்: 'பாட்டு வராத குயில்.'

மனோரஞ்சிதம், நீதி, அமுதம், மாதமணி ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், சோவியத் லேண்ட், சோவியத் பலகணி, சோவியத் நாடு போன்ற இதழ்களிலும் தன் பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார். 'பலி' என்ற நாடகமும் 'பூர்வீகச் சொத்து' என்ற சிறுகதைத் தொகுதியும் வெளிவந்திருக்கின்றன.

கே.சி.எஸ்.அருணாச்சலம்



பொன்னைக்கொடு, பொருளைக் கொடு, புத்தியைக் கொடு, புகழைக் கொடு என்று ஆண்டவனிடம் கோரிக்கை வைப்பதற்காகவே கோயிலுக்குப் போகிறவர்கள் உண்டு. ஆனால், கவிஞர் இறைவனிடம் வைக்கிற கோரிக்கை என்ன?

'மாதத்துக் கோர்முறை
முனிசிபல் தேர்தலை
வந்து போகச் செய்
என் ஆண்டவனே!
எதுக் கிதுவென்பதை
அறியாயோ - நீ
என்பணக் கஷ்டத்தைப்
புரியாயோ

என்று 'வாக்காளர் புலம்பல்' கவிதையில் வடித்திருப்பார்.

தேர்தல் முறையும் தேர்தல் கலவரங்களும் காட்சிகளும் மக்களுக்கான வாழ்வாதாரங்களை மீட்க உதவவில்லையே என்கிற வருத்தம் அவருக்கு இருந்ததைப் போல எனக்கும் ஒரு வருத்தம், தான் கண்ட பொன்னுலகக் கனவைத் தாங்கிய அந்தக் கண்கள் மூடிக் கொண்டனவே என்று.

(காற்று வீசும்)

அனுபவம்

ஜே.எஸ்.ராகவன்

ஈசனின்

குளிரும் அப்போலோ காத் லேப். "மிஸ்டர் ராகவன்" என்றார், ஆஞ்சியோ செய்த கார்டியாலஜிஸ்ட் சத்தியமூர்த்தி. "உங்க ரத்தக் குழாய்கள்லே பல அடைப்புகள் இருக்கு. பைபாஸ்தான் பரிகாரம்."

"கத்தியின்றி, ரத்தமின்றி திருத்தம் செய்ய முடியாதா டாக்டர்?"

பைபாஸை பைபாஸ் செய்ய முடியாது என்று உறைக்கும்படி தலையை ஆட்டினார்.

காலம் காலமாக மார்கழிக் குளிரிலே கூட சூரியனுக்கு முன்னாலே எழுந்து ஒரு மணி நேரம் நடப்பவன். மாதம் ஒருமுறை கொழுப்பு, ரத்த அழுத்தம், சர்க்கரை லெவல்களை மேட்டூர், பூண்டி, புழலேரி லெவல் போலக் குறித்து வைத்துக் கழுகாகக் கண்காணிப்பவன். எனக்கா? ஈசனின் திருவிளையாடலாகத் தோன்றியது. அடைப்புகளின் மூல காரணம்? அடைப்புக் குறிகளுக்குள்: (ஜெனிடிக்).

ரகளை செய்யும் பையன்கள் நிறைந்த வகுப்பறையில் திடீரென்று நுழைந்த ஹெட்மாஸ்டர் கைக்கு அகப்பட்ட ஒழுங்கான மாணவனின் கன்னத்தில் பளாரென்று அறைந்த மாதிரி விதி என்னை இதயத்தில் அறைந்து விட்டது.

எக்கோகிராஃப் செய்த டாக்டர் சாந்தா சந்தோஷப்பட்டார். "உங்க இதயம் சரியா பம்ப் செய்யறதே. வால்வுகளும் ஒழுங்கா இருக்கே."

"வாட்டர் பம்ப்பிலே பிராப்ளம் இல்லை; சாவிடா இருக்கு டாக்டர். சப்ளை பண்ற குழாய்களிலேதான் அடைப்பு. கெட்ட கொலஸ்ட்ராலோட சகவாசம். சர்க்கரையோட சல்லாபம் வேற."


பல ஆயிரம் பைபாஸ்களைச் செய்த சர்ஜன் கிரிநாத், என் மார்புக் கூட்டின் எலும்புகளைப் பிளந்தார். இருதயம் ரன்னிங்கில் இருக்கும்போதே அதிலே ஓடும் சில குழாய்களுக்கு, சென்னை சிட்டியிலுள்ள டிராஃபிக் பிளாக்குகளை 'போடா வெண்ணெய்' என்று உதாசீனம் செய்து தாண்டிப் போவது மாதிரி மாற்றுப் பாதைகள் போட்டார்.

வெல்லப் பிள்ளையாரிலிருந்து பிய்த்து எடுத்த வெல்லத்தை, அதே பிள்ளையாருக்கு நைவேத்யம் செய்வதைபோல் என் கால்களிலிருந்து அறுவடை செய்த நீண்ட ரத்த நாளங்களை என் இதயத்துக்கே மாற்றுப் பாதை போட உபயோகித்து இருந்தார்.

பல மணி நேர மயக்கத்துக்குப் பிறகு நினைவு மங்கலாக வந்தது. மானிடனாக உருமாறிய ராட்சஸன் குனிந்து உடம்பைப் பார்த்துக் கொள்வதைப் போல நோட்டம் விட்டேன். பாதாதி கேசம் டியூபுகள், கதீட்டர், சுற்றிக் கருவிகள், திரைகள். இதயத் துடிப்பை அதிகரிக்கும் இள நர்ஸுகள்.

ஆஞ்சநேயர் தம் மார்பைப் பிளந்து காட்டினபோது உள்ளே ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி தெரிந்தாராம்! என் கேஸில் விநாயகர் தெரிந்தாரா என்று கிரிநாத்தைக் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். அவர் அடுத்த பைபாஸுக்குப் போய் விட்டார்.

வாழ்க்கையில் மிகுந்த கஷ்டத்தையும் சுகத்தையும் அனுபவித்த இவன், மிகுந்த வலியையும் பார்த்து விடட்டுமே என்ற நினைப்புடன் கடவுள் வலியைத் தாராளமாக வழங்கி இருந்தார். நான் முகமூடியை அணிந்து கொண்டேன். அதன் சிரிப்பைப் பார்த்து, 'சியர்ஃபுல் பேஷன்ட்' என்று டாக்டர் சீனிவாஸ் தட்டிக் கொடுத்தார்.



"இருதயம் ரன்னிங்கில் இருக்கும்போதே உள்ளே மாற்றுப் பாதை அமைக்கப்பட்டது!"



திருவிளையாடல்!

நர்ஸ் நீத்து வழிமொழிந்தாள்.

ஐசி.யூ.விலிருந்து பிரைவேட் ரூமுக்குக் குடிபெயர்ந்தேன். மார்பில் காங்கேயம் காளைக்குச் சூடுபோட்ட மாதிரி செங்குத்தாக சர்ஜரி வடு; இரண்டு கால்களிலும் முட்டிக்குக் கீழே முத்திய முருங்கைக்காய் வடிவில் ஆழ்ந்த கீறல்கள். மார்புக் கீறல் சீக்கிரம் ஆறிவிடும்; கால்களைத் தொங்கப் போட்டால் பாதம் செட்டி நாட்டு குழிப்பணியாரமாக வீங்கிவிடும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

ஏழாம் நாள் டிஸ்சார்ஜ். ஒரு பெரிய பிளாஸ்டிக் பையை முகூர்த்த பையைப் போல நர்ஸ் லாரா கொடுத்தார். உள்ளே டிஸ்சார்ஜ் சம்மரி, குருதி ரிப்போர்ட்டுகள், தடுக்கு போன்ற அகலமான எக்ஸ் ரேக்கள்.

வீட்டுக்கு வந்து பார்த்த குடும்ப டாக்டர் சீனிவாச கண்ணன், "யூ லுக் ஆல்ரைட். டிப்ரஷன் இல்லை" என்றார்.

"ஆஸ்பிட்டலில் இருக்கறச்சே டிப்ரஷன் இருந்தது டாக்டர்."

"டிப்ரஷனா? என்ன கதை? ஹ்யூமர் ரைட்டர் ஸார் நீங்க."

"வங்கக் கடலில் வந்ததைச் சொல்றேன்... அது சரி, மொத்தம் ஏழு மருந்துகள்தான். அதோட நான் ஒண்ணை சேத்துண்டேன். பரவாயில்லையா டாக்டர்?"

"நீங்களாகவேவா? கூடாதே. என்ன மருந்து அது?"

"சிரிப்பு, டாக்டர். அதை ஓவர் டோஸாகக் கொடுக்க இதோ பாருங்கோ" என்றேன். என்னைச் சுற்றி வுட்ஹவுஸ், தேவன், ரிச்சர்டு ஆர்மர், கல்கி, சாவி, பாக்கியம் ராமசாமி. திகட்டாமல் இருக்க தி.ஜானகிராமன். "இவங்களை மாதிரி சிரிப்பை மட்டும் இன்ஃபெக்ஷனாகத் தரும் விசிட்டர்கள் இருக்காங்களா?"

டாக்டர் எழுந்து நின்றார். "குட்." எல்லாமே கன்ட்ரோலில் இருக்கு. பா...பா... பாம்புன்னு பயப்படற மாதிரி ப...ப...ப... பைபாஸ்னு பயப்படாம, பூ...பூ...பூ... பைபாஸ்னு அதை ஊதித் தள்ளினது பெரிய விஷயம். வரேன்." ●

ஸ்போர்ட்ஸ்

'டக்கர்' விளையாட்டு!

வாயைப் பிளக்காமல் இந்த விளையாட்டைப் பார்க்கவே முடியாது!

கால்பந்தும் வாலிபாலும் காதலித்துத் திருமணம் செய்து, அதற்கு ஒரு குழந்தையும் பிறந்தால் எப்படி இருக்கும்? பார்ப்பவர்களையெல்லாம் பரவசப் படுத்தும் 'செபக் டக்ரா' விளையாட்டைப் போலத்தான் இருக்கும்.



சமீபத்தில் நடந்து முடிந்த தோஹா ஏஷியன் கேம்ஸில் செபக் டக்ராதான் ஏராளமான புது ரசிகர்களை அள்ளியது. அட, இந்த விளையாட்டில் அப்படி என்னதான் காந்த சக்தி ஒட்டியிருக்கிறது?

மார்ஷியல் ஆர்ட்ஸ் கலையை விளையாட்டு பாணியில் காண்பிக்கும் ஒரு விநோத புது விளையாட்டு இது. வாலிபால் ஆட்டத்தை நினைத்துக் கொள்ளுங்கள். அதன் கோட்டுக்குள் நின்று கொண்டு பந்தைக் காலாலும் தலையாலும் முட்டி இரு அணிகள் (ஒவ்வொன்றிலும் மூன்று பேர்) ஆடினால் அதுதான் 'டக்ரா' விளையாட்டு!

எதெதற்கோ புகழ்பெற்ற தாய்லாந்துதான் செபக் டக்ராவின் தாய்வீடு (தாய்லாந்து பள்ளி, கல்லூரிகளில் பி.டி. பீரியடில் கட்டாயம் மாணவர்கள் டக்ரா விளையாட்டை விளையாட வேண்டும்). 1990 முதல் தொடர்ந்து ஏஷியன் கேம்ஸில் இடம் பெறும் டக்ராவை இடைவிடாமல் டக்கராய் ஆடி தங்கத்தைத் தட்டி வருகிறவர்கள் இதே தாய்லாந்துக்காரர்கள்தான். இரண்டாவது இடத்தில் மலேசியா. மியான்மார், பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளும் டக்ராவில் தூள் கிளப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சரி, இந்தியா?

சீரியல்களைவிடவும் இந்திய விளையாட்டுத் துறையில்தான் நிறைய கண்ணீர்க் கதைகள் உண்டே! இந்தத் தடவை-அதுவும் கடைசி நிமிடத்தில்- கிடைத்த அனுமதியால்தான் இந்திய டக்ரா அணியால் தோஹா ஏசியன் கேம்ஸில் கலந்து கொள்ள முடிந்தது.

'சல்லிக்காசு தரமாட்டோம். உங்கள் செலவில் போவதென்றால் அரசுக்கு

எந்தப் பிரச்னையுமில்லை' என்று வீரர்கள் மீது தண்ணீர் தெளித்தபடிதான் அரசு அனுமதி வழங்கியது. வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மட்டும் இந்த விளையாட்டு ஏக பிரபலம். ஆனால் பாவம், மணிப்பூர் வாசிகளோ அன்றாடங்காய்ச்சிகள். அரசின் பாராமுகத்தைக் கண்டு கொதித்துப் போய்விட்டார்கள். "தலைக்கு முப்பதாயிரம் ரூபாய் இல்லாமல் தோஹாவுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது. இப்படி இந்திய ஹாக்கி அணி வீரர்களிடம் சொல்ல வேண்டியதுதானே!" என்று அவர்கள் குமுறினார்கள். இறுதியில் கடனை உடனை வாங்கி, போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள், பிற்பாடு பைசா பிரயோஜனமில்லாமல் நஷ்டத்தோடு நாடு திரும்பினார்கள்.

- பப்பி

"மார்ஷியல் ஆர்ட்ஸ் கலையை விளையாட்டு பாணியில் காண்பிக்கும் ஒரு விநோத விளையாட்டு"



ஒரு பக்கக் கதை

உண்டியலில் போடாத பணம்!

வெ.தமிழழகன்



சுதா அதிர்ந்தாள். எடுத்த பணத்தை உண்டியலில் போடாமல், திரும்பவும் பாக்கெட்டில் போட்டுக்கொள்கிறானே ஜெயராம்!?

ஒவ்வொரு பொங்கலின் முதல் தினமும் காளிப்பட்டி கந்தசுவாமி கோயிலுக்குப் போவது வழக்கம். மறுநாள் வீட்டில் படையல். இறந்துபோன பெரியவர்களுக்கான வழிபாடு. புது உடை, மஞ்சள், கரும்பு... என பூஜை அமர்க்களப்படும்.

சுவாமி கும்பிட்டுத் திரும்பி "இப்போ நாம எல்லோரும் ஒரு காரியம் பண்ணப் போறோம்" என்றாள் சுதா.

"என்ன அம்மா?" என்றனர் குழந்தைகள். ஜெயராம் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நாம ஒவ்வொருத்தரும் காசு சேர்த்து வைச்சோமில்லையா? அதை இப்போ நாம உண்டியல்ல போடப் போறோம்" என்றவள் மஞ்சள் துணியில் முடிந்து வைத்திருந்த பணத்தையெல்லாம் எடுத்து, முக மலர உண்டியலில் போட்டாள்.

அடுத்து குழந்தைகள் உமா, மகேஸ்வரன் இருவரும் உண்டியலில் காசு போட்டனர். அடுத்தது ஜெயராமின் முறை. பாக்கெட்டில் கைவிட்டான்; பணத்தை எடுத்தான். மூன்று நூறு ரூபாய்த் தாள்கள் இருந்தன. திரும்ப அதைப் பாக்கெட்டிலேயே வைத்துக்கொண்டான்.

சுதா அதிர்ந்தாள். "என்னங்க, என்னாச்சு உங்களுக்கு? தெய்வத்துக்குக் காணிக்கை செலுத்தாம போனா... தப்புங்க."

"நானும் அதுக்காகத்தான் வைச்சிருக்கேன் சுதா. வளர்த்து ஆளாக்கின தெய்வமான எங்க அம்மாவுக்கு வருஷத்துக்கு ஒருநாள் ஒரு புடைவைகூட எடுத்துத் தரலைன்னா பாவம் இல்லையா? உயிரோடு இருக்கப்ப கவனிக்காம இறந்த பிறகு படையல், பூஜைன்னு போட்டு பிரயோஜனமில்ல!" என்றான் ஜெயராம்.

சுதா மீண்டும் ஒருமுறை சுவாமி கும்பிட்டாள். ◯

சந்தை



முக அழகுக்கு மூலிகை!

'தடுக்கி விழுந்தால் ஒன்று' என ஏராளமான மூலிகைப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இருந்தாலும், 'கெம்ஃபேப் ஆல்கலீஸ்' நிறுவனத்தின் பிரிவுகளில் ஒன்றான 'டீம் யூபியோகேர்' மூலிகைப் பொருட்களைத் தயாரிப்பதில் முன்னணி வகிக்கிறது.

அழகு சாதனப் பொருட்கள் என்றாலே பின்னாளில் அது நமக்கு ஏற்படுத்தப் போகும் பிரச்னைகளைப் பற்றித்தான் நினைவு வரும். முகச் சுருக்கம், தோல் கருக்கம் அலர்ஜி என்ற நீண்ட பட்டியல் தான் நம் பயத்துக்குக் காரணமாக இருக்கிறது.

ஆனால் இதைப் போன்ற இரசாயன முறைப்படி அல்லாமல் முழுவதும் மூலிகைப் பொருட்களைக் கொண்டே அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்தளிக்கிறது 'டீம் யூபியோ கேர்!'

மாய்ஸ்சரைசிங் கிரீம், மல்டி பர்பஸ் ஜெல், கேர் ஃபேர்னஸ் ஆயில், கேர் ஃபேஷியல் ஜெல் போன்ற தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்குத் தந்துள்ளது 'டீம் யூபியோ கேர்'! வண்டலூரில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வரும் இந்நிறுவனம், தனது முதல் கிளையை, அண்ணா நகரில் துவங்கியுள்ளது. விரைவில் அடையாறு இந்திரா நகரில் மற்றொரு கிளை உதயமாகவுள்ளது.

டீம் பொருட்களில் பெரும்பாலானவை சோற்றுக் கற்றாழை மூலிகையால் உருவானவை. வைட்டமின்கள், என்சைம்கள் உட்பட எழுபத்தைந்துக்கும் மிகுதியான ஊட்டச்சத்துக்கள் உள்ள சோற்றுக் கற்றாழை ஆயுர்வேதத்தில் சிறப்பிடம் பெற்ற மூலிகை என்பது யாவரும் அறிந்ததே!

சோற்றுக் கற்றாழை லோஷன், சோற்றுக் கற்றாழை ஹேர் ஆயில் மற்றும் ஷாம்பூ, அழகுத்தைலம், பிரசவக் கோடுகளை நீக்கும் தைலம் எனப் பலவகையான தயாரிப்புகள் சோற்றுக் கற்றாழையை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

டீம் யூபியோ கேரின் இத்தகைய தயாரிப்புகளை வாடிக்கையாளர் வாங்குவதற்கு வசதியாக, இதன் கிளைகள் எல்லா இடங்களிலும் திறக்கப்படவுள்ளன என்பது கூடுதல் தகவல்!

- பாலசக்தி

VIP ஹெல்த்

நாதஸ்வரக் கலைஞர் எஸ்.காசிம்

ஷேக் சின்ன மௌலானா பேரன்



அறுபது

இசைக் கருவிகளிலேயே மிகவும் சிரமமான வாத்தியம் நாதஸ்வரம். பொதுவாகவே நாதஸ்வரக் கலைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், மனவலிமையுடனும் இருந்தால்தான் அவர்களால் சிறப்பாக வாசிக்க முடியும்.

சாதாரணப் பார்வையாளர்களுக்கு வேண்டுமானால், இந்தப் 'பீப்பீ' ஊதுகிறவர்கள் ஏதோ காற்றை ஊதித் தள்ளுகிறார்கள் என்று தோன்றலாம். நாதஸ்வரம் வாசிக்கும்போது ஒரு கலைஞனின் அடிவயிறு, நுரையீரல், தொண்டை, நாக்கு, உதடு, கைவிரல்கள் என்று உடலின் அத்தனை உறுப்புகளும் ஓர் இணைப்புச் சங்கிலி போல ஒன்றிணைந்து நன்றாக வேலை செய்தல் வேண்டும். அப்போதுதான் ஒரு நாதஸ்வரக் கலைஞனின் அடிவயிற்றிலிருந்து கிளம்புகிற காற்று, நுரையீரலை அடைந்து, அங்கிருந்து தொண்டை வழியாக வாய்ப் பகுதிக்கு வந்து, கன்னங்களும் உதடுகளும் அந்தக் காற்றினைக் கட்டுப்படுத்தி, தேவையான அளவில் நாதஸ்வரக் கருவியில் செலுத்தி, கைவிரல்களின் துணையோடு அதனை நல்ல இசையாக மாற்றித் தர முடியும்.

எங்களைப் போன்றோரின் ஆரோக்கியத்துக்கு எதிரிகள் சளி, இருமல் போன்றவை. இவை வராமல் இருக்க ஐஸ்கிரீம், ஐஸ்வாட்டர் மற்றும் எந்தக் குளிர்பானத்தையும் மனதால்கூட நினைக்காமல் இருக்க வேண்டும். மனது விரும்பினால்தானே, அதைச் சாப்பிட வேண்டும் என்ற உத்வேகம் தோன்றுகிறது. அந்த உத்வேகத்தைத் தவிர்த்தால், எந்தச் சேதமும் வராது. நான் இப்படித்தான் இருக்கிறேன்.

எப்போதும் காய்ச்சி ஆற வைத்த குடிநீரையே பருகுகிறேன். பழங்களைச் சாப்பிடும்போதுகூட எளிதில் சளிப் பிடிக்கிற பழவகைகளை மழை மற்றும் குளிர்காலங்களில் தவிர்த்து விடுகிறேன்.

புகை பிடிப்பதும், மது அருந்துவதும் யாருடைய ஆரோக்கியத்துக்கும் என்றும் நல்லதல்ல. இந்த விஷயங்கள்

ஒரு நாதஸ்வரக் கலைஞருக்குக் கூடவே கூடாது. ஆன்மாவை ஸ்ருதி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மூச்சுப் பயிற்சியும் தியானமும் அவசியம். காலை எழுந்தவுடன் அரை மணி நேரம் கட்டாயம் இவற்றைச் செய்கிறேன்.

நாதஸ்வரக் கலைஞர்களைக் கச்சேரிகளில் பார்க்கும்போது அவர்கள் மற்ற எல்லாரையும்விட நிமிர்ந்து, நேராக- சீராக உட்கார்ந்திருப்பார்கள். அவ்வாறு உட்கார்ந்தால்தான் முதுகுத் தண்டுவடத்தில் பாதிப்பு வராது.


நான் நடக்கும்போதே விரல்களுக்கும் பயிற்சி கொடுப்பேன். இந்தக் கலையில் விரல்கள்தானே மூலதனம்!

கச்சேரிக்குச் செல்வதற்கு முன்பு வெந்நீரில் உப்புப் போட்டு வாய் கொப்பளித்தல் மிக அவசியமானது. இது தொண்டை வலி, தொண்டை கரகரப்பு வராமல் இருக்க உதவும்.

''சினிமா புரொடியூசர் சீட்டு கொடுத்தனுப்பினாரே...! என்ன ராகம் பாடச் சொல்லியிருக்கார்.''

''படமெடுக்குறவர் இல்லையா...? புன்னாகவராளி பாடச் சொல்லியிருக்கிறார்.''

- அ.ஜெயேந்திரன்



விநாடி ஆரோக்யம்!

நாதஸ்வரக் கலையைக் கற்றுக் கொடுத்து அதனைச் சீராகவும், சிறப்பாகவும் வைத்திருக்க வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தவர் என் தாத்தா ஷேக் சின்ன மௌலானா.

அவருக்கு இசையில் வாரிசு இல்லை என்பதற்காகவே அவருடைய மகள் பீபிஜானின் மகன்களான என்னையும், என் சகோதரரையும் ஆந்திராவிலிருந்து அழைத்து வந்து ஸ்ரீரங்கத்தில் வைத்து இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லும் இந்த அற்புதக் கலையைக் கற்றுக் கொடுத்தார்.

பின்னை மாநகர் நாதஸ்வர சகோதரர்கள் தெட்சிணாமூர்த்தி - உத்திராபதி ஆகியோர் ஒருமுறை என்னிடம், "உங்கள் தாத்தா நாதஸ்வரம் வாசிக்கும்போது பல தடவை நாங்கள் கைக்கடிகாரத்தை வைத்துக்கொண்டு கவனித்திருக்கிறோம். ஒரு மூச்சுக்கும், இன்னொரு மூச்சுக்கும் இடையே அறுபது வினாடிகள் இருக்கும்" என்றார்கள். அப்படியென்றால் அவர் தம்முடைய ஆரோக்கியத்தை எப்படி மெயின்டெயின் செய்திருப்பார் என்று பாருங்கள்!

அவருடைய வழிகாட்டுதலின்படிதான் நான் வாழ்ந்து வருகிறேன். கலையோடு பயிற்சியையும் கற்றுக் கொடுத்து எனக்குக் கடவுளாகி விட்டார் என் குருநாதர்.

சந்திப்பு, படம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ராசிபலன்

தஞ்சை பரத்வாஜ்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: நல்ல யோகமான வாரம். தனம், குடும்பம், வாக்குவன்மை, கல்வி வளம் மேலோங்கும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். ஆரோக்கியம் பாதிக்கப்படாது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். குரு/சனி/ராகு/கேது வழிபாடு உசிதம்.

ரிஷபம்: மேன்மையான வாரம். பண வசதி பெருகும். கல்வி வளம் மேலோங்கும். தொழில்துறையில் அபிவிருத்தி இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். வீடு/மனை வாங்க ஏற்ற தருணம். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

மிதுனம்: தெய்வபலம் நிறைந்த வாரம். முயற்சி செய்யும் காரியம் பலிதமாகும். கல்வி வளம் மேலோங்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளால் மனசந்தோஷம் கிட்டும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். குரு வழிபாடு செய்து வருதல் நலம்.

கடகம்: அற்புதமான வாரம். கல்வி வளம் மேன்மை பெறும். நண்பர் உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வீடு/வாசல் வாங்க நல்ல தருணம். சத்ரு தொல்லை நீங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. வேலைப் பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். தொலை தூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: வீடு மாற்றம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். எதிர்ப்பு, தொல்லை விலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். சனி/ராகு/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கன்னி: வாக்கு வன்மை மேலோங்கும் வாரம். பண வரவு பெருகும். சுபநிகழ்ச்சி நடக்கும். ஆரோக்கியம் பாதிக்கப்படாது வீடு/மனை வாங்க நல்ல தருணம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

துலாம்: செல்வாக்கு மிகுந்த வாரம். முடிவு பெறாத காரியம் வெற்றி பெறும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். மன சலனம் விலகும். திருமணக்காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வெளிதேசத்துக்குச் செல்ல நேரிடும். ராகு/கேது/சனி வழிபாடு உத்தமம்.

விருச்சிகம்: மன உளைச்சல் விலகும் வாரம். சுப நிகழ்ச்சிகள் கைகூடும்.



17.12.2006 முதல் 23.12.2006 வரை

தூர தேச அழைப்பு கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். வீடு/மனை வாங்க ஏற்ற தருணம். ராகு/கேது/குருவை வழிபடுதல் உத்தமம்.

தனுசு: தெய்வபலம், ஆத்ம பலம் நிறைந்த வாரம். புண்ணிய தரிசனம் கிட்டும். வேலையில் உயர்வு கிட்டும். மனசலனம் தீரும். தூர தேச அழைப்பு வரும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சி ஏற்படும். திருமணத் தடை விலகும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பயனைத் தரும்.

மகரம்: சுமாரான வாரம். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. வீடு/மனை வாங்க ஏற்ற தருணம். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. திருமணக் காரியம் கைகூடும். எதிர்ப்பு, தொல்லை விலகும். வீடு மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேது/சனி வழக்கு நற்பலனைத் தரும்.

கும்பம்: எதிர்ப்பு, தொல்லை விலகும் வாரம். எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டும். சுபகாரியம் கைகூடும். பணக்கஷ்டம் விலகும். வராத நிலுவைகள் கைக்குக் கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வெளியூர் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். நாணயம் காப்பாற்றப்படும். தடை விலகித் திருமணம் கைகூடும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பயனைத் தரும்.

மீனம்: நல்ல யோகமான வாரம். சொத்துகள் சேரும். வீடு/மனை வாங்க தருணம். புதிய தொழில்முறையில் கைகூடும். வழக்கு வெற்றி அளிக்கும். தூரதேச அழைப்பு வந்து சேரும். சுப காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். கல்விவளம் மேலோங்கும். ஆஞ்சநேயரை வழிபடுதல் நலம் தரும். ○

பரத்வாஜ் பதில்கள்

என் மகளுக்கு நான்கு வருடங்களாக முயன்றும், நல்ல வரன் அமையவில்லை. திருமணம் எப்போது கைகூடும்? பரிகாரம் எதுவும் உண்டா?

- பி. சந்திரசேகரன், மதுரை

உங்கள் மகளுக்கு வெளிநாட்டில் வேலை செய்யும் பையன் அமைவான். நாகதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும். 2007-ல் திருமணம் நடக்கும். பையனுக்கு உடன்பிறப்பு ஒருவர் இருப்பார். இவர் பெற்றோரை விட்டு வெளிநாட்டில் வசிக்கும் ஜாதகர்.

எங்கள் வீட்டை விற்க இயலாதபடி சட்டச் சிக்கல் உள்ளது. விற்க இயலுமா?


- நரசிம்மமூர்த்தி, ஸ்ரீரங்கம்.

உங்கள் ஜாதகப்படி தற்போது சனி தசையில் சுக்ரபுத்தி நடக்கிறது. சனி தசை சுக்ரபுத்தி சூரியனுக்கு வரும் காலத்தில், இருக்கும் வீட்டை விற்று வேறு வாங்க நேரிடும். 2007-ல் உங்கள் ஆசை பூர்ணமாக நிறைவேறும்.

அக்கம் பக்கம்


நாட்டில் போலி பாஸ்போர்ட்களைக் கண்டுபிடித்துக் களைவதற்கு, பாஸ்போர்ட்களில் ஹைடெக் முறைகளைக் கையாள வெளியுறவு அமைச்சகம் முடிவு செய்துள்ளது. அதன்படி, இனி, பாஸ்போர்ட்டில் கைரேகையும் பதிவு செய்யப்பட இருக்கிறது.

கர்நாடகாவில் முன்னாள் பிரதமர் தேவகௌடாவுக்கும் கட்சி நிர்வாகக் குழுவுக்கும் லடாய்! மகன் முதலமைச்சராகத் தொடர்வதற்காக, கட்சிக் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டதாக கௌடா மீது குற்றச் சாட்டு எழுந்துள்ளது. 'முன்பு, தலைமைப் பதவியிலிருந்து சரத் யாதவை நீக்கிவிட்டு, கௌடாவை கட்சித் தலைவராக்கியதைப் போல இப்போது கௌடாவை நீக்கினால் என்ன?' என்று திட்டமிடுகிறார்களாம் நிர்வாகக் குழுவினர்!



சத்தமின்றி ஒரு சர்சார்ஜ்!

போட்டி போட்டுக் கொண்டு விமானக் கட்டணத்தைக் குறைத்த விமான நிறுவனங்கள், எரிபொருள் விலை உயர்வால், சப்தமில்லாமல் விமானக் கட்டணங்களை அதிகரித்து வருகின்றன. லேட்டஸ்டாக நூற்றைம்பது ரூபாய் கூடுதல் கட்டணம் விதித்துள்ளன. இதற்குப் பெயர் வான்வழி போக்குவரத்து நெரிசல் சர்சார்ஜாம்!



ஆந்திராவில் கரீம் நகரில், சந்தியா என்ற இளம் பெண், ஊரின் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மீது ஏறிக் கொண்டு, தாம் காதலிக்கும் இளைஞர் ஸ்ரீனிவாஸ், உடனே வந்து தம்மைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் ஆயிற்று என்று அடம்பிடித்தார். போலீஸ் வந்து கெஞ்சியும் சந்தியா கேட்கவில்லை. உடனே மாலையுடன் ஸ்ரீனிவாசை வரவழைத்து, தொட்டியின் மீது ஏற்றினார்கள் ஊர்மக்கள். மாலை மாற்றிக் கொண்ட ஸ்ரீனிவாஸ், சந்தியா இருவரும் கீழே இறங்கிவர, கீழே இருந்த போலீஸ், சந்தியாவைக் கைது செய்து, தற்கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து விட்டது!

- சி.எம்.

அருள்வாக்கு

தேக ஆரோக்யத்துக்கு...

தேக ஆரோக்யத்துக்கேயான அநேக யோகாஸனங்கள் இருக்கின்றன. இவற்றிலும் கொஞ்சம் ஜாக்ரதை தேவை தானென்றாலும் மற்ற யோக ஸாதனைகளைப் போல மூச்சுப் பயிற்சியில் கஷ்டமோ, ஆபத்துக்கான வாய்ப்போ, அவ்வளவு அதிகமாக இல்லை. சில காலமாக ஸ்கூல்களிலேயே இவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும் ஒரு பேச்சு அடிபடுகிறது. கையை, காலை, உடம்பை நுட்பமாக வளைத்துப் பண்ண வேண்டிய அப்யாஸத்தை, அத்தனை குழந்தைகளுக்கும் கவனமாகச் சொல்லிக் கொடுப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அதுவுமில்லாமல் யோகாஸனம் போடுவதற்கென்று ஒரு காலம் உண்டு. அப்போது வயிற்றிலே ஆகாரம் இருக்கக்கூடாது என்று விதி. இவற்றை மீறினால் ஆரோக்யத்துக்குப் பதில் அநாரோக்யம்தான் வரும். ஆகையால் அதற்கான கட்டுத்திட்டம் குலையாமல் கற்றுக் கொடுக்க முடியுமா என்று உறுதிப்படுத்திக்கொண்டு 'மாஸ்-ஸ்கேலி'ல் ஸ்கூல்களில் சொல்லிக் கொடுக்கலாம். நம்முடைய குழந்தைகள் நல்ல தேகதிடத்துடனிருப்பதற்காக எப்படியும் யோகாஸனத்தை விருத்திச் செய்யத்தான் வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்







நடுத்தோப்பில் உள்ள மரத்தடியில்
சுள்ளி சேகரிக்கிறாள் சிறுமி
ஆடுகளும் மாடுகளும் மேயும் மரத்தடியைவிட
கூச்சலிட்டுப் பிற சிறுமிகள் ஆடும் மரத்தடியைவிட
யாருமே இல்லாத மரத்தடி
அவளுக்குப் பிடித்திருக்கிறது.

என்றோ முறிந்துவிழுந்து
உலர்ந்திருக்கும் கிளையைக் கண்டதும்
ஒரு குதிரையென நினைத்து
ஆர்வத்துடன் தாவி அமர்கிறாள் சிறுமி
நீண்டிருக்கும் கொம்புகளைக்
கடிவாளமாகப் பற்றி
வேகவேகமாக ஓட்டுகிறாள்
குளம்புச் சத்தத்தை
அவள் நாக்கு எதிரொலிக்கிறது
ஆனந்தத்துடன் அவள் முகத்தை உரசி வீசுகிறது
எதிர்க்காற்று!

வானத்தைக் கிழித்து
வேகமாகப் பறக்கும் குதிரையின் மீது
மார்புறத் தழுவிப் படுத்துக் கொள்கிறாள்
யார் கண்ணிலும் படாத
மாய உலகத்துக்குப் போகச் சொல்லிக்
குதிரைக்கு உத்தரவிடுகிறாள்
எல்லாத் திசைகளிலும் பறக்கிறது
அவள் தலைமுடி.
உறக்கத்தில் மலர்ந்த கனவில்
இசையும் துள்ளலும்
சிரிப்பும் ஆட்டமுமாக விரிகிறது
அவள் காணவிரும்பிய மாய உலகம்!

கண்விழிக்கும்போது
அந்தி சரிந்திருப்பதைப் பார்க்கிறாள்.
வெட்கச் சிரிப்போடு கிளையைவிட்டு இறங்குகிறாள்
அதன் உலர்ந்த பட்டையைத் தொட்டு முத்தமிடுகிறாள்
அங்குமிங்கும் விழுந்துகிடக்கிற சுள்ளிகளை
அவசரமாக எடுத்தடுக்கிச் சுமை கட்டுகிறாள்
மாய உலகிலிருந்து
எடுத்துவந்த வெளிச்சத்தின் ஒளியில்
அவள் கண்கள் சுடர்கின்றன
தோப்பிலிருந்து வீட்டுக்குச் செல்லும் பாதையில்
அவள் கால்கள் நடக்கத் தொடங்குகின்றன.

பாவண்ணன்

ஒரு விளக்கு... ஓராயிரம் தீபங்கள்!

தொலைதூரக் குக்கிராமங்களில் குழந்தைகள் கல்வி பயிலும் வாய்ப்பின்றித் தவிப்பதற்கு மூன்று காரணங்கள். ஏழ்மை, கல்வி நிலையத்தை நெருங்க முடியாத தூர நிலை, சாதகமற்ற வாழ்க்கைச் சூழல். இவற்றை மாற்ற முனைந்து, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது, சுவாமி விவேகானந்தா கிராம வளர்ச்சி சங்கம். 'ஓராசிரியர் பள்ளி' - இதுதான் அவர்கள் செயல்படுத்தியுள்ள திட்டம்.



முதலில் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பிறகு அங்கு தகுதி வாய்ந்த நபர் ஒருவரைக் கண்டறிந்து, ஆசிரியர் பயிற்சியளிக்கிறார்கள். அந்த ஆசிரியரைக் கொண்டு குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுகிறார்கள். பள்ளிக்குச் செல்லவியலாத குழந்தைகள், பாதியில் பள்ளிப் படிப்பை நிறுத்திய குழந்தைகள் யாவரும் இந்த வகுப்பில் பயில முடியும்.

ஏற்கெனவே 540 ஓராசிரியர் பள்ளிகளை நடத்தி, ஆயிரக்கணக்கான குழந்தைகளின் வாழ்வில் ஒளிதீபம் ஏற்றிக் கொண்டிருக்கும் விவேகானந்தா கிராம வளர்ச்சி சங்கம், மேலும் 1500 பள்ளிகள் மூலம் 60,000 குழந்தைகளை அள்ளி அணைக்க முற்பட்டிருக்கிறது.

இதுவரை ஏழு மாவட்டங்களில் ஓராசிரியர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இனி, நீலகிரி, கோவை, நாகை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் இந்தப் பள்ளிகள் துவங்கப்படவுள்ளன.

ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், சுற்றுப்புறவியல் ஆகிய பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

அந்தந்தக் கிராமத்தின் வசதி வாய்ப்புக்கேற்ப சமுதாயக் கட்டடங்களிலும், வாய்ப்பில்லாத கிராமங்களில் திறந்தவெளி அரங்கிலும், வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களால் விரிவுபடுத்தி வைக்கப்பட்டுள்ள இத்திட்டத்துக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு இந்திய அரசு, 'வருமானவரிச் சட்டம் 35 ஏசி' பிரிவின்படி, 100 சதவிகித வரி விலக்கு அளித்துள்ளது.

"ஒரு மைல் பள்ளி தூரத்தை 0 - மைலாக்குவதே எங்கள் நோக்கம்" - என்று முழங்குகிறது விவேகானந்தா கிராம வளர்ச்சி சங்கம்.

நாளைய நம்பிக்கையில் ஓர் ஒளிக்கீற்று தென்படுகிறது.

- அருணாஸ்

"மருந்துச் சீட்டின் பின்புறத்தில் மருந்து எழுதறீங்களே, ஏன் டாக்டர்...!"

"முதுகு வலிக்கெல்லாம் இப்படித்தான்...!"

- ஜே. தனலட்சுமி



காதுல கரப்பான்பூச்சி!



"காதுல பல்லி போகற வரைக்கும் என்ன செஞ்சீங்க?"

"முதல்ல கரப்பான்பூச்சி போச்சு. அதைப் பிடிக்கத்தான் பல்லி போகுதுன்னு நெனைச்சேன், டாக்டர்."

- புதுவை. கிருஷ்ணன்

"ஹலோ... வாங்கின பணத்தை இன்னைக்குக் கொண்டு வந்து தர்றேன்னு சொன்னீங்க, ஏன் வரவே இல்லை?"

"எனக்கு 'மெட்ராஸ் ஐ'! இருக்கு; நீங்களே வந்து வாங்கிக்கிறீங்களா...?"

"ஹீ ஹீ... இப்போ என்ன அவசரம் பணத்துக்கு... நீங்க உடம்பைப் பாத்துக்குங்க..."

- சீர்காழி வி.ரேவதி



சிறுகதை

கிருஷ்ணா

கீறல்

பள்ளியின் மதிய உணவு இடைவேளை. நெய் மணமும், சாம்பார் மணமுமாய் வாசனை காற்றில் நிறைந்திருந்தது.

எல்.கே.ஜி., யு.கே.ஜி. குழந்தைகளுக்கு மட்டும் ஸ்பெஷல் அனுமதி. தங்களின் அம்மா கையால் ஊட்டி விடும் பாக்கியம். இளம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கொஞ்சியபடி, அன்பு கலந்து, உணவைக் குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

"தீபா, இன்னிக்கு மிஸ் புதுசா என்ன சொல்லிக் கொடுத்தாங்க?"

"ராமாயணம். ராமருக்கு மூன்று தம்பிகளாம்!" என்று மழலையில், சாதத்தை வாயில் வைத்துக் கொண்டு பேசினாள் தீபா.

இராமாயணத்தை அப்போதுதான் முதன் முதலாகக் கேட்பதைப் போல, ஊன்றிக் கவனித்து, பெருமை பொங்க, மகளுடைய மழலையை இரசித்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

பேசும்போது, தீபாவின் வாயிலிருந்து சாதப் பருக்கைகள், அவள் சட்டையில் விழவே, அதைத் தட்டி விட்டாள் வசந்தி.

"ஸ்ஸ்!" என்று முகத்தைச் சுருக்கினாள் தீபா.

"ஏண்டி?"

"கைபட்டதும் வலிக்குது."

"ஏன்?"

தீபா சட்டை பட்டனைத் திறந்து காண்பித்தாள்.

நெஞ்சகப் பகுதியில் ஓர் அங்குல நீளத்துக்கு, செவ, செவ எனக் கீறல்.

பதறிப் போனாள் வசந்தி. திருமணமாகி ஐந்து வருடங்கள் கழித்து, தவமிருந்து பெற்ற மகள்.

"எப்படி இது ஆச்சு?"

"அந்த கணேஷ் இல்லை, அவன் வந்து குண்டூசி இல்லை, அது கிழிச்சிருச்சு" என்று தீபா சொல்லவும், விருட்டெனக் கோபமாக எழுந்தாள்.

மகளை அழைத்துக் கொண்டு, ஆசிரியைகள் அறைக்குள் புயலென நுழைந்தாள்.

"என்ன, இப்படிப் பார்த்துக்கறீங்க- குழந்தைகளை?"

அதட்டலாக ஆரம்பித்த வசந்தியின் குரல், கரகரப்பாகத் தேய்ந்து, அழுகையில் முடிந்தது.

டிபன் பாக்சிலிருந்து, தோசையை விண்டு, ஒரு வாய் போட்டுக் கொண்டிருந்த கிளாஸ் டீச்சர், பயந்து போய் எழுந்து, அருகில் வந்தாள்.

"இதோ பாருங்க!"

தீபாவின் நெஞ்சில் இருந்த கீறலைக் காண்பித்தாள் வசந்தி.

"குண்டூசியினாலே யாரோ ஒரு பையன், கணேஷாம், கீறி விட்டிருக்கான். இன்னிக்கு இங்கே, நாளைக்குக் கண்ணுலேயே குத்திட்டான்னா, என்ன ஆகறது?"

படபடவெனப் பொரிந்தவளைச் சமாதானப்படுத்த முயன்றாள் டீச்சர்.

டீச்சரின் வார்த்தைகளில் சமாதானமாகவில்லை வசந்தி.



ஏன் இப்படிப் பேசறீங்க..? இவனும் குழந்தைதான்...

தீபாவின் மேலே கிறலை ஏற்படுத்திய கணேஷை அழைத்தாள் டீச்சர். கூடவே அவன் அம்மாவும் வந்தாள்.

''ஏண்டா தீபா மேலே குண்டூசியாலே கிறினே?''

டீச்சர் அதட்டிக் கேட்டதும், தன் குண்டுக் கண்களில் பயம் தெரிய, டீச்சரை நோக்கினான் கணேஷ்.

"மிஸ், கொடியை அவ சட்டையிலே... குண்டுசி...'' என்று திக்கித் திக்கிப் பேசினான்.

கண்களில் குளம் கட்டிவிட்டது கண்ணீர், அதற்குள்.

தன் மகனின் செயலால் அவமானப்பட்டுப் போன கணேஷின் அம்மா, அவனை இரண்டு அறை வைத்தாள்.

''ஏண்டா, இப்படி மானத்தை வாங்கேற?'' என்று கணேஷின் கன்னத்தைத் திருகினாள்.

டீச்சர் தடுத்தாள்.

"விடுங்க. வார்த்தையாலே சொல்லிக் கண்டிங்க; அடிக்காதீங்க."

வசந்தி குறுக்கிட்டாள்.


"இல்லை, டீச்சர். இந்த வயசுல, அடி விழுங்கற பயம் இருந்தால்தான் இப்படி ரவுடித்தனமாகப் பசங்க நடந்துக்க மாட்டாங்க."

அவளுடைய வார்த்தைகள் கணேஷின் அம்மாவைக் காயப்படுத்தி விட்டது.

"ஏன் இப்படிப் பேசறீங்க? இவனும் குழந்தைதான். வார்த்தைய அளந்து பேசுங்க."

வார்த்தைகள் தடிப்பதைக் கண்டு, டீச்சர், அவர்களை விலக்கி விட்டாள்.





"நம்ம பாடகர் பாடறப்போ கூட மனைவி ஞாபகமாவே இருப்பார் போல..."

"எப்படிச் சொல்றே?"

"சரி...சரி...சரி...னே ரொம்ப நேரமா பாடிக்கிட்டிருக்காரே..."

இருவரும் சமாதானமாகாமலே பிரிந்து சென்றனர்.

அடுத்த நாள் காலை.

"அம்மா இன்னிக்கு நான் 'மெரிட் ப்ரைஸ்' வாங்கறேன். சுதந்திர தினம். கொடியெல்லாம் ஏத்தி, சாக்லேட் கொடுப்பாங்களாம்!"

தீபா பேசுவதைக் கேட்டபடி, அவளுக்குப் பள்ளிச் சீருடையை அணிவித்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

"தீபாக்குட்டி இன்னிக்குப் பரிசு வாங்கப் போறதாக்கும்! நானும் வந்து ஸ்கூலில் கைதட்டப் போறேன்" என்று தீபாவின் அப்பா குழந்தையைக் கொஞ்சிப் பாராட்டினார்.

"அம்மா, இரு" என்று உள்ளே ஓடி, திரும்பி வந்தாள்.

அவள் கையில் தேசியக் கொடியும், குண்டூசியும்.

"அம்மா, எல்லோருக்கும் இதை நேத்தே டீச்சர் கொடுத்தாங்க. இன்னிக்கு வரும்போது சட்டையிலே குத்திட்டு வரணுமாம். குத்தி விடறியா?" என்று அம்மாவிடம் நீட்டினாள் கொடியை.

"தீபாக்குட்டிக்கு நான் குத்திவிடவா?"

"வேண்டாம்பா. கணேஷ் மாதிரி நீயும் திட்டு வாங்கிடுவே- அம்மாவிடம்" என்றதும் வசந்தி திடுக்கிட்டாள்.

"என்னடி சொல்றே?"

"ஆமாம்மா! பாவம் கணேஷ். என் ஃப்ரெண்டுமா அவன். அவன் என் சட்டையிலே கொடிய குத்தி விடறப்ப, அந்த சுரேஷ் இல்லை, அவன் வந்து பொத்துனு கணேஷ் மேலே விழுந்துட்டான். அதனாலே குண்டூசி என் மேலே கிறிடுச்சு. பாவம் கணேஷ், டீச்சர்கிட்டே திட்டு வாங்கிட்டான். அவன் அம்மா வேற அடிச்சுட்டாங்க. இன்னிக்கு அவன் என் கூட பேசுவானாம்மா?"

மகளுடைய கேள்வியால் திகைத்துப் போய் நின்றாள் வசந்தி. ●



அமரர் கல்கி



பொன் மயில் ஏறி வருவான் - ஐயன்
பன்னிரு கையால் தண்ணருள் சொரிவான்

செங்கதிர் வேலன் சிவனருள் பாலன்
மங்கை வள்ளி மணாளன்
பங்கய தாளன் தீன தயாளன்
(பொன்)

புன்னகை தன்னால் இன்னல்கள் தீர்ப்பான்
புன்மை இருள் கணம் மாய்ப்பான்
கன்னலின் இனிய தண்தமிழ் அளிப்பான்
(பொன்)



பொன் மயில்...



Gillette சூப்பர் BRAND

கில்லாடி

எஸ்.சந்திரமௌலி


காலையில் எழுந்தவுடன் சுகமாக ஷேவிங் செய்து கொள்ளும் அத்தனை பேரும் நன்றி சொல்ல வேண்டியது கிங் கேம்ப் கில்லெட் என்ற அமெரிக்கருக்குத்தான். இவர்தான் பாதுகாப்பான ஷேவிங்குக்கு உத்தரவாதம் அளிக்கும் சேஃப்டி ரேசரை உருவாக்கியவர்.

கில்லெட் பிறந்தது அமெரிக்காவின் விஸ்கான்சின் நகரத்தில்(1885). கில்லட்டுக்கு நாலு வயது இருக்கும்போது, அவரது பெற்றோர் சிகாகோவுக்கு இடம் பெயர்ந்தார்கள். அங்கே சில ஆண்டுகள் கழித்து ஒரு பெரும் தீ விபத்தில் எல்லாவற்றையும் இழந்துவிட, கில்லெட்டின் குடும்பம் நியூயார்க்குக்குக் குடிபெயர்ந்தது.

அங்கே கில்லெட்டின் அப்பா, காப்புரிமை பெற்றுத்தரும் ஏஜெண்ட் ஆனார். தினமும் வீட்டுக்கு வந்ததும் தன் மகன் கில்லெட்டிடம் இன்று என்ன புதுமையான பொருளின் காப்புரிமைக்கான விண்ணப்பம் வந்தது, அதன் சிறப்பு அம்சம் என்ன, வர்த்தக வாய்ப்பு எப்படி என்றெல்லாம் பேசுவார். இப்படி தினமும் புதுப்புதுப் பொருட்களைப் பற்றிக் கேள்விப்பட்டதால், கில்லெட்டுக்குத் தாமும் ஏதாவது புதுமையாக உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

தம் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், கில்லெட் விற்பனைப் பிரதிநிதி வேலைக்குச் சேர்ந்தார். ஆனாலும் அவரது மனம் புதிதாக எதைக் கண்டுபிடிக்கலாம் என்பது பற்றியே சிந்தித்தது.

நாற்பது வயதில், அமெரிக்காவின் முதலாளித்துவம் மீது கோபப்பட்டார். முதலாளித்துவத்தையும், பணக்காரர்களையும் எதிர்த்து 'தி ஹியூமன் டிரிஃப்ட்' என்று ஒரு புத்தகம் எழுதினார். சமத்துவம் கொண்ட உலகம் அமைய வேண்டும்; அப்போதுதான் சாமானிய மக்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று அதில் குறிப்பிட்டார். நியூயார்க் நகரை விட்டு விட்டு, பிறந்த ஊரான விஸ்கான்சினுக்கே போய்விட்டார்.



அங்கே, கிரவுன் கார்க் அண்ட் சீல் கம்பெனி என்ற நிறுவனத்தில் விற்பனையாளராகச் சேர்ந்தார். அந்த கம்பெனியின் முதலாளி பெயர் வில்லியம் பெயிண்டர். அவர்தான் பாட்டில்களுக்கான கார்க் மூடிகளைக் கண்டுபிடித்தவர். அவர் கில்லெட்டின் கிரியேட்டிவ் மூளையினைப் புரிந்துகொண்டார்.

ஒரு நாள் கில்லெட்டைக் கூப்பிட்டு, "உனக்கு சிந்திக்கும் திறமை இருக்கிறது; அதனைப் பயன்படுத்தி நீயும் எதையாவது கண்டுபிடி. நானும் உன்னைப் போலத்தான் ஆர்வமாக இருந்தேன்; சிந்தனை செய்தேன்; கார்க்கில் பாட்டில்களுக்கு மூடி தயாரித்து, இன்று, என் நிலைமை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று நீயே பார்க்கிறாய் இல்லையா?" என்று கூறி கில்லெட்டுக்கு உற்சாகமூட்டினார். கில்லெட்டுக்கு அதனை ஏற்கும் மனநிலை இல்லை.

"உங்களைப் போல வெற்றி பெற்றவர்கள், மற்றவர்ளுக்கு ஆலோசனைகள் சொல்வது மிகவும் சுலபமான காரியம்; ஆனால், புதிதாக, வர்த்தக ரீதியில் செல்லுபடியாகிற பொருளைக்



கில்லெட்!

கண்டுபிடிப்பது என்பது நடக்கிற காரியமா?" என்று விரக்தியுடன் பதில் சொன்னார்.

சில நாட்கள் கழித்து கில்லெட்டின் வாழ்க்கையில் அந்தத் திருப்புமுனை நிகழ்ந்தது. ஒரு நாள் கில்லெட் கண்ணாடி முன் அமர்ந்து ஷேவிங் செய்து கொண்டிருந்தார். அவர் பயன்படுத்திய ரேசர், முனை மழுங்கி இருந்ததால் சரியாக மழிக்கவில்லை. அத்துடன் மல்லுக்கு நின்ற தருணத்தில், 'இந்த ரேசரை மட்டும் அவ்வப்போது கூர்தீட்ட வேண்டிய அவசியம் இல்லாமல், முனை மழுங்கிப் போனால், அந்தப் பகுதியை அப்படியே தூக்கி எரிந்துவிட்டு, கூர்மையான பிளேடு பகுதியைப் பொருத்திக் கொள்ள முடிந்தால் எத்தனை சௌகரியமாக இருக்கும்' என்று நினைத்தார். அதுதான் இன்றைய நாகரிக ஷேவிங் ரேசருக்கு ஐடியா அரும்பிய தருணம்! ஆனால், கில்லெட் தன் ஐடியாவைச் செயல்படுத்துவதில் சந்தித்த சவால்கள் ஏராளம்.

பிரபலமான மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜிக்குச் சென்றார் கில்லெட். அங்கிருந்த உலோகவியல் நிபுணர்களிடம் தம் ஐடியாவைச் சொல்லி, செயல் உருவம் கொடுப்பதில் உதவி கேட்டார். ஆனால் அவர்கள் சிரித்தார்கள். அதைப் போன்ற ஒரு ரேசர் கற்பனையில் மட்டுமே சாத்தியம். எங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்' என்று சொல்லி விட்டார்கள். ஆனால் தமது கற்பனை ரேசருக்கு உயிரூட்ட முடியும் என்று நம்பினார் கில்லெட். அதன் பின்



டூப்ளிகேட் கம்பெனிகளை விலை பேசி வாங்கிச் சமாளித்தார்!

பலரைச் சந்தித்து உதவி கேட்டார்.

கடைசியாக அவர் மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் படித்தவரான வில்லியம் எமரி நிக்கர்சன் என்பவரைச் சந்தித்துப் பேசினார். அவர் கில்லெட்டுடன் இணைந்து செயல்பட ஒப்புக் கொண்டார். கில்லெட்டும், நிக்கர்சனும் ஐந்தாண்டுகள் தங்கள் சொத்தில் பெரும்பகுதியைச் செலவழித்து, கடைசியாக ஒரு நவீன ரேசரை உருவாக்கினார்கள். இரண்டு பக்கங்களிலும் கூர்மையாகத் தீட்டப்பட்ட பிளேடு, அதனைப் பொருத்துவதற்குச் சௌகரியமாக ஒரு கைப்பிடி. அதனைச் சோதித்துப் பார்த்த போது இருவருக்கும் பரம திருப்தி!

கில்லெட்டும், நிக்கர்சனும் இணைந்து 1901-ஆம் ஆண்டு அமெரிக்கன் சேஃப்டி ரேசர் கம்பெனியை ஆரம்பித்து, அதற்கான காப்புரிமையையும் பெற்றார்கள். 'ஒரே ஒரு ரேசரை மட்டும் வாங்கினால் போதும்; அதன் பிறகு பிளேடு மழுங்கி விட்டால் அதனை மட்டும் மாற்றிவிட்டு தொடர்ந்து பயன்படுத்தலாம்' என்கிற புதுமை ஆண் வர்க்கத்தினரைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது.

முதல் உலகப் போரின்போது, அமெரிக்க அரசாங்கம், தம் ராணுவ வீரர்கள் பயன்படுத்துவதற்கு முப்பது லட்சம் ரேசர்களையும் மூன்று கோடியே இருபது லட்சம் பிளேடுகளையும் வாங்கியதன் பலனாக 'கில்லெட்' என்பது ஒவ்வோர் அமெரிக்கக் குடிமகனுக்கும் பரிச்சயமான பெயர் ஆகி விட்டது!

இரண்டே ஆண்டுகளில், லண்டனில் ஓர் அலுவலகம் திறந்து, ஐரோப்பாவில் கில்லெட் ரேசர் மற்றும் பிளேடுகள் விற்பனை செய்யப்பட்டன. புதுமையாக யோசித்ததன் பலனாக உருவாக்கப்பட்டதுதான் ஒரே ஒரு முறை பயன்படுத்தி விட்டு, தூக்கி எறிந்துவிடும் வகையான டிஸ்போசபிள் ரேசர். அதற்கும் நல்ல வரவேற்பு!

கில்லெட் தம்முடைய ரேசர்களுக்குக் காப்புரிமை பெற்றிருந்தாலும், டூப்ளிகேட் தயாரிப்புகள் விற்பனை செய்யப்படுவதை அவரால் தடுக்க முடியவில்லை. இறுதியாக அந்த டூப்ளிகேட் கம்பெனிகளை விலை பேசி வாங்கி, நிலைமையைச் சமாளித்தார் கில்லெட்! இன்னொரு பக்கம் புதிது புதிதாக ரேசர் வகைகளை உருவாக்கி மார்க்கெட்டுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார். இரட்டை பிளேடுகள் கொண்ட ரேசர், மூன்று பிளேடுகள் கொண்டது, மின்சாரத்தால் இயங்கும் ரேசர், பெண்கள் பயன்படுத்துவதற்காகப் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டவை என்று இன்று ஏராளமான ஐட்டங்கள் கில்லெட் தயாரிப்புகளாக உலக மார்க்கெட்டில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. ●

''மன்னர் மாறுவேடத்தில் டிசம்பர் சீஸன் கச்சேரிகளுக்குப் போய் வருகிறாரே... சங்கீதம்னா அவருக்கு ரொம்பப் பிடிக்குமா?''

''நீ வேற... அரண்மனை சாப்பாடு போரடிச்சுப் போச்சாம்... சபா கேண்டீன் சாப்பாடு ரொம்பப் பிடிச்சிருக்காம்... அதான் அங்க போறாரு...''

— பா. கணேசராஜா



பயிர் – பச்சை

பத்து ஏக்கர் வைத்திருக்கும் விவசாயி அவர். நெல், கரும்பு, வாழை என்று பயிரிட்டிருந்தாலும் அரை ஏக்கரிலாவது வெங்காயம் பயிரிடாமல் இருக்க மாட்டார். ஓர் ஏக்கர் வைத்திருந்தாலும் அதில் கால் பங்கு வெங்காயம் இடம் பெற்று விடும். எல்லாம் திண்டிவனம் தாலுகாவில்தான். திரும்பிய திசையெல்லாம் இங்கு வெங்காயச் சாகுபடிதான். அத்தனையும் பணம்!

“எடப்பாளையம் கிராமத்துல என்னோட வயல்ல நான்தான் துணிஞ்சு முதன்முதலா வெங்காயம் போட்டுப் பார்த்தேன். நல்லா வெளைஞ்சு வந்தது; வெலையும் நல்லா கெடைச்சது. அதுக்கப்புறமாத்தான் எங்க ஊர்க்காரருங்க ஒவ்வொருத்தரும் அவங்கவங்க வயல்ல கொஞ்சம் வெங்காயம் பயிரிட ஆரம்பிச்சாங்க. இப்ப மைலம் ஒன்றியத்துல பல கிராமங்கள்ல வெங்காயச் சாகுபடி அமோகமா நடந்து வருது. என்னோட வயல்ல அம்பது வருஷமாத் தொடர்ந்து வெங்காயச் சாகுபடி செஞ்சு வர்றேன்!” என்று நம்மிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசினார் எடப்பாளையம் கிராம விவசாயி நாராயணன்.

“வெங்காய விதை வாங்கி வந்து நடணும். அறுபது நாளில் அது நாற்றாக நல்லா வளர்ந்து வந்துடும். அப்புறம் அந்த நாற்றைப் பிடுங்கி வயல்ல நடணும். ஒரு சாகுபடிக்கு ஆறேழு தடவை களை எடுக்கணும். உரம் வைக்கணும். வாரம் ஒரு தடவை தண்ணீர்ப் பாய்ச்சணும்.



நெல்லை விட இதுக்குத் தண்ணீர் கம்மியாத்தான் செலவாகும். தொண்ணூறு நாள்ல வெங்காயம் மண்ணுக்குள்ள காய்ப்புக்கு வந்துடும். அப்புறம் அறுவடைதான்!" என்கிறார் எடப்பாளையம் கிராம விவசாயி ரெங்கனாதன்.

"வெங்காய வெட்டு முடிஞ்சதுக்கப்புறம், அதே வயல்ல சம்பா சாகுபடியா நெல் பயிரிட்டுடுவோம். அதனால வீட்டுச் சாப்பாட்டுக்கு நெல்லும் வந்துடும்; வெங்காயத்தால வீட்டுச் செலவுக்குப் பணமும் கெடைச்சுடும்!" என்று வெளிப்படையாகப் பேசினார் நாராயணன்.

"நான் ப்ளஸ் ஒன் படிக்கிற பொண்ணுங்க. வருஷா வருஷம் எங்க வயல்ல ஒரு அரைக் காணியாவது வெங்காயம் போட்ருவோம். இந்த வெங்காய சாகுபடி இருக்கே... கெஞ்சினால் மிஞ்சும்... மிஞ்சினால் கெஞ்சும்ங்க... மழை அதிகமாப் பெய்ஞ்சு தண்ணி வயல்ல தேங்கி நின்னு வெங்காயம் எல்லாம் அப்பிடியே அழுகிப் போறதும் உண்டுங்க. மழையே பெய்யாம தண்ணியே இல்லாம காய்ஞ்சுப் போறதும் உண்டுங்க!" என்று எச்சரிக்கையோடு சொன்னார் ரெங்கனாதனின் மகள் மல்லிகா.

எடப்பாளையம், மைலம், தழுதாளி, நெல்லாமூர், எடையாலம், கொடிம்மா, கொல்லியங்குணம், பெரும்பாக்கம் போன்ற கிராமங்களிலும், திண்டிவனம் தாலுகாவின் பல கிராமப்பகுதிகளிலும் வெங்காயம் பயிரிடப்படுகிறது.

வெங்காயத் தாள் உற்பத்தி, மைலம் ஒன்றியத்தில் அமோகமாக நடைபெற்று வருகிறது. நட்சத்திர உணவு விடுதிகளிலும், மேல் நாட்டு உணவு வகைகளிலும் வெங்காயத்தாள் பயன்படுத்தப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் வெங்காயத் தாள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. வெங்காயச் சாகுபடியின்போது தொண்ணூறு நாளில் வெட்ட வேண்டிய வெங்காயத்தை அறுபது நாளில் செடியோடு பிடுங்கி, பதப்படுத்தி அதிலிருந்து வெங்காயத் தாள் உற்பத்தி செய்யப்படுகிறது.

"விவசாயிங்க யாரும் ரெண்டு ஏக்கர்... மூணு ஏக்கர்னு வெங்காயம் போடுறது இல்லீங்க. யாரா இருந்தாலும் அரை ஏக்கருக்கு மேலே போடுறது இல்லீங்க. ஏன்னா... இது ஒரு நேரத்தைப் போல இருக்காது. வெங்காயச் சாகுபடிங்கறது ஒரு வகையில லாட்டரிச் சீட்டு மாதிரிங்க. தூக்கி விட்டாலும் தூக்கி விடும்; அமுக்கி விட்டாலும் ஒரேயடியா அமுக்கி விட்டுடும்!"என்கிறார்கள் இங்குள்ள விவசாயிகள், அனுபவரீதியாக.

செய்திச் சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


• ரெங்கனாதன்


• நாராயணன்



தொடர்கதை

பட்டுக்கோட்டை பிரபாகர்

அட்டகாசம்

"பேசுங்க மாப்ளை சார்!" என்றான் எதிர்முனையிலிருந்து கஜா.

"ஒரு கோடிக்குத் திடீர்னு எங்க போவேன்?" என்றான் குமரன்.

"வீட்ல வெச்சிருக்கலாம்... இல்ல லாக்கர்ல வெச்சிருக்கலாம்... இல்ல நாலு பேருக்கு போன் செஞ்சாப் போதும்... பத்தாவது நிமிஷம் பணம் உன் வீட்ல இருக்கும். எப்படி ஏற்பாடு பண்ணுவியோ... அது உன் பிரச்னை. மஞ்சரி உயிரோட வேணுமா, வேணாமா? உனக்கு முப்பது நிமிஷம் டைம் தர்றேன். எதுக்குத் தெரியுமா? பணம் ஏற்பாடு செய்றதுக்கு. அதுக்கப்புறம் நீ பணத்தோட எத்தனை மணிக்கு, எங்க வரணும்னு தகவல் சொல்றேன்; வைக்கிறேன்."

போனை வைத்த குமரன், காரைக் கிளப்பி ஹோட்டல் வைடூர்யாவுக்கு வந்து சேர்ந்தபோது இன்ஸ்பெக்டர் தியாகு, சிவா தங்கியிருந்த அறையில் வைத்து சிவாவையும் அம்சாவையும் விசாரித்துக் கொண்டிருந்தார்.

குமரன் தனக்கு செல்போனில் வந்த மஞ்சரியின் படங்களை லேப்டாப் கம்ப்யூட்டரில் தொடர்பு கொடுத்து இன்ஸ்பெக்டருக்குப் போட்டுக் காட்டினான்.

படங்களைப் பார்த்த தியாகு, "குமரன், அவனுங்க என்ன சொல்லியிருக்கானுங்க?"

"முப்பது நிமிஷத்துல ஒரு கோடி ரூபாய் பணத்தை நான் ரெடி பண்ணி தயாரா இருக்கணுமாம்... எங்க, எப்ப எடுத்துட்டு வரணும்னு சொல்வானாம்!"

"அது என்ன மொபைல் நம்பரா?"

"ஆமாம் சார்."

அந்த எண்ணைத் தனியாகக் குறித்துக் கொண்டு யாருக்கோ போன் செய்து குறிப்புகளைத் தந்தார் தியாகு. தொடர்ந்து பலருக்கு போன் செய்தார்.

"குமரன், ஒரு பைசா தரக் கூடாது. அயோக்ய ராஸ்கல்ஸ்! பிடிக்கிறேன், பாருங்க!" என்று சிந்தனையுடன் பேசியவரிடம்,

"சார், அந்த ஆம்புலன்ஸ் வண்டி..." என்றான் குமரன்.

"இவங்க ரெண்டு பேரும் வண்டி நம்பரும் பார்க்கலை. வண்டில என்ன பேர் எழுதியிருந்ததுன்னும் பார்க்...." பேச்சை வெட்டியது அவரது செல்போனின் 'பார்த்த முதல் நாளே...' ஒலி!

காதில் வைத்துப் பேசினார்.

"சொல்லுங்க... அப்படியா? எத்தனை மணிக்கு? என்ன பேர் சொன்னீங்க? செக் பண்றேன். நம்பரைக் குறிச்சீங்களா? சரி... மறுபடி கூப்புடறேன்" என்று வைத்துவிட்டு, "குமரன், பாண்டிச்சேரில கஸ்தூரி நர்சிங் ஹோம்னு எதுவும் இருக்கா என்ன?" என்றார்.

"நான் கேள்விப்பட்டதேயில்லையே சார்."

"செக் போஸ்ட்லேர்ந்து தகவல். அந்தப் பேர்ல ஒரு ஆம்புலன்ஸ் வண்டி பாஸ் ஆச்சாம். உள்ளே ஒரு பொண்ணும், அவனும் இருந்தாங்களாம். வண்டி நம்பர் நோட் பண்ணலையாம். கஸ்தூரி நர்சிங் ஹோம்னு பேர் போட்டு கிழக்குக் கடற்கரைச் சாலைல எந்த ஆம்புலன்ஸ் போனாலும் மடக்கச் சொல்லிடறேன்" என்றவர் போன் செய்து உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

21



''சார்... என்ன உங்க பிளான்?'' என்றான் குமரன்.

"பணத்தை அவன் வாங்க வர்றப்ப தான் மடக்கணும். விடிஞ்சா கல்யாணம். அதனால நமக்கு அதிகமான நேரம் இல்லை. அவன் எங்க வரச் சொல்லப் போறான்னு தெரியலை. அந்த இடம் எதுன்னு தெரிஞ்சப்புறம் அதுக்குத் தகுந்த படி பிளான் வொர்க் அவுட் செய்யணும். குமரன், உங்க வீட்ல ஒரு கோடி வைக்கிற அளவுக்கு நம்பர் லாக் சிஸ்டம் உள்ள சூட்கேஸ் இருக்குதா?"

"இருக்கும் சார். பிரச்னையில்லை."

''நீங்க வீட்டுக்குப் போய் அந்த சூட்கேஸ் எடுத்து பழைய நியூஸ் பேப்பர் போட்டு நிரப்பி இங்கே எடுத்துட்டு வாங்க."

முகம் வெளுத்துப் போய் நின்றிருந்த அம்சா, சிவாவுக்குத் தைரியம் சொல்லி விட்டு, யாரிடமோ போனில் பேசிவிட்டு குமரன் புறப்பட்டுச் சென்றான்.

நெற்றியைத் தட்டிக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான் ஆகாஷ். அவனருகில் வந்தான் கஜா.

"சார், குமரனுக்கு முப்பது நிமிஷம் டைம் கொடுத்தோம். அதுல பதினைஞ்சு நிமிஷம் முடிஞ்சிடுச்சு. பணத்தோட அவனை எங்க சார் வரச் சொல்லப் போறோம்?"

"சொல்றேன்."

''பொண்ணை ஒப்படைச்சிட்டோம்; பேசின மீதி பணத்தைக் கொடுத்தா புறப் படுவோம்னு சொல்றாங்க சார்–விஷ் வாவும், பாண்டியும். அவங்களைப் போகச் சொல்லிடலாமே, சார்."

"கஜா, இந்தக் கடத்தல்ல போலீஸ் வரக்கூடாதுன்னு நான் நினைச்சுட்டு இருந்தேன். வர வெச்சிட்டாங்க உங்காளுங்க!"

"அவங்க என்ன சார் செஞ்சாங்க?"

"மஞ்சரியோட இன்னும் ரெண்டு பேரையும் கடத்தினாங்களே, அவங்களை இதே கடற்கரை ரோட்லயா இறக்கி வைப்பாங்க? அவங்க மயக்கம் தெளிஞ்சி கண்டிப்பா போலீஸ்கிட்ட போயிருப்பாங்க."

"போயிருக்கட்டுமே! பணத்தை எடுத்துக்கிட்டுத் தனியாத்தான் வரணும். போலீஸ் உன் பின்னாடி இருக்கிறது தெரிஞ்சா மஞ்சரியைக் கொன்னுடுவோம்னு மிரட்டலாமே, சார்."

"மிரட்டு! ஆனாலும் குமரன் போலீஸ் துணையை நாடியிருப்பான். அவங்க ஏதாச்சும் சாமர்த்தியம் காட்டுவாங்க."

"எதை வெச்சு சொல்றீங்க?"

"கஜா, மஞ்சரி குமரனோட பொண்டாட்டி இல்லை! பொண்டாட்டி ஆகப் போறவதான்! பெருசா பாசம் எதுவும் இருக்காது! கல்யாணம் நின்னா குடும்ப கௌரவம் பாதிக்குமேன்றதுதான் அவனோட கவலை!"

"அப்போ பணம் தரமாட்டானா சார்?"

"தருவான்; கூடவே போலீஸ் இருக்கும். பொண்ணையும் மீட்டுட்டு, பணத்தையும் மீட்கணும்னு போலீஸ் பிளான் செய்யும். நாம முட்டாள் ஆயிடக்கூடாது கஜா!"

"சரி சார்!"

"நமக்குப் பணமும் முக்கியம். நாம தப்பிக்கிறதும் முக்கியம். விஷ்வாவும், பாண்டியும் இந்தத் திட்டம் முடியற வரைக்கும் இங்கேயே இருக்கட்டும். அவங்களை ஒரு ரூம்ல ரெஸ்ட் எடுக்கச் சொல்லு. தேவைப்படறப்ப அவங்களைக் கூப்புடறதாச் சொல்லு. உனக்குத் துப்பாக்கியால சுடத் தெரியுமா?"

"தெரியாது சார்; நமக்கு வீச்சருவா, கத்திதான் சார்."

"கைல புடிச்சி பந்தாவா மிரட்டத் தெரியாதா?"

"அது செய்வேன், சார்."

கஜா அறைக்கு வெளியே சென்று மது அருந்திக் கொண்டிருந்த விஷ்வா, பாண்டியிடம் தகவல் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்தான். அவனிடம் ஆகாஷ் தன் திட்டத்தைச் சொல்லத் துவங்கினான்.

சப் இன்ஸ்பெக்டர் முருகு பாண்டியன் இன்ஸ்பெக்டர் தியாகு இருந்த அறைக்கு வந்தார்.

அவர் போனில் பேசிக் கொண்டிருந்ததால் காத்திருந்தார். தியாகு போனில் மேலதிகாரியிடம் சூழ்நிலையை விளக்கியபடி முருகுவின் வருகையைத் தலையசைத்து அங்கீகரித்தார்.

"ஆமாம் சார், இன்னும் இல்லை சார். புரியுது சார். சரி சார். சரி சார். செய்றேன் சார்" என்று அணைத்துவிட்டு இவரைப் பார்த்து, "சொல்லுங்க" என்றார்.

"சார், அந்த செல்போன் நம்பர் பெங்களூர்ல பி.எஸ்.என்.எல். நேஷனல் ரோமிங் வசதியோட இருக்கற நம்பர். அங்கே பங்காரப்பான்ற பேர்ல இருக்கு. அந்த அட்ரசை பெங்களூர் போலீஸ் செக் பண்ணிட்டாங்க. அப்படி



எந்த அட்ரசும் இல்லை."

"சரி, டவர் மேட்டர் கேட்டேனே..."

"மிஸ்டர் குமரனோட நம்பரைக் கொடுத்து மானிட்டர் பண்ணச் சொல்லியிருக்கேன். அந்த போனுக்கு எந்த போன்லேர்ந்து கால் வந்தாலும் ட்ரேஸ் பண்ணி உடனே சொல்லிடுவாங்க."

"வெரிகுட்" என்று அறையில் இருந்த பூச்சாடியின் பிளாஸ்டிக் மலர்களைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தார் தியாகு.

கட்டில் மேல் விரித்து வைத்திருந்த பெரிய சூட்கேசுக்குள் பழைய செய்தித்தாள், வார இதழ்களை எல்லாம் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான் குமரன்.

"குமரன்!" குரல் கேட்டுத் திரும்பி திடுக்கிட்டான்.

அப்பா நின்று கொண்டிருந்தார்.

"என்ன பண்ணிக்கிட்டிருக்கே?"

"அதுப்பா... வந்துப்பா..."

அருகில் வந்தார். சூட்கேஸுக்குள் இருக்கும் பழைய செய்தித்தாள்களைப் பார்த்தார்.

"என்னப்பா? எனக்கு எதுவும் புரியலை."

"உங்களுக்குத் தகவல் தெரிவிக்காமலே பிரச்னையைச் சரி செஞ்சிட முடியும்னு நினைச்சேன்ப்பா."

"என்ன பிரச்னை?"

"மஞ்சரியை யாரோ கடத்திட்டாங்கப்பா."

"என்ன சொல்றே?" என்றார் அதிர்ந்து.

"இப்படி உக்காருங்க, சொல்றேன்."

கட்டிலில் அவரை அமர வைத்து, விவரமாக, அவசரமாகச் சொல்லி முடித்தான் குமரன்.

"உனக்கு அறிவு இருக்கா? இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்கு. நீ என்னைக் கேக்காம எதுக்குப் போலீஸுக்குத் தகவல் கொடுத்தே?"

"ஏன்ப்பா?"

"அவங்க குற்றவாளியைப் பிடிக்கிறதுலதான் தீவிரம் காட்டுவாங்க. உயிரைப் பத்திக் கவலைப்படமாட்டாங்க. இத பாரு... அந்தப் பொண்ணுக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா நாமதான் பொறுப்பு. இது நம்ம கௌரவப் பிரச்னை. ஏமாத்தற வேலை வேணாம். ஒரு கோடி கொடுத்துடலாம்" என்றார் அப்பா.

(தொடரும்)

கணைகள்


படம் : ஸ்ரீஹரி

தேர்தல்கள் முடிந்து விட்டனவல்லவா! தமிழக காங்கிரஸ் பிரமுகர்களுக்குள் மீண்டும் 'டிஷ்யூம்' துவங்கிவிட்டது. ஆளாளுக்கு விமர்சனங்களை அள்ளி விட்டபடி இருக்க, நாம் மூத்த காங்கிரஸ் பிரமுகரும், சட்டமன்ற உறுப்பினருமான பீட்டர் அல்போன்ஸைச் சந்தித்தோம்.

தமிழ்நாடு காங்கிரஸில் என்னதான் நடக்கிறது?

''காங்கிரஸில் ஒன்றுமே நடக்கவில்லை; செயலற்று இருக்கிறது.''

எப்படிச் சொல்கிறீர்கள்?

''தமிழ்நாட்டில் காங்கிரஸ் வாக்கு வங்கியை விரிவாக்கவும், ஒருங்கிணைக்கவும், எந்த ஓர் அரசியல் நடவடிக்கையும் இயக்கப் பணியும் நடைபெறவில்லை. ஆண்டு தோறும் குலதெய்வக் கோயிலுக்குச் செல்வதைப் போல தேர்தலின்போது தான் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

இந்த நிலைக்கு என்ன காரணம்?

''காங்கிரஸின் ஒவ்வொரு தொண்டரும், இதற்கான பகுதிப் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றொன்று தமிழக காங்கிரஸுக்கும், அகில இந்திய காங்கிரஸுக்கும் உள்ள தகவல் இடைவெளி!''

ஏன் இந்தத் தகவல் இடைவெளி உண்டானது?

''தமிழ்நாடு காங்கிரஸ் ஒரு நலிந்த

"காங்கிரஸ் ஒரு யானை.. அது நினைத்தவுடன் நடக்கவோ, திரும்பவோ முடியாது!"

அமைப்பாகப் போய்விட்டது. இனி இதைப் பயனுள்ள விதமாக நடத்த முடியாதென்ற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அதற்காக அவர்களைக் குறை சொல்ல முடியாது. மற்ற மாநிலங்களில் காங்கிரஸ்காரர்களிடம் கருத்து வேற்றுமை இருந்தாலும், மேலிடத்தை அணுகும்போது ஒரே கருத்துடன் தான் அணுகுகிறார்கள். நிர்வாகிகள் போடுவதென்றால் உட்கார்ந்து பேசி ஒரே பட்டியல் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழக காங்கிரஸுக்கு அப்படி ஒரு தேவை ஏற்பட்டால் 12 பட்டியல்கள் போகின்றன. மேலிடத்துக்குக் கோபமும் வெறுப்பும்தான் வருகிறது.

தலைவர்களை மாற்றிக் கொண்டிருந்தால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தேறிவிடுமா?

''தமிழ் மாநில காங்கிரஸ் இணைந்த இந்த மூன்றாண்டுக்குள் ஐந்து பொறுப்பாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர். மாதத்துக்கு ஒரு முறைகூட தமிழகத்துக்கு அவர்களால் வர முடியவில்லை. அப்படியே வந்தாலும் சென்னையோடு சரி. எனவே கிராம, ஒன்றிய மாவட்ட அளவில் சிறப்பாகப் பணிபுரியும் தொண்டர்களைப் பற்றி, பிரமுகர்களைப் பற்றிப் பொறுப்பாளர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அடிக்கடி டெல்லிக்குச் சென்று, அங்கே உள்ள தலைவர்களை வட்டமடித்துக் காக்கா பிடிக்கும் ஒரு பிரமுகர், ஏதாவது ஒரு பொறுப்பைப் பெற்றுக்

கொண்டு வந்துவிடுகிறார். அதனால்தான் சோர்ந்து வெறுத்த உண்மையான தொண்டர்கள் வேறு கட்சிகளுக்குப் போய் விடுகிறார்கள். மேலிடத்தால் நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் மாதத்தில் ஐந்து நாட்களாவது தமிழகத்தில் செலவழிக்க வேண்டும்.

வீரப்ப மொய்லி, சுற்றுப் பயணம் செய்தபோது, அவருக்கு களத்தில் உள்ள யதார்த்த நிலை தெரிந்தது. இதனால் தங்கள் அரசியல் பிழைப்புக்கு ஆபத்து என்று கருதிய டெல்லி சுற்றும் தமிழக காங்கிரஸ் பிரமுகர்கள் அவதூறு பேசினர்."

"வாசனை ஓரங்கட்டினால் காங்கிரஸுக்கு நஷ்டம்!"

–பீட்டர் அல்ஃபோன்ஸ்

சமீபத்தில் வாசன் நீங்கலாக மற்ற காங்கிரஸ் பிரமுகர்கள் சோனியாவைச் சந்தித்து, நிர்வாகிகளை மாற்றச் சொன்னார்களே! வாசனை ஓரங்கட்டும் முயற்சி நடக்கிறதா?

"காமராஜுக்குப் பிறகு தொண்டர்களைச் சிந்தாமல், சிதறாமல் அன்னை இந்திரா காந்தியின் தலைமையின் கீழ் ஒன்று சேர்த்த மூப்பனாருக்கு அன்று கொடுக்கப்பட்ட அரசியல் நெருக்கடி இன்று வாசனுக்குக் கொடுக்கப்படுகிறது. வாசனைத் தனி நபராகப் பார்க்கக் கூடாது. அவரது அரசியல் பின்னணி பலமானது. வாசனை நெருக்கடிக்குள் தள்ளினால் தமிழக காங்கிரஸுக்குத் தான் நஷ்டம்."

திராவிட இயக்கங்களுக்குப் பின்னணி பாடிக் கொண்டிருப்பதால்தான் தமிழகத்தில் காங்கிரஸ் வளரவில்லையா?

"காங்கிரஸ் ஒரு யானை. அது நினைத்தவுடன் நடக்கவோ, திரும்பவோ முடியாது. அதுபோல் நின்று திரும்ப வேண்டிய இடமும், பாதையும் வரும் வரை அது இருக்கின்ற இடத்திலேயே இருக்க வேண்டியதுதான். தேசிய கட்சிகளுக்கு இந்தச் சங்கடங்கள் வருகின்றன."

காங்கிரஸ் அதிகாரத்தில் பொறுப்பெடுத்துக் கொண்டால், மைனாரிட்டி அரசு என்று விமர்சனம் வராதே?

"கூட்டணி வலுவாக இருக்க, அரசில் பங்கு பெற்றுத்தான் ஆக வேண்டும் என்பதல்ல. நம்மால் இந்தக் கட்சியின் மூலம் மக்களுக்கு நல்லது செய்ய முடிகிறதா என்பதே முக்கியம்."

- ப்ரியன்

படம் : ராஜன்



டாக்டர் எல்.மஹாதேவன்



தும்மலைத் தொடரும் வலிகள்!

தீராத தலைவலி, கூடவே காய்ச்சல், முகத்திலும் தாடையிலும், கண்ணிலும், பல்லிலும் வலி. சில சமயங்களில் நல்ல குளிரும் கூட. இதெல்லாம் எதனால்? 'சைனஸைட்டிஸ்'தான் காரணம். சைனஸைட்டிஸ் என்றால் என்ன என்று பார்ப்பதற்கு முன் சைனஸ் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்வோம்.

மூக்கைச் சுற்றிக் காணப்படும் எலும்புகளின் உள்ளே உள்ள வெற்றிடங்களுக்கு 'சைனஸ்' என்று பெயர். சைனஸ் குழல்கள் நுண் கிருமிகளால் அழற்சி அடையுமானால் சைனசைட்டிஸ் பிரச்னை ஏற்படுகிறது. ஜலதோஷம் சைனஸைட்டிஸாகவும் மாறலாம். எப்படி? ஜலதோஷம் பிடித்த ஒருவருக்கு மூக்கில் உள்ள ம்யூகஸ் மெம்ப்ரேன் என்ற சவ்வில் அழற்சி ஏற்பட்டு மூக்கடைப்பு உண்டாகும். அப்போது மூக்கிலிருந்து நீர் வெளியேறாமல் சைனஸ் குழிகளில் உள்ள வெற்றிடத்தில் சேர ஆரம்பிக்கும். அந்நீரில் உருவாகும் கிருமிகளை வெள்ளையணுக்களும், திரவங்களும் சென்று தாக்க முற்படும். அப்போதுதான் வலி வருகிறது! இப்படித் தும்மலைத் தொடர்ந்து வலிகள் ஏற்படும்.

ஆயுர்வேதத்தில் இதனை பீனஸம், பிரதிச்யாயம் என்கிறோம். கெட்டுப் போன தண்ணீர், மலத்தை அடக்குதல், தூசி, அபான வாயுவின் தடை ஆகியவை இந்நோய் வரக் காரணமாகின்றன. இதற்குக் கபத்தைச் சமன் செய்யும் மருந்துகளான தசமூல கடுத்ரயக் கஷாயம், வ்யோஷாதி வடகம் (சுக்கு சேர்ந்தது) ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொடுத்தால் நல்ல பலனைத் தரும்.

சைனஸ் குழிகளில் உள்ள நீரை எடுக்க ராஸ்னாதி சூரணத்தை எலுமிச்சை சாற்றில் கரைத்து மூக்கைச் சுற்றிப் போட்டால் நீரை எடுத்து விடும். மூக்கு அடைப்பைப் போக்க சுக்கு, கற்பூரம், மஞ்சள் ஆகியவற்றை நன்கு அரைத்துத் திரிபோலச் செய்து புகை உண்டாக்கி அதை மூக்கால் உறிஞ்ச வேண்டும். மிக எளிதாக, யூக்கலிப்டஸ் தைலம் இட்டு ஆவி பிடித்தல் நல்ல நிவாரணம் ஆகும். குக்குலு பஞ்சபலம் என்ற மருந்தைப் பயன்படுத்தலாம்.

மேலே சொன்ன நிவாரணங்களால் சைனஸின் ஆரம்ப நிலை மாறிவிடும். அதன் பிறகு தலைக்கு வசாதி தைலம், ஏலாதி தைலம், துளசி தைலம் போன்றவற்றைத் தேய்த்துக் குளித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

காய்ச்சல், சளி, மூக்கடைப்பிலிருந்து சரியான பிறகு மீண்டும் வராமல் இருக்க ஷட்பிந்து நஸ்யம் செய்வது சிறந்ததாகும். நஸ்யம் என்றால் மருந்து எண்ணெய்களை மூக்கினுள் விடுகிற சிகிச்சை. ஒவ்வொரு மூக்குத் துளையினுள்ளும் சில துளி எண்ணெயைச் செலுத்த வேண்டும்.

அதற்கு முன்பு ஏலாதி எண்ணெய் தடவி ஆவி பிடிக்க வேண்டும்.


மூக்கினுள் எண்ணெய் விட்ட பிறகு, வெந்நீரினால் நன்கு வாய் கொப்பளிக்க வேண்டும். மூக்கடைப்பு இருக்கும்போது நாஸிகா சூரணத்தினால் நஸ்யம் செய்யலாம்.


நஸ்யத்தோடு, நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்க வாசிஷ்ட ஹரீதகி, தசமூல ரசாயனம் கோரோசனாதி வடி போன்ற மருந்துகளை உட்கொள்வதால் நல்ல பலன் கிடைக்கும்.


சிலருக்குப் பிறவியிலேயே மூக்கெலும்பு (Deviate Nasal Septum) வளைந்து காணப்படும். பொதுவாக இதற்குச் சிகிச்சை தேவையில்லை.

இன்னொரு பிரச்னையாக மூக்கின்

சைனஸ் பகுதிகள்!







உள்ளே சதை வளரும். இதனை ஆங்கிலத்தில் Rhinospordiosis என்பார்கள். ஆயுர்வேதத்தில் நாசார்சஸ் நோய் என்றழைப்பர். சதை வளர்வதற்குக் காரணம் அபான வேகத்தைத் தடுப்பது, நோய் எதிர்ப்புத் தன்மை குறைவது, உடலில் அக்னி பலம் குறைவது ஆகியவையே.

ஷண்முகம் என்ற இருபது வயதுடைய வாலிபர் ஓயாத தும்மலினால் அவதிப்பட்டு எங்களிடம் வந்தார். அவருக்குத் துளசி சூரணமும், ஏலாதி சூரணமும் தேனில் கலந்து கொடுத்தோம். அதோடு, கண்டங்கத்திரி, திப்பிலி, அதிமதுரம், வேப்பம்பட்டை ஆகியவற்றால் செய்த கஷாயத்தைக் கொடுத்ததால் நோயிலிருந்து விடுபட்டார். அதன் பிறகு அவருக்கு ஷட்பல க்ருதத்தில் கோமூத்ர பிப்பலி சேர்த்துக் கொடுத்தோம். இதனால் பூரண நிவாரணம் அவருக்குக் கிடைத்தது. நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதனால்தானே பிரச்னை. ஆகையால் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்த தினமும் இரண்டு வேளை ச்யவனப்பராசம் சாப்பிட அறிவுறுத்தினோம். கூடவே தினமும் தலைக்குத் துளசி தைலமும் தேய்க்கச் சொன்னோம். முழுமையான பலன் கிடைத்தது.

ராமசாமி என்ற மற்றொருவர் வந்திருந்தார். பரிசோதனை செய்து பார்த்ததில் அவருக்கு மூக்கினுள்ளே சதை வளர்ந்திருந்தது! அது விதையில்லாத திராட்சையைப் போல இருந்தது. இதற்கு 'நேஸல் பாலிப்' என்று பெயர். இதனால் மூச்சு விடுவதில் சிரமம் இருக்கும். இவரைக் குணப்படுத்த குக்குலு திக்தகம் கஷாயம், மதுஸ்னுஹி லேகியம் போன்றவற்றைக் கொடுத்தோம். வெண்குன்றி என்கிற ச்வேத குஞ்சா என்ற விதையை அரைத்து அச்சதையில் பூசி, ராஸ்னாதி தூமவர்த்தியை தூமம் (புகை பிடிக்க) செய்ய வைத்தோம். உள்ளே சாப்பிட திரிபலாதி குக்குலுவைக் கொடுத்தோம். மூக்கில் நஸ்யத்துக்கு க்ஷார தைலத்தைப் பயன்படுத்தினோம். நல்ல நிவாரணம் கிடைத்தது.

ஜலதோஷமும் பீனஸமும் நீடிப்ப



தால் தொண்டையிலும், குரல் வளையிலும் நுண்கிருமிகளால் அழற்சி ஏற்படலாம். அதன் விளைவாக வோக்கல் கார்ட் பாலிப்ஸ் எனும் குரல்வளைக் கட்டிகள் உருவாகும். இந்தத் தொண்டை அழற்சி பாக்டீரியாவினாலும், வைரஸி னாலும் வருகிறது. மேலும், ஜலதோஷம் வந்தாலும் அதன் தொடர்ச்சியாக தொண்டை அழற்சி வரும். அதன் விளை வாக தொண்டை வலியும், எதனையும் விழுங்குவதில் சிரமமும் உண்டாகும். பிறகு காய்ச்சல், தொண்டைக் கழலை எனத் தொடரும். இந்தக் கட்டத்தில் பத்யா குஸ்தும்பராதி கஷாயத்தில் தாளீஸாதி வடகம் சேர்த்துக் கொடுத்தால் தொண்டை அழற்சி சரியாகும். நிசுலாதி சூரணத்தைத் தொண்டையைச் சுற்றித் தடவலாம். அதன் கூடவே ஸாரஸ்வத சூரணத்தை வெந்நீர் விட்டு வடிகட்டி வாய்க்கொப்பளிக்கலாம். அக்ஷம் என்ற தானிக் காயையும் கஷாயமாக்கிக் கொப் பளிக்கலாம்.

மேற்சொன்ன அவஸ்தைகள் போனபின்பு வாஸாகண்டகாரி லேஹி யங்கள் ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொடுக்கலாம். இந்தத் துன்பம் இனிமேல் வரவே கூடாது என்று எண்ணி இந்து காந்தம் நெய்யைத் தொடர்ந்து சாப்பிட் டால் என்றும் இது வராது.

பெரியவர்களுக்குத் தொண்டை அழற்சி என்றால் குழந்தைகளுக்கு டான்ஸில்ஸ்! இது பாக்டீரியாவினால் ஏற்பட்டு, குழந்தைகள் சாப்பிடும் பொருட்களை விழுங்குவதற்குச் சிரமப் படும். காதுவலி, சாப்பிட அடம்பிடிப்பது அல்லது மறுப்பது என்று சிரமம் தொட ரும். இதனால் சில குழந்தைகள் மந்த மாகக் காணப்படும். வாந்தி கூட இருக்க லாம். வாயினுள் டான்ஸில்ஸ் வீங்கிக் காணப்படும். மேலும் டான்ஸில் சதை பழுப்பாகி, அதன் மேல் வெள்ளையாக ஒரு படிமானமும் இருக்கும்.

இதற்குக் கண்டியம் என்ற கஷாயம் மிகச் சிறந்த மருந்து. காஞ்சனார குக்குலு, கதிராதி வடி மிகவும் சிறந்தது. கருத்த குளிகையைத் தொண்டையைச் சுற்றி வெளியே போடுவதாலும் நிவாரணம் கிடைக்கும். குழந்தைகளுக்கு இந்நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க பாரங்கி யாதி க்ருதத்தைத் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும்.

தொண்டைக் கரகரப்பு பலருக்கு இருந்தாலும், புகை பிடிப்பவர்களுக்கு வரும்போது எச்சரிக்கை தேவை. பதி னைந்து நாட்களுக்கு மேல் தொண்டை கரகரப்பு இருந்தால் கேன்சர் போன்ற நோய் இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி எண்: 8

மூக்கடைப்பு, தொடர்ச்சியான தும்மலை நிறுத்த சிறந்த, எளிய, சரியான கைவைத்தியம் எழுதி அனுப்புங்கள். சிறந்த கைவைத்தியத் துக்கு டாக்டர் **எல்.மஹாதேவன் தன்வந்தரி வெள்ளி டாலர்** பரிசளிப்பார். இரண்டாம் பரிசாக **தேவமருந்து முதல் பாகம்** புத்தகம். அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி 25.12.2006 தேதிக் குள் கல்கி அலுவலகத்துக்கு அனுப் பவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.



சிட்டி யூனியன் பாங்க் லிட்.

CUB

Since 1904

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001, தமிழ்நாடு.
போன் : 0435-2432322 ஃபேக்ஸ் : 0435-2431746

CUB 400

டெபாசிட்டுகளுக்கு வழங்கும் வட்டி

9% வரை

வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியே எங்கள் கொள்கை.
எங்கள் வட்டி விகிதங்கள் இதையே உறுதி செய்கின்றன.

காலம்	மூத்த குடிமக்கள்	மற்றவர்கள்
400 நாட்கள்	9%	8.50%

வருமான வரி விலக்கு அளிக்கும் டெபாஸிட் திட்டங்கள்	ANNUALISED YIELD RATE	
	மூத்த குடிமக்களுக்கு	மற்றவர்களுக்கு
CUB TAX SAVER GOLD CUB TAX SAVER SILVER	11.20%	10.08%

தொடர்பு கொள்வீர்

மின் அஞ்சல் : rpm@cityunionbank.com
இணைய தளம் : www.cityunionbank.com

கிளைகள் :

சென்னை (தி.நகர்)-9380286558, பாண்டிச்சேரி-2331272, விழுப்புரம்-222313, கடலூர்-230467, சிதம்பரம்-222114, மயிலாடுதுறை-222156, கும்பகோணம் மெயின்-2421058, தஞ்சாவூர்-230943, திருச்சி-2704180, மதுரை-2348886, கோயம்புத்தூர் (ராம் நகர்) - 2232393, ஈரோடு-2258821, சேலம்-2260134, கரூர்-230346, நாமக்கல்-221096, திருச்செங்கோடு-256356, திருப்பூர்-2247248, இராஜபாளையம்-230432, காரைக்குடி-236524, புதுக்கோட்டை-221739, சிவகாசி-220181, திருநெல்வேலி-2337349, நாகர்கோயில்-225353, தூத்துக்குடி-2321343, விருதுநகர்-243962, ஹைதராபாத்-23228358, பெங்களூர் (சுல்தான்பெட்)-22870328, மும்பை (கார் வெஸ்ட்) - 26463047, டெல்லி (கரோல்பாக்) - 25788696, கொல்கத்தா - 22107140.

மேலும் இந்தியா முழுவதும் 124 கிளைகள்.

வாழ்நாள் முழுவதும் உங்களுடன்!



"கறுப்புன்னா இளக்காரமா?"

'ஆட்டோகிராஃப்' மல்லிகா இப்போது 'அஞ்சலி' மல்லிகாவாகிவிட்டார். தங்கச்சியாகவே பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன கண்களுக்கு, அழகும் இளமையும் நிறைந்த அம்சமான 'அஞ்சலி'யாக சின்னத்திரையில் அவரைப் பார்க்கும்போது சந்தோஷம் கொப்பளிக்கிறது.

"சீரியல்னாவே 'மைல் கணக்கில் ஓடுற ஆளு நான். ஆனா அஞ்சலியா மாறின பிறகுதான் சீரியலோட மகத்துவம்(?!) எனக்குப் புரிஞ்சது. சினிமாவுல ஒரு மாசம், ரெண்டு மாசம் ஷூட்டிங். அதுக்கப்புறம் ரயில் சிநேகிதருங்க மாதிரி எல்லாரும் பிரிஞ்சு போய்டுவாங்க. ஆனா, சீரியல் அப்படியல்ல. அது ஒரு அழகான குடும்பம். தினமும் ஒருத்தருக்கொருத்தர் பார்த்துப் பேசி அரட்டை அடிச்சுக்கிட்டு ரொம்ப சந்தோஷமா இருப்போம்'' என்று ஏக்கமாகப் பேசிய மல்லிகாவிடம் 'இனி அவ்ளோதானா சினிமா?' என்றோம்.

"ஆட்டோகிராஃப் படத்துக்குப் பிறகு தங்கச்சி, அண்ணி ரோல்னு ஒரே மாதிரியா நிறைய பண்ணிட்டேன். அது எனக்குப் பிடிக்கல. இந்த நேரத்துலதான் 'அஞ்சலி' வாய்ப்பு வந்துச்சு, பண்றேன். நல்ல கேரக்டர் வந்தா சினிமாவும் பண்ணுவேன்.

கறுப்பா இருப்பது பற்றி கவலைப்பட்டதுண்டா?

"கறுப்புன்னா அவ்ளோ இளக்காரமா? அதுதாங்க நம்ம திராவிடக் கலர். அதைப் பத்தி ஏதாவது தப்பா பேசினீங்க, அவ்ளோதான் ஆமா'' என்று கோபப்பட்டவரைக் குளிர வைக்க,

'ஆமாம்... பிரஜன் எப்படி?' என்றோம்.

"ஆரம்பத்துல அவரும் பேசமாட்டாரு; நானும் பேச மாட்டேன். அவருக்கு நெறைய ஃபேன்ஸ் இருக்கிறதால 'ஓவர் ஹெட்வெயிட், அதனாலதான் பேச மாட்டேங்கிறாரு'ன்னு நெனைச்சேன். ஆனா, போகப் போக அவர் என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் ஆயிட்டாரு. இருந்தாலும் சீரியல் கேரக்டருன்னு வரும்போது அவர் எனக்கு வில்லனாயிடறாரு. என்ன சோகம் பாருங்க!''

- வினோ

தராசு
நீங்கள் கேட்டவை

● ஆரூர் சேகர், சென்னை-94

? பெரியார் சிலை உடைப்பும் ராமர் சிலை உடைப்பும் எதை உணர்த்துகின்றன?

! இரு தரப்பிலும் வீம்புத் தலைமை நிலவுவது சரியில்லை என்பதை.

● ஏ.எம்.மாதவன், லால்புரம்

? விரைவில் தேசிய, மாநில அளவிலான புதிய அரசியல் கூட்டணி உருவாகும் என்று ஜெ. அறிவித்துள்ளாரே?

! விவஸ்தை கெட்ட நமது அரசியலில் இதுவும் நடக்கும்; எதுவும் நடக்கும். இப்போதே ஆயாராம் காயாராம்களின் டிராஃபிக் அதிகரித்துக் கொண்டுதானே இருக்கிறது.

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? பிளஸ் ஒன், பிளஸ் டூ வகுப்புகளுக்கான கடினமான பாடப் பகுதிகளை நீக்கியதால் கடந்த ஆண்டு ஏழு கோடி ரூபாய் மதிப்புக்கு அச்சடிக்கப்பட்ட எண்பது இலட்சம் புத்தகங்களை என்ன செய்வதென்று தெரியாமல் பாடநூல் நிறுவனம் குழப்பத்தில் உள்ளதைப் பற்றி...?

! இழப்புதான்! ஆனால், இதனால் மாணவர்களின் தேர்வு பயமும் மனத் தளர்ச்சியும் நீங்கி நல்ல பலன் கிடைக்குமெனில், இந்த விலையைத் தாராளமாக அளிக்கலாம். மீண்டும் இதே தவறு நிகழாமல் இருக்குமானால், அரசு பாடத்தை ஒழுங்காகக் கற்றதாகக் கொள்ளலாம்.

● அகிலா அன்புமணி, ஈரோடு - 1

? உயர்நீதி மன்றத்தில் தமிழில் வாதாடலாம் என்பதை நீதிபதிகள் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே?

! கொள்கையளவில் அறிவிப்பது சுலபம்தான். மொழிபெயர்ப்புப் பணிகள் நடைமுறையில் பெரும் அவதி மட்டுமல்ல; மொழிபெயர்ப்பில் சிறிய தவறு நேர்ந்தாலும் நீதி, கோணல்மாணலாகி விடும் ஆபத்து இருக்கிறது.



• கூட்டணி அறிவிப்பு!



• நட்புக்கு நூறு!

ரஜினி சொன்னது சரியா?

● ம.சரவணன், கொங்கணாபுரம்

? முரசொலி மாறன் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர், எம்.ஜி.ஆர் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ளாததைப் பற்றி...?

! அவர் கலந்து கொள்ளாததில் ஆச்சர்யம் இல்லை. ஜெ. அங்கிருந்தார். மு.க. அழைக்கப்பட்டாரா என்பதும் கேள்விக்குறி. ஆனால், கலைஞருக்கு அதிருப்தி ஏற்படாதிருக்க, பிரதமரும் சோனியாவும்கூட புறக்கணித்தார்



● அதிருப்திக்கு...



● .... அஞ்சி...!

களே, அதுதான் ரொம்ப வருத்தம்.

● ஜானகி சுப்ரமணி, திருப்பூர் ☐

? நமது அரசாங்கம் வாரத்துக்கு ஒருமுறை சிறைக் கைதிகளுக்கு அசைவ உணவு அளிக்க முடிவு செய்திருப்பது பற்றி...?

! அவசியமே இல்லை. உலகெங்கும் சைவ உணவின் மேன்மை குறித்த அறிவும் உணர்வும் பெருகி வருகையில் அசைவத்தைச் சிறைக் கைதிகளுக்குக் கொடுப்பதைக் குறித்து மறுபரிசீலனை செய்யலாம். சுத்தமான, சத்தான சைவ உணவு, உணர்வுகளைச் சமன்படுத்தி சாத்விகத்துக்கு உதவும்.

● டி.முருகேசன், திருவாரூர் ★

? பாராளுமன்றத்தில் ஒவ்வொரு மாநில முதல்வர், எம்.பி, அமைச்சருக்கும் சிலைகள் வைக்க வேண்டும் என்று அந்தந்த மாநில அரசியல்வாதிகள் அடம் பிடிக்க ஆரம்பித்தால் இடம் போதுமா?

! கவலைப்படாதீங்க. இப்போ இருக்கற நாடாளுமன்ற கட்டடத்தை மியூசியம் ஆக்கி விட்டு, வேறு புதிய கட்டடம் எழுப்புவாங்க. வரிப்பணம்தானே; கைக்காசு இல்லையே!

● ராஜி ராதா, திருச்சி - 14 ★

? பெரியார், பொதுவாக "கடவுள் இல்லை; இல்லவே இல்லை'' என்றுதான் சொன்னார். எந்த மதத்தையும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. ஆனால், அவருடைய சிலைகளை ஹிந்து கோயில்களின் முன் வைப்பதைப் போல் கிறிஸ்துவ - முஸ்லிம் வழிபாட்டுத்தலங்கள் முன்பும் வைக்கலாமே? ஏன் வைப்பதில்லை?

! அதுதான் மைனாரிட்டி வோட்டு வங்கி அரசியலின் குசும்பு. அவர்களுக்குத் தெரியும் - இந்து மதத்துக்கு உள்ள சகிப்புத்தன்மை இதர மதங்களில் குறைவுதான் என்பது.

● ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி

? ஒரு மனிதனின் அறிவுத் திறனுக்கும் ஜாதிக்கும் சம்பந்தமில்லை எனக் கூறியுள்ளாரே ரஜினி?

! நூறு சதம் சரி. அறிவு, அனுபவத்தாலும் கல்வியாலும் நல்லோர் சேர்க்கையினாலும் உண்டாகிற விஷயம். ஜாதியோ பிறப்பு அடிப்படையிலானது. "சுயநல அரசியல்வாதி ஜாதியினர்'' இதைப் புரிந்துகொள்ள மறுப்பார்கள். ○

★ ரூ 50 பரிசு பெறும் இருவர்:
டி.முருகேசன்,
92, கூட்டுறவு நகர், மன்னை சாலை,
திருவாரூர் 613 701
ராஜி ராதா
D4/169, பெல் டவுன்ஷிப்,
திருச்சி 620 014

☐ ரூ 100 பரிசு பெறுபவர்:
எஸ். ஜானகி சுப்பிரமணி,
5/1, எல்ஆர்ஜி லேஅவுட்
இரண்டாவது தெரு,
ராயபுரம், திருப்பூர்

தடம் பதித்த உணர்வுகள்!

✉ ஈழப் பிரச்னையில் இந்தியா ஏதாவது ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டும் என ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சொல்வதில் நியாயம் உள்ளது.

பொன்மலை, ஆர். பிரகாஷ்

✉ வீணை கண்ணனின் கச்சேரியை வேறு இடத்தில் கேட்டேன். அந்த வீணையிலிருந்து அவ்வளவு வித்தியாசமான நாதங்களை உருவாக்குவது சாத்தியமா என்று வியந்தேன். கர்நாடக சங்கீதத்தின் பாரம்பர்யத்தைக் காற்றில் பறக்க விடாமல் செய்த அந்தக் கைவிரல் ஜாலங்களைக் குற்றமாகச் சொல்ல முடியாது. விமர்சனத்தை அந்த வீணை வித்தகருக்கு ஒரு திருஷ்டிக் கழிப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

மைலாப்பூர், எம்.கே.வரதராஜன்

✉ '12 வயதுப் பெரியவர்' சிறுகதையின் நிகழ்வுகளும், உணர்வுகளும் உயிர்ப்புடன் மனத்தில் தடம் பதித்தன.

போடி, எஸ்.எம்.பாலசுப்ரமணியன்

✉ அரசியல் கட்சிகளுக்குத் தார்மிகக் கடமை உள்ளது என்பதை நினைவூட்டிய தலையங்கம் பாராட்டுக்குரியது.

ராமநாதபுரம், க.ராஜரத்தினம்

✉ எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், தலையங்கத்தில் கூறியுள்ள அறிவுரை சரியான நெத்தியடி!

மதுரை, இரா. சக்கரபாணி

✉ டாக்டர் நிர்மலா சதாசிவத்தின் பேட்டிக் கட்டுரை பெண்களுக்கு வரப்பிரசாதம்!

பாளையங்கோட்டை, கே. மோகனசுந்தரம்

✉ 'பள்ளி மாணாக்கர் பலியாவது ஏன்?' என்ற கலந்துரையாடலை நிகழ்த்திய கல்கியின் சமூகப் பொறுப்புணர்வுக்கு வணக்கம்!

குரும்பபாளையம், ம.சங்கரி ரமேஷ்

✉ எம்.எஸ்.அம்மாவைப் பற்றிய புத்தக விமர்சனம், எங்கும் நிறை நாதப்பிரம்மம் என்று அவர் பாடிய பாடலை நினைவூட்டி, நெகிழ வைத்தது.


சேலையூர், கே.வி.ராமன்

✉ டாக்டர் எல்.மஹாதேவன் எழுதிய உடல் எடைகுறைப்பைப் பற்றிய விவரங்கள் மிகவும் அருமை!

மதுரை, ஆர்.பிருந்தா

✉ 'நோக்கியா'வைப் பற்றிய விவரங்களைக் கட்டுரை வடிவில் செதுக்கிய விதம் சூப்பரோ சூப்பர்!

லால்குடி, எம்.இராஜேந்திரன்



ஒரு பக்கக் கதை

பா.சேதுமாதவன்

வீட்டைப் பூட்டிவிட்டு கடைத் தெருவுக்குக் கிளம்பினார்கள் பாக்ய லக்ஷ்மியும் மகள் சுதாவும்.

''காலையிலயே போகலாம்னு சொன்னேனே, நீ கேட்டியாடி....!''

''ஏன், நான் வேண்டாம்னு சொல்லலையே?''

''ம்... நீ வேண்டாம்னு சொல்லலைதான். ஆனா, காலையில எழுந்து, குளிச்சு மேக்கப், சென்ட் போட்டு, நகைகளை அள்ளி உடம்புல போடறதுக்கே மத்தியானம் ஆக்கிட்டியேடி...''

''சரி உடும்மா, இந்த வெயில் நேரத்துலதான் கடைக்குப் போகணுமா? சாயந்தரம் போகலாம்னு சொன்னா கேளுங்களேன்...'' எனச் சிணுங்கினாள் சுதா.

''என்னடி! நல்ல காரியத்துக்குத் துணி எடுக்கப் போறப்ப தடங்கல் சொல்ற.. சாயந்தர நேரத்துல கடைத் தெருவுல கூட்டம் அதிகமாயிருது. இன்னிக்கு நாள் நல்லா இருக்கே... வாங்கிரலாம்னுதான் வெயிலைப் பாக்காம இப்பவே கிளம்பச் சொல்றேன்.''

''சரிம்மா! ஆனா இந்தக் கொளுத்தற வெயில்ல என்னால பஸ்ஸிலெல்லாம் வர முடியாது. அண்ணன் தான் துபாயிலேர்ந்து நிறைய பணம் அனுப்புதுல்ல, ஆட்டோவிலேயே கடைக்குப் போயிரலாம்மா!''

இருவரும் ஆட்டோவில் கிளம்பிச் சென்றார்கள்.

அதேநேரத்தில் துபாயில் கொளுத்தும் வெயிலில் கட்டட வேலை செய்து கொண்டிருந்தான் சுதாவின் அண்ணன் சக்திவேல்! ○





என் கடவுள்...என் தோழன்

சுவாமி சுத்தானந்தா

நான் என்பது என்ன?

8

தமிழ் வடிவம் : சிவசங்கரி

நான் என்பது என் உள்ளமும், என் உடலும் என்றாலும் உள்ளத்தை உடல் இயக்குகிறதா, உடலை உள்ளம் இயக்குகிறதா? எனும் கேள்வி எழுகின்றதல்லவா? அந்த உள்ளம் - மனம் என்பதே நான்! அந்த நான்தான் நம் உடல் இயக்கத்துக்குப் பொறுப்பு.

அன்றாட வாழ்வில் காலை உணவையோ, மதிய சாப்பாட்டையோ தீர்மானிக்கும்போது, உடலின் தேவையைக் கவனத்தில் கொண்டு திட்டமிடுகிறோமா அல்லது 'நான்' விரும்புவதைப் பொருத்து உணவை முடிவு செய்கிறோமா? உடலுக்குத் தேவை, கொழுப்புச்சத்து குறைந்த - இனிப்புக் குறைந்த உணவு. ஆனால் 'நான்' சாப்பிட நினைப்பதோ, கொழுப்பும், இனிப்பும் அதிகமாக உள்ள உணவைத்தான். தான் எதைச் சாப்பிடக் கூடாது என்பதைப் பற்றி எல்லோரும் அறிந்திருந்தாலும், அதைச் சாப்பிடுவதை நிறுத்த அவர்களால் முடிவதில்லை. ஏனெனில், சாப்பிடுவது 'யார்' என்று அவர்கள் புரிந்து கொள்வதில்லை. 'நான்' உண்கிறேன், உணவு உடலுக்குப் போய்ச் சேருகிறது. அதனால், உடலுக்குத் தேவையானதைத்தான் சாப்பிட வேண்டுமே தவிர, 'நான்' விரும்புவதை அல்ல. அப்படித்தான் நாம் யாருக்காவது உதவ வேண்டுமென்றால், அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க வேண்டுமே தவிர, நாம் விரும்புவதைக் கொடுக்கக் கூடாது.

புகை பிடிக்க விரும்புவது யார் - நம் உடலா அல்லது நாமா? புகைப் பிடித்தால் உடலுக்குக் கேடு விளையும் என்பது நமக்குத் தெரியும். நிகோடீன் நிரம்பிய அந்த சிகரெட்டைப் பற்ற வைத்தால், உடலே அழிந்து போகும். ஆனால் 'நான்' என்பது, புகை பிடிக்க விரும்புகிறது. 'நான்' ஆசைப்படுவதைச் சாப்

> "606ஐ வரச் சொல்லுய்யா!"
> "அவர் வெளியே போயிட்டார் சார். 404ஐயும் 202 ஐயும் கூட்டிட்டு வரட்டுமா?"
> - லீலாஜி

பிடுகிறேன், ஆசை தீர புகை பிடிக்கிறேன்... மொத்தத்தில் உடலின் மீது இவற்றைத் திணிக்கிறேன். இதனால் உடலில் கோளாறு ஏற்படுகிறது. டீசல் எண்ணெயில் ஓடும் கார் ஒன்று நம்மிடம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நான் பெரும் பணக்காரன்... டீசல் மாதிரி மலிவான எண்ணெயை என் வண்டிக்குப் போட மாட்டேன். விலையுயர்ந்த சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலைத்தான் போடுவேன் என்று அடம் பிடித்தால் கார் தன் இயக்கத்தை நிறுத்திவிட, நாம் பாதி வழியில் தவித்து நிற்க நேரிட்டு விடும். பெரும் செல்வந்தரான நாம், ஏழை மக்களின் உணவாகக் கருதப்படும் எளிய சாப்பாட்டை உட்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், நம் உடலுக்கு அந்த உணவுதான் தேவை. ஏழையின் உடலுக்குப் பணக்கார மனிதனின் உணவைக் கொடுக்கிறோம். ஏற்கெனவே பலவீனமடைந்துள்ள அந்த உடல், தன் இயக்கத்தை நிறுத்திவிடுகிறது. அப்படியானால் இருதய நோய், நீரிழிவு நோய், கொழுப்பு அதிகரித்தல் போன்றவற்றை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி எது? அப்படி எந்தக் கிருமியையும் தனித்து அடையாளம் காண முடியாது. தவறான பழக்கங்களின் விளைவுகளே இவை. இந்த உணவுப் பிரச்னையைப் போல, கோபம் - வெறுப்பு - பொறாமை போன்ற உணர்வுக் கோளாறுகளுக்கும் காரணம், எந்தப் புறக்கிருமியும் அல்ல... 'நான்' என்கிற எண்ணம் மட்டும்தான்!

இந்த 'நான்' என்பதைப் புரிந்து கொள்ளாமல், 'கோபப்படாதே', 'அதிகமாகச் சாப்பிடாதே' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போவதால் எந்தப் பலனும் இல்லை. எல்லோருக்கும் இது தெரியும். வெகு அழகாக அறிவுரை கூறுவதும் எல்லோருக்கும் சாத்தியம்தான். 'பரோபதேஸ பாண்டித்ய' என்று சம்ஸ்கிருதத்தில் மிக அழகான பழமொழி உண்டு. அதாவது பிறருக்கு அறிவுரை கூறுவதில் சிறந்தவர்! இன்று நாம் வாழும் வாழ்வின் நன்மை, தீமைகளை நாம் உணராவிட்டால், அடுத்த தலைமுறைக்கும் இதே குழப்பத்தைத்தான் விட்டு வைப்போம். இவற்றை நாம் உணர்வதற்குள் நம் உடலை வெகுவாகச் சீரழித்து விட்டிருப்போம்.

ஒருநாள், கடவுளைப் பற்றியும் மதத்தைக் குறித்தும் ஒரு விவாதம் நடைபெற்றது. பேச்சு முடிந்ததும் ஒருவர் எழுந்து, 'கடவுளை எப்படித் தெரிந்து கொள்வது?' என்று கேட்டார். அந்த மனிதர் அளவுக்கதிகமாக மது அருந்தியிருந்தார். தன் குடிப் பழக்கத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது என்று தான் குடிப்பவர்கள் பொதுவாக நினைக்கிறார்கள். 'குடித்திருக்கிறீர்களா?' என்று நான் அவரிடம் கேட்டபோது, அவர் முகத்தில் ஆச்சர்யம் பரவியது. பிறகு 'ஆம்' என்றார் அவர். "பிறக்கும்போதே வாயில் புட்டியுடனா பிறந்தீர்கள்? இல்லையே! அந்தப் பழக்கத்தைக் கற்றுக்கொண்டீர்கள். நீங்கள்தான் புட்டியை வீட்டுக்கு எடுத்துப் போனீர்கள் என்றாலும், உங்களை முதலில் கவர்ந்திழுத்தது புட்டிதான். கயிறு இழுக்கும் போட்டியில் வலுவற்றவர்தான் மறுபக்கத்துக்குப் போய் விடுகிறார். அவரை இழுப்பவர், திடமானவர், அதுபோல புட்டியோ, சிகரெட்டோ உங்களை இழுக்குமென்றால் நீங்கள் அவற்றைவிடக் கீழானவர்... மனிதப் பிறவிகூட இல்லை.

நீங்கள் எப்படி கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்?'' என்றேன்.

கோபம், வெறுப்பு போன்ற உணர்வு நம்மைக் கீழே இழுக்கிறது. உணவு நம்மைக் கவர்ந்திழுக்கிறது. கிளர்ச்சி, பாலுறவு நம்மைப் பிடித்து ஆட்டுகிறது. நேர்மையாக யோசிப்போம். அடிமைகள் முதலாளிகளாக ஆக முடியாது. முழுமையான ஆளுமையை அனுபவிக்க வேண்டுமானால், உன்னுக்குள் உள்ள 'நான்' என்பதன் செயல்பாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும். நம்மைப் பிடித்து இழுப்பது யார்? ஒரு பொருள் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது என்று நமக்கு நன்றாகத் தெரியும். என்றாலும், 'பரவாயில்லை, சாப்பிடு... எப்போதாவது ஒருமுறைதானே' என்று சொல்கிறது 'நான்'. யார் சொல்வதை நாம் கேட்க வேண்டும்? உடல் உணர்த்துவதையா அல்லது 'நான்' சொல்வதையா? 'நான்' நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த 'நான்'தான் நிராதரவாகக் கடவுளிடம் போய், தன் தவறுக்காக வருந்தி, 'என்னைக் காப்பாற்று' என்றெல்லாம் கடைசியில் கெஞ்சுகிறது.



(தொடரும்)

மருத்துவம்

மரபு சார்ந்த நோய்கள் (Hereditary Diseases) என்ற அபாய எச்சரிக்கைப் பட்டியலில் இப்போது சில வகைப் புற்றுநோய்களும் அழுத்தமாக இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இத்தனை நாட்களாக பரம்பரை நோய்களில் இவற்றைச் சேர்க்கலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால்... இப்போது ஒருவருக்கு மார்பகப் புற்று நோய் பாதிப்பு வந்திருந்தால், அடுத்த தலைமுறைக்கு வரும் வாய்ப்புகள் 30% உள்ளதாகவும், குடல்புற்று வாய்ப்பு 10 முதல் 20% உள்ளதாகவும் அதிர்ச்சித் தகவலை வெளியிடுகிறார் கீழ்ப்பாக்கத்திலுள்ள 'சென்னை கேன்சர் கேர்' மருத்துவமனை நிறுவனரும் புற்றுநோய் நிபுணருமான டாக்டர் அலெக்ஸ் ஏ.பிரசாத். இது குறித்து அவரிடம் பேசினோம்.

"முன்பெல்லாம் புற்றுநோயின் பரம்பரைத் தாக்கத்தைப் பற்றி யாரும் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. இப்போது தீவிரமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். பரம்பரையாக இந்நோய் வரக்கூடிய வாய்ப்புகளை ஆராய்ந்தபோது கணிசமான அளவில் நோய் வாய்ப்புகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தில் இருவருக்கோ, அதற்கு மேற்பட்டவர்களுக்கோ புற்றுநோய் வந்திருந்தால், அடுத்த தலைமுறைக்கு வரும் வாய்ப்புகள் அதிகம்.



• டாக்டர் அலெக்ஸ்

புற்றுநோய் தாக்கப்படும் பெரும்பாலானவர்களின் வயது முப்பதுக்கு மேல். ஆனால் இதற்குக் குறைவான வயதில் கேன்சர் வந்தால் பரம்பரை நோயாகும் வாய்ப்புகள் அதிகம். உடலில் ஜோடியாக உள்ள கண், காது போன்ற உறுப்புகளில் (paired organs) நோய்த் தாக்குதல் இருப்பினும் அடுத்த தலைமுறைக்கு வரும் சாத்தியம் உண்டு.

ஒரு நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் புற்றுநோய்த் தாக்கம் இருந்தாலும் பிரச்னைதான்."

புற்றுநோய் வந்த ஒருவருக்கு அசாதாரணமான ஜீன் (abnormal gene) கண்டுபிடிக்கப்பட்டால் - அக்குடும்பத்தில் வேறு யாருக்கேனும் அப்படி வழக்கத்துக்கு மாறான ஜீன் உள்ளதா என்று பார்க்க வேண்டும். இப்படித் தோன்றும் ஜீன் புற்றுநோய் வரும் வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடும். இந்தப் பரிசோதனை

புற்றுநோய்


முறையை 'Predictive Testing' என்று சொல்வார்கள். வலியில்லாமல் ஒரு மி.மீ. அளவுள்ள கேன்சர் இருந்தால்கூட இப்போதைய நவீன கருவிகள் மூலம் கண்டுபிடிக்க முடியும். கேன்சரே வராமல் தடுக்கவும் தற்காத்துக் கொள்ளவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்தச் சோதனைகள் உதவும்" என்று கூறும் டாக்டர் அலெக்ஸ், "புற்றுநோய் என்றாலே உயிர்க் கொல்லி நோய்; எந்த சிகிச்சையும் சொற்ப அளவே பயன் தரும். பக்க விளைவுகள் அதிகம் என்கிற பீதி தேவையற்றது" என்கிறார்.

"இப்போது இலக்குகளை மட்டும் தேடித் தாக்கும் ஏவுகணைகளைப்போல Targetted Therapy என்னும் சிகிச்சையில் புற்றுநோய் செல்கள் மட்டுமே அழிக்கப்படுகின்றன. பிற செல்கள் சேதம் அடையும் வாய்ப்பு இல்லை. ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால் நோய் தீர்க்கப்பட்டு பூரண நலத்துடன் வாழ முடி

யும்" என்கிறவர் புற்றுநோய் வரும்முன் காக்கவும் வழிமுறைகளைக் கூறுகிறார்.

"கேன்சருக்கென்று தனிப்பட்ட வாக்ஸின் எதுவும் இல்லை. இது 5 முதல் 10 சதவிகிதம் மரபின் காரணமாக வருகிறது. எனவே முன்பே சோதனைகளைச் செய்துகொள்வது நலம்.

Infection Related Cancer-ஆக இருந்தால் தடுப்பு மருந்துகள் வெற்றிபெறும். அதாவது முதலில் நோய்த் தொற்றாகத் தொடங்கி, கேன்சருக்குப் பாதை



இனி வெற்று நோய்!

போடும் தொற்றுகள். உதாரணமாக, மஞ்சள் காமாலை - ஹெப்படைடீஸ்-B டைப் வைரஸால் தாக்கப்பட்டால், அவர்களுக்குக் கல்லீரல் புற்று வரும் வாய்ப்பு மிக அதிகம். எனவே ஹெப்படைடீஸ்-B தடுப்பு மருந்து மூலம் புற்றுநோயும் தடுக்கப்படுகிறது. அதே போல HPV (Human Papilloma Virus)க்கான தடுப்பு மருந்து எடுத்துக் கொண்டால், கர்ப்பப்பை வாய்ப்புற்று வராமல் தடுக்கப்படும்.

Parasites-க்கான தடுப்பு மருந்து எடுத்துக்கொண்டால், சிறுநீர்ப்பை - பித்தப்பை தொடர்பான புற்றுநோய் வராமல் தடுக்க முடியும். இந்த வகையில் பாக்டீரியா வைரஸ் தொடர்பான தடுப்பு மருந்துகளால் பல புற்றுநோய்களைத் தடுக்க முடியும்.

"புற்றுநோய் உயிர்க்கொல்லி நோய் என்கிற நிலை மாறப்போகிறது."

தனிப்பட்ட ஒருவரின் ஜீனிலும் சோதனை செய்து, அதற்கேற்ப 'ஜீன் தெரபி' செய்யும் ஆய்வும் நடக்கிறது. விரைவில் இதுவும் சாத்தியப்பட உள்ளது. அந்த வெற்றியால் புற்றுநோய் ஓர் உயிர்க்கொல்லி நோய் என்கிற நிலை மாறி, புற்றுநோயும் ஒரு வெற்றுநோய் என்கிற துணிவுடன் எதிர்கொள்ளும் காலம் வரவிருக்கிறது" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் டாக்டர் அலெக்ஸ் பிரசாத்.

- ரேவதி

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

விழிப்புணர்வு

'புலி வருது; புலி வருது' என்று கடந்த சில ஆண்டுகளாக வணிகர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்த புலி வந்தே விட்டது. ஆம்! 2007, ஜனவரி ஒன்றாம் தேதியிலிருந்து தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax) அறிமுகமாகிறது என்று தமிழக அரசு அறிவித்துவிட்டது. இதனை வணிகர்கள் எதிர்க்கத் துவங்கிவிட்டனர்.

ஒரு மாநில அரசின் வருவாயின் பெரும்பகுதி விற்பனை வரி வசூலைப் பொருத்ததே! தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டங்களுக்கு வருவாய் தேவை என்ற நோக்கில் விற்பனை வரியை முதலில் அறிமுகப்படுத்தியவர் ராஜாஜி. ஆனால் காலப்போக்கில் விற்பனை வரியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக லஞ்சமும், சீர்கேடுகளும் தாண்டவமாடுகின்றன. இந்த நிலையில், நுகர்வோருக்கு அதிக வரிச்சுமை அழுத்தாத வகையில் பொருட்கள் கிடைக்கும் என்ற அடிப்படையிலும், அரசுக்கு வரி வசூல் இலகுவாக இருக்கவும் கொண்டுவரப் படுவதுதான் இந்த மதிப்புக் கூட்டு வரி.

மதிப்புக் கூட்டு வரி என்பது உற்பத்தி மற்றும் விநியோகத்தின்போது ஒவ்வொரு கட்டத்தில் அந்தப் பொருளின் மதிப்பு கூடும்போது, அந்த கூட்டப்பட்ட மதிப்புக்குப் போடும் வரியாகும். ஆனால் விற்பனை வரி மொத்த உற்பத்தி மதிப்பின் மீதோ, அல்லது விற்பனைத் தொகை மீதோ போடப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி எப்படி கணக்கிடப்படுகிறது? ஒரு மேசையின் விலை உற்பத்தியாளரிடம் ரூ.5000 என்றால், அதற்கு 12 சதம் வரி விதித்து மொத்த அல்லது சில்லறை விற்பனையாளரிடம் விற்கப்படுகிறது. வரியுடன் சேர்த்து 5600 ரூபாய்க்கு வாங்கும் விற்பனையாளர், போக்குவரத்து, லாபம் ஆகியவற்றைச் சேர்த்து மதிப்பை ஏற்றும்போது பொருளின் மதிப்பு 6000 ரூபாய். அதற்கு 12 சதம் வரி விதித்தால் 720 ரூபாய். ஆனால் ஏற்கெனவே அந்தப் பொருளுக்கு 600 ரூபாய் வரிகட்டிவிட்ட படியால், விற்பனையாளர் நுகர்வோரிடம் 120 ரூபாய் மட்டுமே வசூல் செய்து

வாட்டுமா




அரசிடம் செலுத்தினால் போதும். இப்போதிருக்கும் விற்பனை வரி முறையில் 5000 ரூபாய்க்கு 12 சதம், பின்னர் 6000 ரூபாய்க்கு 12 சதம் என்று இரண்டு முறை வரி வசூலிக்கிறார்கள். மதிப்புக் கூட்டு வரியில், இந்த இரட்டை வரி தவிர்க்கப்பட்டு, நுகர்வோருக்குப் பொருள் மலிவாகக் கிடைக்கும் வாய்ப்பு உண்டாகிறது. உற்பத்தியாளர் முதல், சில்லறை வியாபாரி வரை அவர் கட்டும் வரி மற்றும் மக்களிடம்

வாங்கிக் கட்டும் வரி ஆகியவை முறையாகக் கணக்கு வைக்கப்பட்டு, அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நபர் கணக்கில் பற்று வரவு வைத்துக் கொள்ளப்பட்டு வரும்.

இந்த வரியில் ஒரு சதம், நான்கு சதம் மற்றும் பன்னிரண்டரை சதம் வரி வசூல் செய்யப்படும். 250 பொருட்களுக்கு நான்கு சதம், 267 பொருட்களுக்குப் பன்னிரண்டரை சதம் மற்றும் நகைகளுக்கு ஒரு சதம் வரி. இந்த வரி விதிப்பு அமல் செய்யப்பட்டால், உற்பத்தியாளர், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர் யாரும் தங்கள் கொள் முதல் விற்பனை குறித்த முழு விரிவான பதிவேடுகளை வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வரி வசூலிக்கப்பட்ட விவரம் தெரிய வரும்.

கேடுகளை வளர்க்கும், பலமுனை வரி. சாதாரண சிறு வணிகர் கொள்முதல், விற்பனை பற்றிய நிலையான பதிவேடுகளை வைத்துக் கொள்வது நடைமுறையில் கடினம். இது மதிப்புக் கூடுதல் வரிதானே! சில சமயங்களில் போட்டி காரணமாக, லாபத்தைக் கூட



• வெள்ளையன்

வாட்?

மேற்சொன்ன உதாரணத்தின்படி பார்த்தால் கூட, 600 ரூபாய் வரியை விற்பனையாளர் கட்டியதற்கு அத்தாட்சி இருந்தால்தானே அவர் நுகர்வோரிடம் 120ஐ மட்டும் வசூல் செய்தது சரி என்றாகும். இந்த அளவு பக்காவாகக் கணக்கு வைத்துக் கொள்ள முடியாது என்கிறார்கள் சிறு வணிகர்கள்.

ஆனால் தற்போதுபோல இரட்டைக் கணக்கு வைத்து வசூல் செய்தும், வரியைக் கூட்டாமல் ஏய்க்கும் போக்கும், தடுக்கப்படும் என்பதால்தான் சில்லறை வணிகர்கள் எதிர்க்கிறார்கள் என்கிறார்கள் அதிகாரிகள்.

'வாட்'டை அமலாக்குவதன் மூலம் முதல் சில வருடங்களுக்கு ஏற்படும் மாநில அரசின் வருவாய் இழப்பு, மத்திய அரசால் ஈடு செய்யப்படும்.

"இப்போதிருக்கும் விற்பனை வரி முறையே சிறந்தது. இந்த வாட் முறை இழந்துவிட்டு, நஷ்டத்தில் விற்கும் நிலை வரும்போது, வரி எப்படி வசூலிக்க முடியும்? இதனால் நமது சில்லறை வணிகம் துவம்சம் செய்யப்படும்" என்கிறார் தமிழக வணிகர் பேரவையின் தலைவர் வெள்ளையன். 'பத்து லட்சம் வரை பற்று வரவு செய்யும் வணிகர்கள் இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறார்களே' என்றால், "இதை ஏற்றுக் கொண்டால் காலப்போக்கில் நசுக்கப்படுவோம்" என்கிறார்.

இந்த நிலையில் ஜனவரி ஒன்று முதல் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதில் உறுதியாக இருக்கிறார்கள் அதிகாரிகள். ஆனால் வாக்கு வங்கியும், அரசியல் சூழலும் கலைஞருக்குக் கிடுக்கிப்பிடி போடுகின்றன.

• ஸ்ரீநி

சிறுகதை

'கௌசிக்' ஸ்ரீநிவாசன்

சக்தி

ஆரோக்யா மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் அந்த வீட்டின் முன் வந்து நின்றது.

அந்த வீட்டின் தலைவரான கனகசபை மூச்சு பேச்சு இல்லாமல் படுத்திருக்க, வீடே கவலையில் மூழ்கியிருந்தது. அவரது மனைவி மரகதமும், கடைசி மகன் ஆகாஷும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர்.

"நல்லாத்தான் இருந்தாரு. என்ன ஆச்சுன்னே தெரியல! உங்க பெரிய அண்ணன் மனோஜுக்கும், சின்ன அண்ணன் பிரகாஷுக்கும் அவங்க மொபைல் போன்ல சொல்லிட்டேன்!" என்றாள் மரகதம் அழுதபடியே.

"சிவியர் ஹார்ட் அட்டாக்! கிரிட்டிகல் ஸ்டேஜ்லதான் கொண்டு வந்திருக்கீங்க! பணத்தைக் கவுன்ட்டரில் கட்டிட்டு, என் கேபினுக்கு வாங்க!" என்றார் கனகசபையைப் பரிசோதித்துப் பார்த்த அந்த மருத்துவமனையின் ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் மற்றும் சீஃப் டாக்டர் ஆனந்த் பத்மநாபன்.

இரவு ஒரு மணிக்கு மனோஜ் தன் குடும்பத்துடன் ஏர்போர்ட்டிலிருந்து கால் டாக்ஸி பிடித்து நேராக மருத்துவமனைக்கு வந்து சேர, சிறிது நேரத்தில் அவன் தம்பி பிரகாஷ், குடும்பத்தோடு வந்து சேர்ந்தான்.

"மூணு வருஷமா குலதெய்வக் கோயிலுக்குப் போகாததாலதான் இப்படியெல்லாம் ஆகுதுன்னு நெனக்கிறேன் அத்தை!" என்று மங்களத்தைப் பார்த்துக் கூறினாள் மனோஜின் மனைவி தாரா.

"ஆரம்பிச்சிட்டாங்க! இந்த ஏரியாவிலேயே மிகப்பெரிய ஆஸ்பத்திரி இது! எல்லா நவீன வசதிகளும் இங்கேயே இருக்கு! பெஸ்ட் டாக்டர்ஸ் இங்கே வராங்க! இப்பப் போய் குலதெய்வம், அது இதுன்னு பேத்திக்கிட்டு" என்று மனோஜ் பொரிந்து தள்ளிவிட்டு,

"நானும் அம்மாவும் இங்கே இருக்கோம். நீங்கள்லாம் வீட்டுக்குப் போங்க!" என்று மற்றவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

மறுநாள் மதியம்.

"அக்கா! மாமா இப்ப எப்படி இருக்கார்? காலையில அஞ்சு மணிக்கெல்லாம் ஊரைவிட்டுக் கிளம்பி நம்ம குலதெய்வக் கோயிலுக்குப் போய், தர்மகர்த்தாவைப் பார்த்துப் பூஜைகளுக்கு ஏற்பாடு பண்ணிட்டு நேரே இங்கேதான் வரேன்!" என்றபடியே உள்ளே வந்தார் மரகதத்தின் தம்பி கனகவேல்.

"போச்சுடா, நீங்களும் ஆரம்பிச்சுட்டீங்களா! நல்ல வேளை அப்பாவை ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணாம குலதெய்வக் கோயில்ல வச்சு மந்திரிச்சா போதாதான்னு கேக்காம விட்டீங்களே!" என்றான் மனோஜ் சலித்தபடியே.

சாயந்திரம் கனகசபை கண் திறந்துவிட்டார். "அப்பா கண்ணைத் திறந்து பார்க்கிறார். சீக்கிரம் வாங்க!" என்று ஓடி வந்து ஆகாஷ் கூற, உள்ளே சென்ற சீஃப் டாக்டர், கனகசபையைப் பரிசோதித்துவிட்டு, "அபாய கட்டத்தைத் தாண்டியாச்சு. இனிமேல பயப்படத் தேவையில்லை! எதுக்கும் டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் வந்தா என்ன சிகிச்சை பண்றதுன்னு முடிவு பண்ணுவோம்!"

இரவு எங்கோ சென்றுவிட்டு காரில் வந்து இறங்கிய சீஃப் டாக்டரைப் பார்த்து, "எங்கே போயிட்டீங்க, டாக்டர்? ரிசல்ட்டெல்லாம் வந்தாச்சு. உங்களைக் கேக்காம நாங்க எதுவுமே சொல்ல முடியாதுன்னு உதவி டாக்டர்கள் சொல்றாங்க!" என்றான் மனோஜ்.

இலேசாகப் புன்னகை செய்த டாக்டர். "சொல்றேன்! நீங்க உங்கப்பாவை நேத்து கொண்டு சேர்த்தபோது அவர் பிழைப்பார்னு எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை! அவ்வளவு மோசமான நிலை! இருந்தாலும் இந்தக் கேஸ் எனக்கு ஒரு பெரிய சேலஞ்சா இருந்தது. அதனால 'இந்தப் பேஷண்ட்டைக் காப்பாத்தி எனக்கு வெற்றியைக் கொடுப்பா! நான் உன் கோயிலுக்கு வந்து அர்ச்சனை பண்றேன்'னு திநகர்ல இருக்கிற வெங்கடாஜலபதிக்கு வேண்டிக்கிட்டேன்! உங்கப்பாவுக்கு இனிமே எந்த அபாயமும் இல்லேன்னு தெரிஞ்ச உடனேயே கோயிலுக்குப் போயிட்டு என் நன்றியைச் செலுத்திட்டு அர்ச்சனையும் பண்ணிட்டு வரேன்! எவ்வளவுதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும் நம்மையும் மீறின சக்தி ஒண்ணு இருக்குங்கிறதை நம்பறவன் நான். எங்களால முடிஞ்சதை நாங்க பண்றோம். அதுக்கு மேல, மேலே இருக்கிறவன்தான் பார்த்துக்கணும்..." சிலையாய் நின்றான் மனோஜ். ●




ராஜாஜி

அரசாங்கம்:

அரசாங்கம் இல்லாமல் ஜனங்கள் வாழ முடியாது. கலகம் கொள்ளை முதலியன நடவாமல் தேசத்தைச் சரியாகக் காக்க வேண்டும். ஜனங்களுக்குள் ஏற்படும் வழக்குகள் நியாயமாகத் தீர வேண்டும். பொது நன்மைக்காகச் செய்ய வேண்டிய பல காரியங்கள் உண்டு. அவற்றைத் தனியாட்களால் செய்ய முடியாது. எனவே அவற்றையெல்லாம் கவனிக்க அரசாங்கம் வேண்டும்.

அரசாங்கம் நல்ல முறையில் நடத்தப்படாவிட்டால் ஜனங்கள் கஷ்டப்படுவார்கள். குடிகளின் சம்மதத்தின் பேரில் நடக்கும் அரசாங்கமே அந்தக் காலத்துக்குத் தகும்.

எல்லோரும் சேர்ந்தாற்போல் கும்பலாக அதிகாரம் செலுத்த முடியாது. அதற்காகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் நல்ல வழியில் அரசாங்கம் நடக்கும்.



தேர்தல்கள்:

தேர்தலில் பணத்துக்கும் தாட்சண்ணியத்துக்கும் ஆதரவுச் சீட்டுப் போடக்கூடாது. யோக்கியமாக நடப்பவர்களுக்கே ஆதரவு கொடுக்க வேண்டும். யாரையாவது கண்டு பயந்தோ அல்லது லஞ்சம் பெற்றுக் கொண்டோ, அல்லது கண்ணை மூடிக்கொண்டு யோசனையில்லாமலோ, பெட்டியில் ஆதரவுச் சீட்டுப் போடுவது ஊரைக் கெடுத்த பாவமாகும்.

தேர்தலுக்கு முன் கூட்டங்கள்கூடி, விஷயங்களை ஆலோசித்து, தைரியமாகவும் நியாயமாகவும் ஆதரவுச் சீட்டுகள் போடும் வழக்கம் ஏற்பட்டால்தான் நாம் சரியான அரசாட்சி அடைவோம்.


சீட்டைப் பெற்று அரசாங்க சபைகளுக்குப் போகிறவர்கள் தைரியமாகவும், விவேகமாகவும், யோக்கியமாகவும் காரியங்களை நடத்த வேண்டும். மக்களின் பொது நன்மையையே எப்போதும் கவனித்து வர வேண்டும். சிலருடைய ஆதரவைப் பெறுவதற்குப் பலருக்கு நஷ்டம் உண்டாகும் காரியங்களை அவர்கள் செய்யக்கூடாது. துஷ்டர்களைக் கண்டு பயப்பட்டு, நியாயத்துக்கு விரோத

எது நல்ல அரசாங்கம்?

டிசம்பர் 25 ராஜாஜி நினைவு நாள்

மாக எதுவும் செய்யக்கூடாது.

உத்தியோகஸ்தர்கள்:



போலீஸ்காரர்கள் ஊருக்குக் காவல். பலசாலிகளும் மோசக்காரர்களும் மெலிந்தவர்களுக்குத் தொந்தரவும் நஷ்டமும் பயமும் உண்டாக்காமலிருக்க, போலீஸ்காரர்கள் அவசியம். ஊரில் சண்டை சச்சரவு இல்லாமல் இருக்க வேண்டுமானால் போலீஸ்காரர்களுக்கு எல்லோரும் உதவி செய்ய வேண்டும். குறைந்த சம்பளம் வாங்கினாலும் போலீஸ்காரர்கள் மிகவும் யோக்கியர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஊரிலுள்ள எல்லோரும் உதவி செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம், கல்வி, விவசாயம் முதலிய இலாகா உத்தியோகஸ்தர்கள் குடிகளின் நன்மைக்காக அமைக்கப்பட்டிருக்கிறார்கள். குடிகளின் ஒத்துழைப்பால்தான் இந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையைச் செய்ய முடியும். உத்தியோகஸ்தர்களிடம் குடிகள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள வேண்டும்; அவர்கள் சொல்லும் புத்திமதிகளைக் கேட்க வேண்டும்.

பொதுநலம்:

உண்மை பேசுவதும், பேசியபடி செய்வதும் வீரனுக்கு அடையாளம். எந்த மனிதனும் தனியாகச் சுகமடைய முடியாது. சமூகம் செழித்தால்தான் தன் குடும்பமும் செழிக்கும். ஆதலால் பிறர் சுகத்தையும் கவனித்து வாழ வேண்டும்.

ஊர் நன்றாக இருந்தால் எல்லோருக்கும் நல்லது. ஒவ்வொருவரும் குடும்பத்துக்கு உழைப்பதுபோல் ஊருக்கு உழைக்க வேண்டும். இதுவே நல்ல குடித்தனத்துக்கு அடையாளம். ஊருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே எல்லோரும் நடந்துகொள்ள வேண்டும்.

- 'ராஜாஜி கட்டுரைகள்'
நூலிலிருந்து வானதி பதிப்பகம்

புதுசு

துடிக்கும் உணர்வுகள்...

"இளைஞர்களைக் குறிவச்சு நான் படம் எடுக்கறேன்னு சொல்றாங்க. என்னால இதை ஒப்புக்க முடியல. நட்பு, காதல், தவிப்புக்கெல்லாம் வயசு தேவையில்ல. வாழ்க்கையோட ஆரம்பத்து லேர்ந்து முடிவு வரைக்கும் மனுஷனோட மனசுக்குள்ள துடிச்சுக்கிட்டிருக்கிற உணர்வுகள்தான் இவையெல்லாம். ஒவ்வொரு நாளும் ரியல் லைஃப்ல ஒவ்வொருத்தரும் அனுபவிக்கிற விஷயங்களைத்தான் நான் கதையாக்கறேன். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் எதுல ஒத்துப் போகுதோ இல்லையோ, காதல்ல ஒத்துப் போகும். இப்பக் கூட இதை அடிப்படையா வெச்சுத்தான் இப்ப 'உன்னாலே உன்னாலே' பண்றேன்" என்று பேசும்போதே இயக்குநர் ஜீவாவின் கண்களில் படம் விரிகிறது.

"உள்ளம் கேட்குமே பண்ணின பிறகு ஹிந்தி பக்கம் போயிட்டேன். தமிழ்ல வந்த 'ரன்' படத்தை, அபிஷேக்பச்சனை ஹீரோவா வெச்சு எடுத்து, சூப்பர்ஹிட்டாக்கினாங்க. அதுக்கு நான்தான் ஒளிப்பதிவு. மத்தவங்களுக்குத்தான் நான் ரொம்ப இடைவெளி எடுத்துக்கற மாதிரி தெரியும். ஆனா நான் எப்பவும் பிசியாத்தானிருக்கேன்"

எப்பவும் புது முகங்களே உங்க ஃபேவரிட்டா இருக்காங்களே?

"மத்தவங்க மாதிரி ஹீரோவுக்காக கதை பண்றவன் இல்ல நான். என்னோட கதைக்குத் தகுந்த நடிகர் வேணும்னு ரொம்ப மெனக்கெடுவேன். இந்தப் படத்துலகூட புதுப் பையன் வினய்யை அறிமுகப்படுத்தறேன். புது ஹீரோன்ற எந்தக் கவடும் இல்லாம, நான் என்ன நெனைக்கறேனோ அதை அப்படியே வெளிப்படுத்தறார். இதைத்தான் நான் என் ஹீரோக்கள்கிட்ட எப்பவும் எதிர்பார்க்கறேன்!"

ஒளிப்பதிவு, இயக்கம்னு மாறி மாறி பண்றது சிரமமா இல்லையா?

"எனக்கு ஒளிப்பதிவுதான் முக்கியம். ஆனா இயக்கத்தையும் நான் சாதாரணமா நினைக்கலை. இப்படி மாத்தி மாத்திப் பண்ணும்போதுதான் நான் சுதந்திரமா உணர்றேன். ஒரே மாதிரி செஞ்சிட்டிருந்தா சீக்கிரம் போரடிச்சிடும். ஒரு நாள்ல மூணு வேளை உணவுக்கே வெரைட்டி தேடறவங்க நாம... இது வாழ்க்கை இல்லையா!"

- வினோ



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.